[illegible]

[illegible] 22 [illegible] 2001

©

ளியீடு 4-12-2002

Issued 4-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 19, 2002 – தொகுதி 22 – எண் 2

**Friday the 19th April, 2002 – Volume 22 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

ரூ. 3.00]

[Price Rs. 3.00

**19-4-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| *1. வினாக்கள் - விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 293-330 |
| *2. தகவல் கோரல்—* | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 330-331,335 |
| (ஆ) திருமதி சோனியா காந்தி அவர்களை மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் இரகசியமாகச் சந்தித்ததாக வந்த தகவல் | 331-335 |
| (இ) கந்தக வாயு பரவியதால் கண்ணெரிச்சல் | 441-442, 447-448 |
| *3. கவன ஈர்ப்பு—* | |
| (அ) ஓட்டப்பிடாரம் தொகுதியில் இராட்சத துளைக் கிணறுகள் போடப்படுவதால் விளைநிலங்கள் பாதிப்பு | 335-337 |
| (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிருவாக ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியையும், பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரியையும் இணைத்தல் | 338-341 |
| *4. அறிக்கைகள் அளித்தல்—* | |
| பொது நிறுவனங்கள் குழு | 342 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—** | |
| (அ) கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை, முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு<br>(இ) கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு<br>(ஈ) கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 343-481 |
| மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் .. | 343,355, 364, 372-373 383,386, 388,389, 396,403, 406-407, 422, 448-463 |
| திரு. மு.பெ. சாமிநாதன் .. .. .. | 384-385, 386-393, 394-396 |
| திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன் .. | 392-394, 395,397, 398, 399-403 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 403-406, 407, 409-411 |
| திரு. கோ. இரவிராஜ் .. .. | 411-418 |
| திரு. போளூர் வரதன் .. .. | 419-425, 429 |


224312




| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு<br>(இ) கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு<br>(ஈ) கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 342-481 |
| திரு. மு. அப்பாவு .. .. | 430-437 |
| திரு. என். நன்மாறன் .. .. | 438-441 |
| திரு. வே. கிருஷ்ணமூர்த்தி .. .. | 442-447 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.** | 481-483 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 6, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033
### 2002 ஏப்ரல் 19, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

*செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீய வழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.*

### 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள். வினா எண் 170. திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**170—**

### சிறுபாசன ஏரி

**•11491—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சி, ஊத்துப்பள்ளம் என்ற இடத்தில் சிறுபாசன ஏரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபற்றி மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மனு கொடுத்திருந்தேன். அதற்கு பொதுப் பணித் துறையிலிருந்து எனக்குப் பதில் வந்திருக்கின்றது. அதில் இத்திட்டம் செயல்படுத்த ஏதுவாக உள்ளது என்றும், இதற்கு வனத் துறையின் ஒப்பிசைவும் பட்டாதாரர்களின் ஒப்புதலும் பெறவேண்டுமெனவும், அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டால் இத்திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும், பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இதனைச் சிறப்பு இனமாகக் கருதி, அரசு இந்த ஆண்டு இத்திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி தொகுதி, பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சியில், ஊத்துப்பள்ளம் என்ற இடத்தில் சிறு பாசன ஏரி அமைப்பதற்குண்டான இடம் தல அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. ஊத்துப்பள்ளம் பகுதியில் 4 தடுப்பணைகள் வனம் மற்றும் வேளாண்மைத் துறையால் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஊத்துப்பள்ளம் திட்டத் தலத்தில் வனத் துறையினரால் ஒரு தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. மேலும், ஊத்துப்பள்ளம் ஓடையின் மேல்புறம் 800 மீட்டர் தூரத்தில் வனத்துறையால் ஒரு தடுப்பணையும், பனமரத்துப்பள்ளம் ஓடையின் மேல்புறம் சுமார் 400 மீட்டர் தூரத்தில் வனத் துறையால் ஒரு தடுப்பணையும், ஏரி அமைக்க ஆய்வு செய்த இடத்தின் கீழ்ப்புறம் 400 மீட்டர் தூரத்தில் வேளாண்மைத் துறையால் ஒரு தடுப்பணையும் கட்டப்பட்டுள்ளன. இந்த இடத்தில் சிறுபாசன ஏரி அமைப்பதற்கான முக்கியத்துவத்தைப்பற்றியும் அவசர அவசியத்தைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள்.



மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வினை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 171, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**171—**

**படைப் பள்ளி**

***4104—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இந்நாள் இராணுவத்தினர் குடும்பம் அதிகம் வசித்து வருவதால் படைப் பள்ளி (சைனிக் பள்ளி) கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைனிக் பள்ளியைப்பற்றி எந்தக் கருத்துருவும் அரசிடம் நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழர் நலத்தினையே உயிர்மூச்சாய்க் கொண்ட அம்மா,
தீவிரவாதம் காணாமல் போய் இங்கு திருநாளாய் ஆனதம்மா,
தடம்புரண்டு பேசியவர்கள் தவிக்கிறார்கள் இன்று அம்மா,
தாயே உங்கள் நிழலே எங்கள் உயிர்மூச்சுககாற்றாய் ஆனதம்மா

என்று அம்மாவை வணங்கி, இந்திய ஜனாதிபதி அவர்களைத் தாளாளராகக் கொண்ட, இராணுவ தளபதிகள் அடங்கிய தேசிய பாதுகாப்புக் குழுவால் வரவேற்பு அளிக்கப் பட்டு உரையாற்றிய ஒரே முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். இந்தியாவில் வேறு எந்த

[2002 ஏப்ரல் 19

முதலமைச்சருக்கும் இந்தப் பெருமை இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே நினைவுகூர்ந்து இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். வேலூர் மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இன்றைய தேதியில் இராணுவத்தினராக உள்ளவர்களும் அதிகம் பேர் உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகள் தனியார் பள்ளிகளிலும், அரசு, நகராட்சி, ஊராட்சிப் பள்ளிகளிலும் படிக்கிறார்கள். மற்ற மாவட்டங்களைவிட வேலூர் மாவட்டத்தில் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகம். சோளிங்கர் அருகில் உள்ள எரும்பி என்ற கிராமத்தில் வீட்டுக்கு ஒருவர், இருவர் இராணுவத்தில் இருக்கிறார்கள். இராணுவத்தில் பயிற்சி பெற, Officer-களாக S.S.B. தேர்வு எழுத இந்த சைனிக் பள்ளிக்கூடங்கள் தேவைப்படுகின்றன. இப்பள்ளியில் பயிற்சிபெறும் மாணவர்கள் விரைவில் இராணுவத்தில் சேரமுடியும். இப்படிப்பட்ட தேர்வுக்குப் பயிற்சி தரும் பள்ளிக்கூடம் தனியார்களால் நடத்தப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் கூட தனியார் ஒருவர் நடத்துகிறார். அதில் விடுதியும் இருக்கிறது. ஆனால் வேலூர் மாவட்டத்தில் நாட்டுக்குச் சேவை செய்த இராணுவ வீரர்களுக்கு, அவர்களின் குடும்ப வாரிசுகள் நல்ல முறையில் படிக்க அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு சைனிக் பள்ளிக்கூடம் இல்லாததால் வேலூர் மாவட்டத்தில் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சைனிக் பள்ளி நிறுவ வேண்டுமென்றால், கோடிக்கணக்கில் பணம் தேவைப்படுகிறது. இருப்பினும், நம்முடைய மாநில அரசு, கோயம்புத்தூரில் நடைபெறும் சைனிக் கல்வி நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.63 இலட்சமும், அதன் கட்டடங்கள் பராமரிப்பிற்காக ரூ.14.56 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.77.56 இலட்சத்தை வழங்கி வருகிறது.

Recurring expenditure-க்காக இந்தமாதிரி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாநிலத்தில் ஒரு பள்ளிதான் செயல்பட்டு வருகிறது. வேலூர் மாவட்டத்தில் நிறைய இராணுவத்தினரும், இராணுவத்தில் பணியாற்றுகிற குடும்பத்தினர் பலபேரும் இருக்கிறார்கள்; முன்னாள் இராணுவத்தினரும் இருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களின் பிள்ளைகளுக்கு இத்தகைய கல்வி தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். கோயம்புத்தூர் பள்ளியில் அவர்கள் சென்று கல்வி பெறலாம். அங்கு அதைப் பெறுவதன் மூலமாக,



2002 ஏப்ரல் 19]

மாண்புமிகு உறுப்பினர் என்ன விரும்புகிறார்களோ, அதைப்போல அவர்கள் இராணுவத்தில் பணியாற்றலாம். நம்முடைய அரசு நடத்துகின்ற அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற அந்த மாணவர்களைக்கூட நன்றாகப் படிக்க வைத்து, அவர்களை இராணுவத் தேர்வு எழுதவைத்து, அதற்குப் பிறகு அனுப்பி வைக்கலாம். ஆகவே, அதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்காகத்தான் நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பகுதியிலே உள்ள பள்ளிகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து இவ்வாறு ஒவ்வொரு பள்ளியையும் சைனிக் பள்ளியாகச் செயல்படுத்துவதற்கு நாம் நினைத்தால் செயல்படுத்த முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவ்வாறு பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாக, அதுபோன்று தன் பகுதியிலுள்ள பள்ளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பள்ளிகளினுடைய தரத்தை மேம்படச் செய்து, மாணவர்களுக்கு நல்ல கல்வி தந்து, அதன்மூலமாக இராணுவத்திற்குச் சென்று பணியாற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புத் தருவதற்கு இதன்மூலம் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 173, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**173—**

## மகளிர் மேல்நிலைப் பள்ளி

***7611—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறநிலையத் துறை மூலமாக, திருப்பூர் நகரில், மகளிருக்கான மேல்நிலைப் பள்ளி கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியிலுள்ள 15-வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையம் அருள்மிகு ஊருடையம்மன் விநாயகர் மற்றும் மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக 10.40 ஏக்கர் நிலம் உள்ளது. அதற்கு அருகில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இடம் இல்லாமல், அருகில் இருக்கக்கூடிய சந்தையில், தென்னங்கீற்றால் கூரை வேய்ந்து, அங்கே பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைக்கண்டு, அப்பகுதியிலே உள்ள மக்கள், கொஞ்சம் தூரத்திலே இருந்த 10.40 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக வாங்கி, அதை அறநிலையத் துறைக்கு பரிவர்த்தனையாகக் கொடுத்து அந்த 10.40 ஏக்கர் நிலத்தை அந்தப் பள்ளிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். அதைப்போல, உருக்கம்பாளையம் ஊராட்சி, இடுவம்பாளையத்திலுள்ள இடும்ப குமாரசாமி ஆலயத்திற்கு சுமார் 20 ஏக்கர் நிலம் உள்ளது. அதன் அருகில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு இடவசதி இல்லை. எனவே, அப்பகுதியிலே இருக்கக்கூடிய பொது மக்கள் எல்லாம் அந்தப் பள்ளிக்கு 7 ஏக்கர் நிலத்தைத் தாருங்கள் என்று கேட்டு அதற்குரிய மதிப்புக்குண்டான தொகையைச் செலுத்துவதாக விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டு பள்ளிகளுக்கும், கோயில் நிலத்தை, ஒரு பள்ளிக்குப் பரிவர்த்தனையாகவும், ஒரு பள்ளிக்கு ரொக்கமாகவும் பணத்தைப் பெற்றுக் கொண்டு, வழங்க வேண்டுமென்று அம்மக்கள் கேட்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, அங்கே வருகை தந்தபோது, அந்தப் பள்ளியைப் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். எனவே, அரசுப் பள்ளிக்கு அந்த இடத்தைத் தர, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம், பின்னலாடைகளுக்குப் புகழ்பெற்ற இடமாக விளங்குகின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கை; திருப்பூர் தாலுக்கா, 15- வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையத்தில் ஊருடையம்மன் விநாயகர் மற்றும் மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் 40 சென்ட் இடம் உள்ளது. அந்த இடத்திற்கு அருகிலே உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அவர்கள் அந்த 10 ஏக்கர் 40 சென்ட் இடத்தை மாறுதல்



2002 ஏப்ரல் 19]

செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்திற்கும் இந்த இடத்திற்கும் சமமாக இருக்குமேயானால், இடத்தை அப்படியே கொடுப்பதற்கு அறநிலையத் துறை சம்மதிக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர்கள் கொடுக்கிற இடத்தினுடைய மதிப்புக் குறைவாகவும், அறநிலையத் துறைக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடத்தினுடைய மதிப்பு அதிகமாகவும் இருந்தால், அதற்குரிய தொகையை அந்த ஆலயத்திற்கு அவர்கள் தருவார்களேயானால், அந்த இடத்தை அந்த மக்களுடைய நன்மையைக் கருதி, கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்னொன்றும் கேட்டிருக்கிறார்கள். இடுவம் பாளையம் கிராமம்; அங்கே இருக்கிற குமாரசாமி ஆலயத்திற்குச் சொந்தமான 7 ஏக்கர் நிலம் இருக்கிறது; அந்த இடத்தையும் இந்து சமய அறநிலையத் துறை கொடுப்பதற்கு, அரசாங்கத்திற்கு வேண்டிய காரியங்களுக்காக, அதாவது பள்ளிக்கூடங்கள் கட்டுதல், தண்ணீர்த் தொட்டிகள் கட்டுதல் போன்ற பல்வேறு பணிகளுக்கு அறநிலையத் துறையினுடைய இடத்தைக் கொடுப்பதற்கு — முக்கியத்துவத்தைக் கருதி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில், அந்த 7 ஏக்கர் நிலத்தைப் பெற அவர்கள் அந்தத் தொகையை ஆலயத்திற்குச் செலுத்துவார்களேயானால், அதைக் கொடுப்பதற்கு அரசு--அறநிலையத் துறை - நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை ஒதுக்குவதாகத் தெரிவித்ததற்கு நன்றி. மதிப்பீட்டில் வித்தியாசம் வருகின்றபோது அதற்குரிய தொகையைச் செலுத்துவதற்கு பொதுமக்கள் சார்பாக வசூல் செய்து செலுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று தங்களிடத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். வரக்கூடிய கல்வி ஆண்டிலேயே பள்ளியை மாறுதல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தொழில் அதிபர்கள் நிறையப் பேர் இருக்கின்ற காரணத்தினாலே உடனடியாக அதற்குரிய தொகையைக் கட்டுவார்களேயானால், அந்த இடத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு

[2002 ஏப்ரல் 19

இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தையும் தெய்வமும் ஒன்று. அதனால் பள்ளி மாணவர்களுக்காக இடம் கொடுப்பதற்கு அறநிலையத் துறை பணம் கேட்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பள்ளி நடக்க பணம் வேண்டுமே?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்து எங்களுடைய பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பார்த்து அதன் ஆண்டு விழாவில் கலந்துகொண்டுள்ளார்கள். அதற்குரிய இடத்தை ஒரு தனியாரே சொந்தமாக வாங்கிக் கொடுத்து இருக்கிறார். ஆகையினால்--பரிவர்த்தனை செய்து, அந்த இடம் வேறு இடம் என்பதாலே, அந்தக் கோயிலுக்கு வரவேண்டிய வருவாயோ அல்லது விவசாயிகள் தரவேண்டிய குத்தகையோ தடைபடுவதில்லை; ஆகையினால்--பணம் கேட்காமல் பரிவர்த்தனை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தினை தனியார் உழுதுகொண்டு அதற்குக் குத்தகை கொடுக்காமல், வெறும் போர்டிலே இவ்வளவு பாக்கி, இவ்வளவு பேர் கொடுக்க வேண்டுமென்று எழுதி வைத்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் உடனடியாக வசூல் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களேயானால், உடனடியாகக் கொடுப்பதற்கு சிந்திக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கோயில் நிலங்களுக்குரிய குத்தகையை வசூல் பண்ண முடியாத நிலையிலே, அந்த நிலங்களை எல்லாம் உழுது கொண்டிருப்பவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலுக்கு வருமானம் வருகின்ற வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த இடத்தை ஒதுக்கித் தந்தால், அதற்குரிய பணத்தை மாவட்ட நிர்வாகமோ அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற நிதியிலிருந்து வழங்குவதற்கு முன்வருகிற ஒரு நிலை இருக்கும்போது அந்த நிலத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுகின்ற



2002 ஏப்ரல் 19]

திட்டத்திற்காக வழங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான இடத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்தினை ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக அவர்கள் பணம் கட்டி, பல்வேறு இடங்களிலே அப்படிப்பட்ட இடங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது யார் யார் உழுது கொண்டிருக்கிறார்களோ, அந்த இடத்தை எடுத்துக் கொடுப்பதற்கு அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களேயானால், அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அரசு சிந்திக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 174, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**174—**

### பாட்டில் குடிதண்ணீர்

***5793—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாட்டில் குடிதண்ணீர் கலப்படம் செய்து விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு இடங்களில் பாட்டில் குடிதண்ணீரைக் கலப்படம் செய்து விற்கிறார்கள். இதனால் குடிதண்ணீர் குடித்தவுடன் உடல்நிலை சீர்கெட்டுவிடுகிறது; உடல்நிலை

[2002 ஏப்ரல் 19

குடிதண்ணீர் குடித்தவுடன் உடல்நிலை சீர்கெட்டுவிடுகிறது; உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. இதனால் மக்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் நான் அறிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், பாட்டில் குடிதண்ணீர் விற்பனையை அரசே ஏற்று நடத்தினால் அரசுக்கு வருமானமும் கிடைக்கும்; வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல சில நிறுவனத்தார், அதாவது பாட்டில் மற்றும் பையில் அடைக்கப்பட்ட Packaged Drinking Water என்ற பெயரில் சுத்தம் இல்லாத தண்ணீரை வியாபார நோக்கத்தோடு, இலாப நோக்கத்தோடு தயாரித்து விற்று வருகிறார்கள். அதுகுறித்து Prevention of Food Adulteration Act-ன் கீழ்தான் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசு இதுபோன்ற mineral water, packaged drinking water ஆகியவற்றை உணவு என்று அறிவித்து அதற்குத் தரத்தையும் நிர்ணயித்து இருக்கிறது. குறிப்பாக மத்திய அரசு இதுபோன்ற வாட்டர் பாக்கெட்டுகளுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்றுத்தான் விற்பனைக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு நிபந்தனையையும் விதித்து அரசாணையாகவும் வெளியிட்டு இருக்கிறது. எனவே, ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்றுத்தான் விற்பனைக்கு அனுப்ப வேண்டும். அப்படி ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாமல் விற்பனைக்கு வருமேயானால் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இருந்தாலும் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருந்து எச்சரிக்கையாக இருந்து அதுபோன்ற குடிதண்ணீர் பாட்டில்களையோ அல்லது packaged drinking water-ஐயோ வாங்காமல் தவிர்ப்பது நல்லது.

முற்பகல் 10.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாமல் விற்கப்படுகிற மினரல் வாட்டர் தயாரிப்பாளர்களின்மீது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நுகர்வோர்தானே எடுக்க வேண்டும்?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையே நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்கெனவே நான் சொன்னதைப்போல Prevention of Food Adulteration Act-லே இதைக் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்து, sample-ஐ அதாவது மாதிரியை பரிசோதனைக்கு அனுப்பி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்திலே வழிமுறை இருக்கிறது. இப்போதுகூட இந்த ஆண்டு மொத்தம் 22 மாதிரிகள் எடுக்கப்பட்டு அதிலே இரண்டு mis-branded என்று கண்டறியப்பட்டுள்ளன. ஒன்று, திரிவேணி மினரல் வாட்டர்; இன்னொன்று Komersin Triple sterilised mineral water. ஆக இந்த இரண்டு நிறுவனங்கள்மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைகாலம் நெருங்கிவிட்டதால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெருங்கி விட்டதாலா? வந்துவிட்டது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** வந்துவிட்டது. இன்னும் அக்னி நட்சத்திரம் தொடங்கவில்லை. அதற்காகச் சொன்னேன். நெருங்கிவிட்டதால் புற்றீசல்களைப்போல ஆங்காங்கே இப்போது இந்தத் தண்ணீர் பாக்கெட்களும், சுகாதாரமற்ற முறையில் தண்ணீர் பாட்டில்களும் விற்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இப்படி விற்கப்படுகிற இந்தத் தண்ணீரில் குறிப்பிட்ட அளவு படிகாரத்தைத் தெளித்தவுடன் அது வெள்ளை வெளேரென்று ஒரு நிலைக்கு வந்துவிடுகிறது. அந்தத் தண்ணீரை விற்பவர்கள் கொள்ளை இலாபத்தை அடைகிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் கூடிய குடிதண்ணீர் பாட்டில்கள்தான் விற்கப்பட வேண்டும் என்றவொரு தீர்ப்பு சமீபத்தில் உயர் நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இப்படிப் போலித்தனமாகத் தண்ணீர் பாக்கெட்டுகளை விற்பவர்களைக் கண்காணிப்பதற்காக தனியாக ஒரு கண்காணிப்புக் குழுவினை அரசு ஏற்படுத்துமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலச் சுத்தம் இல்லாத, சுகாதாரமற்ற இதுபோன்ற குடிதண்ணீரைப் பருகுவதால், water-borne diseases, உதாரணமாக மஞ்சள் காமாலை, வயிற்றுப் போக்கு, viral fever போன்ற நோய்கள் வருகின்றன. எனவேதான் சுத்தமான குடிதண்ணீரை அருந்த வேண்டுமென்று அரசு பொது மக்களுக்கு அறிவுறுத்தி வருகிறது. அதனால்தான் காய்ச்சிய குடிநீரைக்கூட உட்கொள்ள வேண்டுமென்று நாங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் சிலபேர் இலாப நோக்கத்தோடு இதுபோன்ற சுத்தம் இல்லாத, சுகாதாரமற்ற குடிதண்ணீரை பாக்கெட் செய்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அரசாணையும் இதுகுறித்துத் தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலச் சென்ற வாரம் உயர் நீதிமன்றமும் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. ஐ.எஸ்.ஐ. முத்திரையில்லாத இதுபோன்ற குடிதண்ணீர் பாக்கெட்டுகளை விற்பனை செய்யக்கூடாது என்று. எனவே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல பொது மக்கள் இதிலே எச்சரிக்கையாக இருந்து ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத இதுபோன்ற குடிதண்ணீர் பாக்கெட்டுகளை வாங்கி உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எங்களுடைய சுகாதாரத் துறையும், உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற Sanitary Inspectors அவர்கள் எல்லாம் இதுகுறித்துக் கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் பொது மக்கள் இதிலே விழிப்போடு இருந்து இதுபோன்ற போலியான குடிதண்ணீர் பாக்கெட்டுகளை அல்லது பாட்டில்களை வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு வருகிறார்கள். அவர்களுடைய மாடுகளிலிருந்து கிடைக்ககூடிய ஒரு லிட்டர் பாலை 7 ரூபாய் 45 பைசாவிற்குக் கொள்முதல் செய்கிறோம். சுத்தமில்லாத தண்ணீரால் பல்வேறு நோய்கள் வருவதாக அமைச்சர் அவர்களே சொன்னார்கள். மஞ்சள் காமாலை, காலரா போன்ற நோய்களை உற்பத்தி செய்யக்கூடிய அந்தக் குடிதண்ணீர் பல்வேறு இடங்களிலே விற்கப்படுவதை இப்போது போனால்கூடப் பார்க்கலாம். பஸ் ஸ்டாண்டுகளிலே, பல்வேறு இடங்களிலே சட்டத்துக்குப் புறம்பாக



2002 ஏப்ரல் 19]

விற்கப்படுகிறது. அப்படி விற்றுக்கொண்டு இருப்பவர்கள்மீது இந்த அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன? இனிமேல் உடனடியாக நடவடிக்கை எடுத்து சுத்தமான நீரைக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப உருக்கமாக இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத்தான் இதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. எனவே இவையெல்லாம் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படுகின்றன. இதெல்லாம் நான் ஏற்கெனவே சொன்னதுபோலச் சில பேர் வியாபார நோக்கத்தோடு, இலாப நோக்கத்தோடு, பணம் சம்பாதிப்பதற்காக இப்படித் தவறான வழிகளில் சென்று கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் நாங்களும், உள்ளாட்சி அமைப்புகளும் எங்கள் துறைகளிலே இருக்கிற Sanitary Inspectors, Health Inspectors மூலமாக இதுகுறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். எனவே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு நம் வீட்டில் உள்ள குடிதண்ணீரைக் காய்ச்சிப் பருகினாலே போதும். எனவே அந்த வகையிலே நாம் வெளி ஊருக்குப் பயணம் செய்கிறோம் என்று சொன்னால் நாமே, வீட்டில் இருந்து காய்ச்சிய தண்ணீரை ஒரு பாட்டிலில் எடுத்துக்கொண்டு சென்றால் பிரச்சினை தீர்ந்து விடுகிறது. இது, ஒரு சுலபமான வழி. எனவே நாம்தான் விழிப்போடு இருக்கவேண்டும். அடிக்கடி சொல்வதைப் போல, ஏமாற்றுபவர்களும் இருக்கிறார்கள்; ஏமாறுபவர்களும் இருக்கிறார்கள். எனவே நாம் ஏமாறாமல் இருந்து விடுவது நல்லது. இது போன்ற நிலையிலே நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, நாம் தான் இது போன்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகம் முழுவதும் மட்டுமின்றி இந்தியா முழுவதும் தரமற்ற முறையிலே பாக்கெட்டுகளிலும், பாட்டில்களிலும், தண்ணீர் நிரப்பிக் கொள்ளை இலாபம் அடித்துக் கூடுதல் விலையிலே விற்பனை செய்கின்ற

தண்ணீரை, பாட்டில்களிலும், பாக்கெட்டுகளிலும் விற்கப்படுகின்ற அந்தக் குடிதண்ணீரை நியாயமான விலையிலே, நியாயமான முறையிலே விற்பதற்கு உண்டான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விலைக்கு வேண்டும்?

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு லிட்டர் பாலும் 10 ரூபாய்க்குக் கிடைக்கிறது. அதுபோல இப்போது ஒரு லிட்டர் தண்ணீரும் 10 ரூபாய்க்குக் கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலை வாங்கிச் சாப்பிடுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** குடித்தண்ணீரை அதிக விலைக்கு விற்று அதன் மூலம் கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருக்கின்ற, உற்பத்தி செய்பவர்கள் மீது அரசு கடுமையான சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்து கூடுதலான விலைக்கு விற்கப்படுவதைக் குறைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும், கூடுதலாக விற்கப்படுகின்ற விலை எந்த அளவுகோல் மூலமாக நிர்ணயிக்கப்பட்டு அந்த விலைக்கு விற்கப்படுகிறது என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்களும் சொன்னதைப் போல ஒரு லிட்டர் பால் விலை அளவுக்கு ஒரு லிட்டர் குடிதண்ணீர் விற்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் அதைவிடக் கூடுதலாக விற்கப்படுகிறது. உள்ளபடியே உறுப்பினர் யோசனை நல்ல யோசனை. அதைப்போன்ற பாதுகாப்பு உள்ள இந்தக் குடிதண்ணீர் விலையை நிர்ணயம் செய்வதற்கு வேண்டுமானால் மினரல் வாட்டர் தயாரிக்கின்ற நிறுவனங்களுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கலாம். நல்ல யோசனை. அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினை நகரத்தில் மிகவும் சிக்கலான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. வெயிலின் கொடுமை, தாகம், நாக்கு வறண்ட நேரத்தில் அவர்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரைகளைப் பார்ப்பதற்கு நேரம் கிடையாது. உடனடியாகத் தண்ணீர் குடிக்க வேண்டும்



என்ற உணர்வுதான் மனித மனத்திற்கு ஏற்படுகின்றது. இந்த நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பான் பராக் போன்ற தடை செய்யப்பட்ட பொருள்களை விற்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவற்றை seize செய்தது போல, ஜப்தி செய்தது போல, ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத தவறான குடிநீர் பாக்கெட்டுகளை, அல்லது பாட்டில்களை அரசு உடனடியாகக் கைப்பற்றி அவர்கள் மேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எங்களுடைய துறையைச் சார்ந்த அதிகாரிகளும், நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற—Corporation Municipality பேரூராட்சி போன்ற அமைப்புகளிலே இருக்கின்ற—சுகாதார ஆய்வாளர்களும், இந்தக் குடிதண்ணீரைத் தயாரிக்கிற நிறுவனங்களுக்குச் சென்று raid செய்து தான் அந்த மாதிரிகளை எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்புகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் சொல்வது நல்ல யோசனை. வேண்டுமானால் எங்களுடைய துறையைச் சார்ந்த அதிகாரிகளை அனுப்பி ஒரு massive raid செய்து, இதுபோன்ற பாதுகாப்பற்ற குடிதண்ணீர் விற்பவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து, அவர்களிடம் ஒரு பயத்தை ஏற்படுத்தி, இதுபோன்ற தொழிலைத் தொடர்ந்து செய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். நல்ல யோசனை. பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி தேவை என்பதை அதிகமாக வலியுறுத்துகிறார்கள். ஏற்கெனவே மத்திய அரசினுடைய அரசாணை இருந்தும், சென்னை உயர் நீதிமன்றம் இதற்கான தடையாணையைப் பிறப்பித்திருந்தும்கூட, இதுவரை அரசு போட்டிருக்கக்கூடிய வழக்குகள் 27 மட்டுமே. நாம் இந்தக் கோட்டையை வலம் வந்தாலே 100 பேர்களுக்கு மேலே வழக்குப் போடலாம். தமிழகம் முழுமையிலும் எடுத்துக்கொண்டால், பல்வேறு கடைக்காரர்கள், அதேபோல் நேற்றுப் பெய்த மழையிலே இன்று முளைத்த காளான்களைப் போல, எக்கச்சக்கமாக இதுபோன்ற பாக்கெட்டுகளிலே குடிநீரை வழங்கக்கூடிய

நிறுவனங்கள் நிறைய முளைத்திருக்கின்றன. அமைச்சருடைய Control-லில் கூட முழுமையாக எல்லா Food Inspectors-ம் கிடையாது. 30,40 கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு Sanitary Inspector, Primary Health Centre-ல் இருப்பார். அதேபோல, உள்ளாட்சி அமைச்சரிடம் நகராட்சியிலே Food Inspectors இருக்கிறார்கள். 4,5 பேரூராட்சிகளுக்குச் சேர்த்து ஒரு Food Inspector இப்போது இருக்கிறார். இந்த Food Inspectors, Sanitary Inspectors-களை மட்டுமே வைத்து, இந்த raid-ஐ நிச்சயமாக உங்களாலே நடத்த முடியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு காவல் துறையோடு இணைந்து—இதற்காகத்தான் ஏற்கெனவே ஒரு சட்டத்தைகூட, பிளாஸ்டிக் பான் பராக் இவற்றிற்கெல்லாம்கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து. முடித்து விடுகிறேன். உயர் நீதிமன்றம் தடையாணை பிறப்பித்திருந்தும்கூட, இன்று எல்லா இடங்களிலும் தமிழகத்திலே இதுபோன்று I.S.I. முத்திரை இல்லாத நிறைய பாக்கெட் தண்ணீர் விற்கப்படுகின்றனவே, அதைத் தடுப்பதற்கு அமைச்சர் மக்களுக்கு விழிப்புணர்ச்சி வேண்டும் என்று சொல்வதை விட்டுவிட்டு, அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைச் சொல்லவேண்டும். ஏனென்றால், ஞானசேகரன் வேண்டுமானால் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது பற்றிப் பேசலாம். அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை போடுவது, உயர் நீதிமன்றம் தடையாணை விதிப்பது எல்லாம் இதுபோன்று தவறு செய்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுப்பதற்காகத்தான். இருந்தாலும், அதையும் மீறிச் சில பேர் இதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல், எங்களிடம் இருக்கிற சுகாதார ஆய்வாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கிற Sanitary Inspectors, இந்த அதிகாரிகளை வைத்து, முழுமையாக இதைத்





தடுக்க முடியாதுதான். இருந்தாலும் இதுகுறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து, ஏதாவது ஒரு கட்டுப்பாட்டிற்குள் இதைக் கொண்டுவந்து, கட்டுப்படுத்துவதற்கு, நல்ல முயற்சிகளை இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**175—**

### கூடுதல் கட்டடம்

***6498—திரு. வெ. கோவிந்தராஜ்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

*(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவிற்குக் கூடுதல் படுக்கை அறைகள் கொண்ட கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே பல்வேறு சாதனைகளைப் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்களுடைய அரசு மகளிருக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை, மகப்பேறு பிரிவு 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருந்து கொண்டிருக்கின்றது. ஒரு நாளைக்குக் குறைந்தது 15 லிருந்து 20 பேர்கள்வரை தாய்மார்கள் அங்கே பிரசவத்திற்கு வருகின்ற நிலை உள்ளது. ஒரு மாதத்திற்கு 400-லிருந்து 500 பேர்களுக்கு அங்கே பிரசவம் பார்க்கின்ற நிலையிலே

[2002 ஏப்ரல் 19

இருந்து கொண்டிருக்கிற மருத்துவமனை அது. எதிலும் புரட்சி செய்யும் அம்மா அவர்களுடைய அரசு, 60 ஆண்டு காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட கட்டடத்திலேயே 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அது இயங்கி வரும் நிலையை மாற்றி, 60 படுக்கைகள் கொண்ட பிரசவ வார்டாகத் தரம் உயர்த்தி, புதிய கட்டடத்தைக் கட்ட இந்த ஆண்டு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையிலே ஒரு நாளைக்கு உள் நோயாளிகள் 250 லிருந்து 300 வரையிலும்............

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் இந்தக் கேள்வியைக் கேளுங்கள். அமைச்சரைத் திணற வைக்காதீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல மகப்பேறு பிரிவிலே 12 படுக்கைகள் தற்போது இருக்கின்றன. அதைப்போல, பேறுகாலபின் கவனிப்புப் பிரிவிலே 43 படுக்கைகள் இருக்கின்றன மாதம் 120 பிரசவங்கள் அங்கே நடைபெறுகின்றன. அதேபோல குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் மாதம் 240 நடைபெறுகின்றன. எனவே இந்தவகையிலே இன்னும் கொஞ்சம் கூடுதலான படுக்கைகள் தேவையென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. ஒட்டுமொத்தமான படுக்கைகளின் எண்ணிக்கை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை 193 தான். ஆனால் உள் நோயாளிகள் 220 என்கிற அளவுக்கு தினமும் சிகிச்சை பெறுகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க 50 படுக்கைகள் அங்கே கூடுதலாகக் கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. தேவையும் இருக்கிறது. எனவே அந்த வகையிலே நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டில் அதற்கான முயற்சிகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தராஜ், அடுத்த கேள்வியைக் கேட்கவும்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு அரசு மருத்துவமனையிலே உள் நோயாளிகளாக 250 லிருந்து 300 வரையிலேயும், வெளி நோயாளிகளாக 1250-லிருந்து 1500



2002 ஏப்ரல் 19]

வரையிலும் சிகிச்சை பெறுகிற மருத்துவமனையாக இருந்து கொண்டிருக்கிற இந்த நிலையில் உள் நோயாளிகளுக்கான 193 படுக்கைகள் மட்டுமே கொண்ட மருத்துவமனையாக இது இருந்து கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு பர்கூர், காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து கிருஷ்ணகிரிக்கு வருகிற நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், இங்கு கூடுதல் படுக்கைகளுக்கான கட்டடங்களையும், படுக்கைகளையும் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்தில் அந்த அரசு மருத்துவமனையிலே M.D. மருத்துவர் இல்லை; கண் மருத்துவர் இல்லை. அங்கே M.S. D.G.O. மருத்துவர், கூடுதலாக மயக்க டாக்டர் தேவைப்படுகிற நிலையை அறிந்து அம்மா அவர்களுடைய அரசு நியமிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் தற்போது 21 டாக்டர்கள் பணியில் இருக்கிறார்கள். அதிலே 6 பெண் டாக்டர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒருவர் தற்போது மாறுதல் பெற்றுச் சென்றிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல கண் சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு டாக்டர் இல்லாத நிலைமை அங்கே இருக்கிறது. அதைப் போல M.D. General Medicine-க்கு ஒரு டாக்டர் இல்லை. இந்த இரண்டு இடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**176—**

**பேருந்து நிலையம்**

**•1491—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, திருத்தங்கல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சிவகாசி தொகுதி, திருத்தங்கல் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரிலிருந்து சிவகாசிக்குச் செல்கிற பாதையில் சிவகாசிக்கு அருகே 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் மக்கள் வரை வாழக்கூடிய பெரிய ஊராட்சியாக திருத்தங்கல் இருக்கிறது. காவிரி பெருக்கெடுத்தால், கொள்ளுமிடம் கொள்ளிடம் என்பார்கள். சிவகாசி ஒரு குட்டி ஜப்பான் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். அது நாளுக்கு நாள் வளர்ந்து வரக்கூடிய நகரமாக இருக்கின்ற காரணத்தால், அதிகப்படியான தொழில் வளர்ந்து வரக்கூடிய காலகட்டத்தில் அதைத் தாங்கக்கூடிய இடமாக திருத்தங்கல் இப்போது இருக்கிறது. விருதுநகரிலிருந்து தெற்கே சிவகாசிக்குச் சென்றாலும், சிவகாசியிலிருந்து வடக்கே விருதுநகர், மதுரைக்கு வருவதாக இருந்தாலும், எந்தப் பேருந்து வாகனமாக இருந்தாலும் சிவகாசியிலே குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இறங்கி, ஏறி, பயன்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்தப் பாதையும் மிகக் குறுகலாக 20, 22 அடிக்குள்ளாக இருக்கிற காரணத்தால், ரோட்டில் இருக்கிற வியாபாரிகளுக்கும் தடை ஏற்படுகிறது; போக்குவரத்துக்கும் தடை ஏற்படுகிறது. பல ஆயிரம் மக்கள் இப்போது பயன்படுத்தக்கூடிய இடத்தில், அதிலும் குறிப்பாகத் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும், அங்கிருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலை மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில் வாயிலாக பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது என்ற குறிப்புகளும் அழுத்தமாக இருக்கிற இந்த காலகட்டத்தில் அந்த மக்கள் முறையாகப் பயன்படுத்த, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், வியாபாரத்திற்கும் தடையில்லாமல், வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய ஏராளமான வாகனங்கள் இந்த சிவகாசிக்கு தீப்பெட்டித் தொழில் சம்பந்தப்பட்ட தொடர்பிலே நிறைய வந்து போய்க் கொண்டிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு பேருந்து நிலையம் இப்போது அவசியமாக அங்கே தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியப்படுத்தி, விரைவில் அதை ஏற்படுத்தினால் அங்கே வரக்கூடிய அனைத்துத் தரப்பைச் சார்ந்த மக்களுக்கும் அது



2002 ஏப்ரல் 19]

பயனுள்ளதாக இருக்கும். அந்த ஊர் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்தி, பேரவைத் தலைவர் வாயிலாக அது அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.35)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்கள் இருக்கையிலிருந்து பேசவேண்டுமா, எந்த இருக்கையிலிருந்து வேண்டுமானாலும் பேசலாமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே. (குறுக்கீடு) உங்கள் இருக்கை எண் என்ன?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தாமோதரன் அவர்கள் கேட்ட கேள்வி. (சிரிப்பு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், கேள்வி கேட்டவர் வரவில்லையென்றால் அவர் இருக்கைக்கே போகக்கூடாது. (சிரிப்பு) நீங்கள் விருதுநகர் தொகுதி எம்.எல்.ஏ. ஆகவே ஆகிவிடுவீர்கள் போல் இருக்கிறதே. உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இல்லை, நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, திருத்தங்கலிலே பஸ் ஸ்டாண்டு ரொம்ப அவசியம். நானும் திரு. ஹக்கீம் சொன்னதை வழிமொழிகிறேன். ஹக்கீம், உங்கள் இடத்திற்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் திருத்தங்கல், சிவகாசி, விருதுநகர் போன்ற பகுதிகளின் சிறப்பைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். தாங்களும் அந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே பிரபல தொழிற்சாலைகள், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பல்வேறு பொருட்களைத்

[2002 ஏப்ரல் 19

தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் அமைந்துள்ளன என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப் பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே குறைந்த விலைக்கு அரசு மதிப்பிலான விலைக்கு. பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும். இடத்தை வாங்கிக் கொடுத்தால் நிச்சயமாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம். இடத்தை வாங்கிக் கொடுக்க முயற்சி பண்ணுவோம். அதற்குள்ளே நீங்கள் இடத்தை அபகரித்து விடாதீர்கள். (சிரிப்பு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இல்லை, இல்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177. திரு. அ.இரா. மலையப்பசாமி மற்றும் செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

**177—**

**பணியிடங்கள் நிரப்புதல்**

**•9634—திரு. அ. இரா. மலையப்பசாமி:**
**செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் சுமார் 300 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது நிரப்பப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ): ஆம். வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் 418-ம், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) பணியிடங்கள் 70-ம் காலியாகவுள்ளன.



2002 ஏப்ரல் 19]

(ஆ) பணியாளர்களைப் பணி நியமனம் செய்யத் தடை இருப்பதால் தற்போது காலிப் பணியிடங்களை நிரப்ப இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலே சுமார் 7000 விவசாயப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர். வேளாண்மைப் பட்டதாரிகளை உருவாக்க நமது அரசு அதிகப்படியான தொகையினைச் செலவு செய்து வருகிறது. ஆகவே தமிழ்நாடு அரசு முக்கிய திட்டமாகச் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளை நியமித்து வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும், ஒரே வேளாண்மை அதிகாரி இரண்டு அல்லது மூன்று பணியிடங்களில் பணி செய்வதால் முழுமையாகப் பணியாற்ற இயலவில்லை என்றும், ஆகவே காலியாக உள்ள பணியிடங்களில் புதிதாக வேளாண்மைப் பட்டதாரிகளை நியமிக்கக் கேட்டுக்கொள்வதுடன் 28 ஆண்டுகளாகப் பதவி உயர்வு இல்லாமல் உள்ள வேளாண்மை அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் திட்டமான தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத் திட்டத்தில், வேளாண்மைக் கல்லூரிகளில் தோட்டக்கலைத் துறையில் பட்டம் பெற்று பல ஆண்டுகளாக வேலையில்லாமல் உள்ள தோட்டக்கலைப் பட்டதாரிகளை நியமிக்க அரசு..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி, தோட்டக்கலை, தனிக் கேள்வி போடுங்கள். இந்த இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். அமைச்சர்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விரிவாக்க அலுவலர், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) பணியிடங்களுக்குத் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு நடத்தி நியமனம் செய்யப்படுகின்றன. 10 பணியிடங்கள் காலியாக இருந்தால் 9 பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமும் ஒரு பணியிடம்

பதவியில் இருப்பவர்கள் ஓய்வுபெறும் நிரப்பப்படுகின்றன. எதிர்பார்க்கிற காலியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு நடத்தப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு வேளாண்மை விரிவாக்க அலுவலர் 56-இடங்கள், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) 31 இடங்கள், 1998-99 ஆம் ஆண்டு வேளாண் அலுவலர்கள் 32 இடங்கள் ஆக 119 இடங்கள் காலியாக இருந்தன. அந்த இடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் -T.N.P.S.C. மூலமாகத் தேர்வுகள் நடைபெற்று தற்போது 119 வேளாண்மை அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி செலுத்தி, தேனை, என் உயிரினை, செயலினை, மூச்சினை உவகளித்தேனே.

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'

என்றும்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.'

என்றும் வள்ளுவன் சொல்லியிருக்கிறார். கடந்த கால ஆட்சியிலே கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே உயிரை மாய்த்துக் கொண்ட சிறு, குறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மனிதப் புனிதவதி, மக்கள் போற்றும் மாபெரும் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 311 கோடி ரூபாயைத் தந்து அவர்கள் வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்துவிட்டார்கள். அதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியை, வேளாண்மைத் துறையிலே உலக அளவிலே அதிக பட்டங்கள் பெற்ற அத்தகைய ஒரு விஞ்ஞானியை தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ஏக்கர் நிலம் — The Waste Land Development Scheme-க்குத் தலைமையாகப்போட்டு அமர்த்தியுள்ளார்கள் என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே சுமார் 300 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பதை எனக்கு மகஜர் மூலமாக



அனுப்பி அந்தத் துறையிலே இருக்கிற சங்கத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் என்னை அணுகிக் கேட்டார்கள். B.Sc., (Agri.), M.Sc. (Agri.) அதிலே Ph.d., அதாவது முனைவர் பட்டங்கள் எல்லாம் பெற்றுவிட்டு மாணவர்கள் வேலை இன்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு இவர்களுக்குக் கூடுதலாகப் பணியிடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா, முன்வருமா, என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள நான் விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கனகதாரா, உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

வினா எண் 178, திரு. கே.சி. கருணாகரன் மற்றும் திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**178—**

**முதியோர் இல்லங்கள்**

***1533—திரு. கே.சி. கருணாகரன்:**
**திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த அரசு சாரா அமைப்புகளை ஊக்குவிப்பதுடன் மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு இல்லங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதியோர் இல்லங்கள் நடத்திட தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பது என்பது மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். 25-05-2001 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் இத்திட்டம் குறித்து வலியுறுத்தப்பட்டதற்கு ஏற்ப மாவட்டந்தோறும் முதியோர் இல்லங்கள் அமைக்க படிப்படியாக அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 2001-2002-ல் 4 முதியோர் இல்லங்கள் தொடங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 19

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஆளுநர் உரையில் முதியோர் இல்லங்கள் ஏற்படுத்துவதற்குத் தனியார் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அரசே சிலவற்றை ஏற்று நடத்துமா என்பதுதான் கேள்வி. இது மிக முக்கியமான ஒரு சமூகப் பிரச்சினை. இந்த ஒரு கேள்வியின் மூலமாகவோ அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர இருக்கக்கூடிய ஒரு பதிலின் மூலமாகவோ உடனடியாக இந்தப் பல்லாயிரக்கணக்கான முதியோர்களின் பிரச்சினைகளைத்............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், விளக்கம் எல்லாம் மானியக் கோரிக்கையில்தான். இப்போது கேள்விதான் கேட்க வேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். தீர்த்துவிட முடியாது என்பது தெரியும். ஆயினும்கூடச் சில தனியார் அமைப்புகள் தங்களுடைய சொந்தப் பொறுப்பில் இதற்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றன. ஆனால் அதற்கு இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள். உதாரணமாக, சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், ஒண்டிப்புதூரில் Lions Club மற்றும் இதர தொண்டு நிறுவனங்கள் உலக அமைப்பின் உதவியோடு கட்டடத்தைத் தாங்கள் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கான இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைக் கொடுக்க அரசு முன்வருமா? இரண்டாவதாக, தனியார் Hostels முதியோர்களுக்காக அமைக்கப்பட்டு நடத்தப்படுவதால் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வியோ முதியோர் இல்லங்களை ஏற்படுத்த அரசு சாரா அமைப்புகளை ஊக்குவிப்பதுடன் மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு இல்லங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான். அந்தக் கேள்விக்குரிய விடை, தயாராக இருக்கிறது. நம்முடைய இதய தெய்வம்



2002 ஏப்ரல் 19]

புரட்சித் தலைவி தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் முதியோர்கள் மீது தனிக் கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

குழந்தைகள், பெண்கள் நலனிலே அக்கறை வைத்திருக்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் முதியோர்களையும் கவனத்தோடு பார்க்க வேண்டுமென்று உத்தரவிட்டதற்கிணங்க இதுவரை தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தக்கூடிய முதியோர் இல்லங்களில் அவர்களுடைய உணவு, பராமரிப்புச் செலவுக்காக 250 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை, 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதே (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர்களின்மீதும் அக்கறை எடுத்துக்கொண்டு தனிக் கவனம் செலுத்தக்கூடிய அரசு என்கிற வகையில் செயல்பட்டு வருகிறார் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை, விருதுநகர், திருவண்ணாமலை, சிவகங்கை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இப்போது சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். நாகப்பட்டினம், பெரம்பலூர், செங்கல்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களிலேயும் தனியாக இப்போது ஆரம்பிக்கப்பட உள்ளன. திருவள்ளூரிலே கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையிலே இருக்கின்றது. 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் எண்ணிக்கை 52,98,054 என்று அரசு புள்ளிவிவரக் கணக்கு வைத்திருக்கிறது. அப்படி ஏதாவது தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தக்கூடிய இல்லங்களிலே பராமரிப்புக் கட்டணம் அதிகமாக வசூலிப்பதாக அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, ஏழைப் பெண் குழந்தைகளைக் காப்பாற்றும்பொருட்டு அன்னை தெரசா அவர்களால் பாராட்டுப் பெற்ற தொட்டில் குழந்தைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஏழைப் பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவது போல, இந்த நிதியாண்டில் முதியோர்களுக்கும் நாங்கள் வாழ்வு அளிக்கிறோம் என்று புரட்சித் தலைவி அவர்கள் அமைப்பு சாரா நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீட்டைக் கொடுத்து, நான்கு இடங்களில் முதியோர்

[2002 ஏப்ரல் 19

இல்லங்களை அமைப்பதற்கு ஆணையிட்டதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு நன்றி கூறுகின்ற அதேநேரத்தில், மிகவும் பிற்பட்ட மாவட்டங்களாக இருக்கின்ற இராமநாதபுரம், தருமபுரி போன்ற மாவட்டங்களில் இதுபோன்ற அமைப்பு சாரா நிறுவனங்களின் மூலமாக அமைப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்வதோடு மேலும் ஏழைகளுக்கு, முதியோர்களுக்கு வழங்கப்படுகிற அரிசி, இதுபோன்ற முதியோர் இல்லங்களில் இருக்கின்ற முதியோர்களுக்கும் வழங்கப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கின்ற யோசனை மிகவும் அருமையான யோசனை. முதியோர்கள் நலனிலே அக்கறை வைத்துக்கொண்டு செயல்படுகிற அரசு, இதையும் நல்ல முறையிலே ஆய்ந்து சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**179—**

### புதிய பேருந்து

***1568 திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் கிராமப்புறங்களுக்குச் செல்லும் பழுதடைந்துள்ள அரசுப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் கிராமப்புறங்களுக்கு இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளும் தற்போது நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 19]

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என் கேள்வியைத் தொடுக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய பேருந்துகள் வாங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதில், ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைக்கு எத்தனை பஸ்கள் கொடுக்கப்படும், அவை இரண்டு மாடி பஸ்களாகக் கொடுக்கப்படுமா எனப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று உங்களுக்கும், ஒன்று உங்கள் அப்பாவுக்குமா? *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பத் தமிழன் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஓடுகின்ற பேருந்துகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன, அவை மாற்றித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அவர் சொன்னது போல, கடந்த ஆட்சிக் காலத்தில் அங்கே இயக்கப்பட்ட பேருந்துகள் பெரும்பாலும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தன என்பது உண்மைதான். ஆனால், நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, அங்கே மொத்தம் 48 பேருந்துகள் ஓடுகின்றன. 26 நகரப் பேருந்துகளும், 22 புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. இவற்றில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த 16 பேருந்துகள் புதியதாகக் கூடு கட்டி தற்சமயம் நல்லமுறையில் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் 22 பழுதடைந்த நிலையில் இருந்த பேருந்துகளைப் பழுது நீக்கம் செய்து தகுதிச் சான்றிதழ் பெற்று இப்போது அந்தப் பேருந்துகளும் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இப்போது வாங்கப்பட்டிருக்கின்ற புதிய பேருந்துகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிக்கும் தரப்படுமா என்று கூடுதல் கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதிலும் மாடி பஸ்களாகவும் கேட்டிருக்கிறார்கள். புறநகர்ப் பகுதியிலே மாடி பஸ்கள் இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்து ஆனால், இப்போது வாங்கப்பட்டு இருக்கிற புதிய பேருந்துகளில் விருதுநகர்

கோட்டத்திற்கு 75 புதிய பேருந்துகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 9 பேருந்துகள் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைக்கும் வழங்கப்படவிருக்கின்றன என்ற நல்ல செய்தியை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக 6 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் வயதான நிலையில் இருக்கின்ற 9 பேருந்துகளைக் கண்டறிந்து அந்த 9 பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வழங்கப்படுகின்றன என்பதை அவருக்குப் பதிலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10.30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 180, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.

**180—**

**தொழிற்பேட்டை**

***9327 திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்று துவக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை துவக்கிட அரசிடம் திட்டம் எதும் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழரின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய கேள்வியை இங்கே வைக்கிறேன். சிதம்பரம் தொகுதியில் புகழ்பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ளது. அதன்





அருகே 10 கிலோ மீட்டர் தொலைவில் சி. மூட்லூர் கிராமத்தில் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி உள்ளது. அந்தப் பகுதி மக்கள் படித்துப் பட்டம் பெறுவதற்குப் போதிய கல்வி நிறுவனங்கள் இருந்தும், வேலைவாய்ப்புப் பெற்றிட வெளி நகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு சென்று வேலை கிடைக்காத நேரத்தில் அந்தப் பகுதியிலே அவர்கள் தவறான பாதையிலே சென்று தங்களுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்கிறார்கள். மேலும், சிதம்பரம்-காட்டுமன்னார்குடி செல்லும் சாலையில் சி. வீரசோழபுரம் என்ற கிராமத்தில் தனியார்களே முன்வந்து ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்கிட நிலங்கள் வாங்கி, அது தமிழ்நாடு அரசு சிட்கோ நிறுவனத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொழிற்பேட்டையை சிட்கோ நிறுவனத்தின்கீழ் கொண்டுவந்து தொடங்கிட அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் கடலூர்-சிதம்பரம் நெடுஞ்சாலையில் சிப்காட் தொழில் வளாகம் பகுதி 1-ல் சுமார் 519 ஏக்கர் நிலப்பரப்பிலும், பகுதி 2-ல் 154 ஏக்கர் நிலப்பரப்பிலும் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், தொழில் வளாகத்தை விரிவுபடுத்துவதற்காக 1,266 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டி சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சிதம்பரம் தொழில் முனைவோர் சங்கம் மூலம் சிதம்பரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் வீரசோழபுரம் கிராமத்தில் 57 ஏக்கர் நிலத்தில் தனியார் தொழிற்பேட்டை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வராத காரணத்தினால் இவ்விடம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க தொழில் முனைவோர்கள் முன் வந்தால் சிதம்பரத்தில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 181, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 19

181—

**பின்தங்கிய வட்டம்**

***9353— திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் ஒரு சரித்திரப் புகழ்பெற்ற இடமாகும். அந்தப் பகுதியிலே கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சரியான பருவமழை பெய்யாத காரணத்தினால், விவசாயிகள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அதேபோல், அந்தப் பகுதியிலே குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அரசு தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் தொடங்கப்படவில்லை. குறிப்பாக, தீப்பெட்டித் தொழில் நலிவடைந்து வருகிற காரணத்தினால் அத்தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களும் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியைப் பின்தங்கிய வட்டமாக அறிவிகக வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள முன்வருகிறேன்.

(முற்பகல் 10.55

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 423, தொழில் துறை, நாள் 7-7-1989-ல் 105 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அரசாணை நிலை எண் 500, தொழில் துறை, நாள் 14-5-1990-ல் மேலே குறிப்பிட்ட 105 வட்டங்களிலிருந்து



2002 ஏப்ரல் 19]

30 வட்டங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அரசாணை நிலை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996-ல் வட்ட வாரியாக இல்லாமல் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக தொழிலில் மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய பகுதியாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின்படி 71 ஊராட்சி ஒன்றியங்கள் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவும், 216 ஊராட்சி ஒன்றியங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையின்படி ஒரு பகுதியை தொழிலில் மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய பகுதியாக அறிவிக்க கீழ்க்கண்ட குறியீடுகள் உள்ளன. மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை சதவீதம், இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொத்த மக்கள்தொகையைக் கணக்கில் கொள்ளும்போது 0.25 சதவீதம் அல்லது அதைவிடக் குறைவாக இருத்தல் வேண்டும். அப்பகுதியில் நடுத்தர, பெரும் தொழில்களில் முதலீடு ஏதும் செய்யப்பட்டிருக்கக்கூடாது. அதேபோன்று பின்தங்கிய பகுதிக்கு, இப்பகுதியிலுள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை சதவீதம், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகையில் மாநில சராசரி சதவீதமாகிய 2 சதவீதத்துக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். மேலும், இப்பகுதியில் நடுத்தரப் பெரும் தொழில்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூபாய் 15 கோடிக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிகளின்படி புதிதாகப் பிரிக்கப்பட்ட எட்டயபுரம் வட்டத்திலுள்ள கயத்தாறு யூனியன் பகுதியையும் சேர்த்து கிராமப் பஞ்சாயத்திலுள்ள சோழபுரம், சன்னக்கரை, பொன்களநதான்நத்தம், மேற்குப்பட்டி ஆகிய நான்கு கிராமப் பஞ்சாயத்துகள் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம் முழுவதையும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. மேலும், உறுப்பினர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக தொழில் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் நல்கினால் அதுகுறித்து அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**182—**

## கடசல் தொழில்

***8500—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள பழமைத் தொழிலான கடைசல் தொழிலைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் உள்ள பழமைத் தொழிலான மரக் கடைசல் தொழிலைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் உள்ள கடைசல் தொழில் புரிவோர்க்கு வாய்ப்பளிக்கும் தொழில் நோக்கில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் 10 (குறுந்தொழில்) தொழில் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவை தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்படி தொழில் கூடங்கள் அனைத்தும் 1989-ல் அந்தந்தத் தொழில் முனைவோர்களால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், எங்கள் குடும்பக் காவல் தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ் எழுத்தின் முதல் எழுத்தான அகரத்தையும் கடைசி எழுத்தான னகரத்தையும் சேர்த்து ஆய்த் தேர்ந்த தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகை மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது அம்பாசமுத்திரம் தொகுதி. அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் கடைசல் பொருட்கள் செய்கின்ற பழமையான தொழில் நடைபெறுகிறது. அந்தக் கடைசல் தொழிலை சுமார் 1,500 பேர் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மூலப் பொருட்களான யூகலிப்டஸ் மரங்களை புதுக்கோட்டையிலிருந்தும் அதற்குத் தேவையான கச்சாப் பொருட்களான அரக்கை மத்தியப்



பிரதேசத்திலுள்ள போட்டியாவிலிருந்தும் அவர்கள் பெற்று அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். ஒரு காலத்தில் அம்பாசமுத்திரம் பகுதியில் கடைசல் தொழில் தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்த தொழில் இன்று மிகவும் நலிவடைந்த ஒரு நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், அவர்களுக்கு ஏற்றமிகு வாழ்வு அளிக்கின்ற விதமாக அவர்களுக்கு மூலப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். வடநாட்டு சேட்டுகள், அவர்கள் செய்கின்ற அந்த அலங்காரப் பொருட்களையும், அவர்கள் செய்கின்ற மற்றப் பொருட்களையும்—கிராமத்தில் சொல்வார்களே தவிட்டு விலைக்கு என்று—அப்படித் தவிட்டு விலைக்கு வாங்குவதை நிறுத்துகின்ற வகையில் நமது அரசு மூலம் sales emporium மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்யவும், கிராமங்களில் இந்தக் கடைசல் தொழிலுக்கு மானியம் வழங்குவதைப்போல, அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் இன்று பிரதானமான தொழிலாக இருக்கின்ற அந்தக் கடைசல் தொழிலுக்கு மானியம் வழங்குவதற்கும் ஆவன செய்யவேண்டும். இன்று குடிசைத் தொழிலில் Third Grade என்ற முறையில் பதிவு செய்யப்பட்டு, அந்தத் தொழிலுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றே கால் வீதம் மின்சாரக் கட்டணம் வசூலிப்பதைப் போல, அந்தத் தொழிலுக்கும், வீடுகளுக்கு வசூலிப்பதைப் போல மின் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** இப்படி அவர்களுக்குப் பல்வேறு வகைகளிலே—அந்தத் தொழிலை, மரக் கடைசல் தொழிலை, பழமை வாய்ந்த அந்தத் தொழிலை, அம்பாசமுத்திரம் என்று சொன்னாலே மரக் கடைசல் தொழிலுக்குப் பெயர் போனது —இன்று அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் அதிகப்படியான விலைக்கு மூலப்பொருட்களை வாங்கி அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் மிகவும் நலிந்து, இப்போது தொழில் நலிந்துபோய் இருக்கிறது. எனவே, இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு, அந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு, அந்தத் தொழிலுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு மேற்கண்ட வகையிலே—இந்த அரசு நம்முடைய அம்மாவினுடைய அரசு—முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள பழமையான தொழிலான மரக் கடைசல் தொழிலைப் பாதுகாத்து அந்தப் பகுதியில் மேற்படி தொழில் புரிவோருக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் 1981 ஆம் ஆண்டு 10 குறுந்தொழில் தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தொழிற்கூடங்கள் அனைத்தும் 1989-ல் அந்தந்தத் தொழில் முனைவோர்களால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன. மரக் கடைசல் தொழில் புரிவோருடைய தேவைகளைக் கேட்டறிவதற்காக 1998 மற்றும் 2000 ஆண்டுகளில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட ஊரகத் தொழில் திட்டங்கள், திருநெல்வேலி திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. கருத்தரங்குகளின் வெளிப்பாடுகள் நபார்ட் வங்கியின் பரிசீலனையில் உள்ளன. மரக் கடைசல் தொழில் புரிவோருக்கு மாவட்ட தொழில் மையம் வழியாக குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு குறைந்த மின் கட்டணச் சலுகை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மரக் கடைசல் தொழில் புரிய, பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற விண்ணப்பம் செய்பவர்கள் கடன் பெறுவதற்காக அவை வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றன. மேலும் டாக்டர் புரட்சித் தலைவி தலைமையிலே அமைந்துள்ள தமிழக அரசு சிறு மற்றும் குறுந்தொழில் புரிவோருக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அத்தொழில்கள் நலிவடையாமல் இருக்க அனைத்துப் பாதுகாப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 183, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**183—**

**கால்நடை மருந்தகம்**

***8849—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —



2002 ஏப்ரல் 19]

ராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், தூதிரெட்டிப்பள்ளி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரிய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**184—**

**வாரிசுதாரர்களுக்குப் பணி**

***7805—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி எல்லைப் போராட்ட வீரர்களில், மறைந்துவிட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வேண்டி இதுவரையில் அரசுக்கு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதுவரையில் அரசுப் பணியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** தாயை வணங்கி விடையளிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருத்தணி எல்லைப் போராட்ட வீரர்களில் மறைந்துவிட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள் எவரும் அரசுப் பணி வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இதுவரை பதிவு செய்யவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2002 ஏப்ரல் 19

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு திருத்தணி ஆந்திராவில் இருந்தபோது அதைத் தமிழகத்திற்கு மீட்டு எடுக்க வேண்டுமென்று மறைந்த தலைவர்கள் தளபதி விநாயகம், சிலம்புச்செல்வர் மா.பொ.சி. அவர்களின் தலைமையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கே எல்லைப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிறை சென்றனர். அந்தக் குடும்பங்கள் இப்போது வறுமையிலே வாடுகின்றன. அந்தக் குடும்பங்களுக்கு, குடும்பத்திலே ஒருவருக்கு வேலையும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்படுவதுபோல, அத்தனை சலுகைகளையும் வழங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** அரசாணை நிலை எண் 59, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4-5-1999-ல் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் தமிழ்மொழிக் காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறையிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புக்காக பெயர் அனுப்பப்படும்போது முன்னுரிமை வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 31-12-2001 அன்றைய தேதியில் 300 மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் காத்திருக்கிறார்கள். அதில் இதுவரையில் 14 பேர் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே உங்கள் அறைக்கு வந்து சென்னையில் நடைபெறும் தொடர் கொள்ளைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.



2002 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். திரு. துரைமுருகன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

முற்பகல் 11-05

### (ஆ) திருமதி சோனியா காந்தி அவர்களை மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் இரகசியமாகச் சந்தித்ததாக வந்த தகவல்

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒரு விளக்கத்தை நான் பெற விரும்புகிறேன். 11 ஆம் தேதி இம்மாமன்றத்தில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறபோது எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதனுக்கும் ஒரு பிரச்சினையிலே வாதம் நடக்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு ஒன்றைச் சொன்னார்கள். ஏன் நீங்கள் இருவரும் இப்படி அடித்துக்கொண்டிருக்கிறீர்கள்? டில்லியிலே திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களும், முரசொலி மாறன் அவர்களும் இரகசியமாகச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். நீங்கள் ஏன் விவரம் தெரியாமல் அடித்துக்கொண்டு, பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று குறுக்கிட்டுச் சொன்னார்கள். நான் அப்போது சொன்னேன்; இது டில்லியிலே ரொம்ப சகஜம், ஒரு கட்சி, எதிர்க்கட்சிகள் பேசுவது என்று அம்மையாருக்கும் தெரியுமே என்று சொன்னேன். அவர்கள் சொன்னார்கள், நான் சொல்வதை துரைமுருகன் கவனிக்க வேண்டும். இரகசியமாகச் சந்தித்துப் பேசினார்கள், என்னிடத்திலே உளவுத் துறை இருக்கிறது; செய்தி வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. இளங்கோவன் அவர்களுக்குப் பதிலளிக்கிற வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அந்த அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், உளவுத் துறை கண்காணிக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** உளவுத் துறை இருக்கிறது. அதன் மூலமாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதுதான் நான் சொன்னேன்.

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அந்தமாதிரி சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லை. அதுதான் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலே அந்த மாதிரி இல்லை.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் பார்க்கவில்லையா. எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உளவுத் துறை என்னிடம் இருக்கிறது என்றுதான் சொன்னார்களே தவிர, வேறு அல்ல.

**திரு. துரைமுருகன்:** சரி. அப்படியேகூட வைத்துக்கொள்ளுங்கள். அதுகூட, உளவுத் துறை இருக்கிறது என்றால் செய்தி கொடுப்பதற்கு. உளவுத் துறை எதற்கு இருக்கிறது? செய்தி கொடுப்பதற்குத்தான் இருக்கிறது. ஆகையினாலே கொஞ்சம் அப்படியேகூட நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். உளவுத் துறை இருக்கிறது என்று சொன்னால், அப்படி என்றால், அது செய்திகளை எனக்குத் தந்திருக்கிறது என்று அதனுடைய பொருள். போகட்டும். ஆனால், நேற்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அப்படியெல்லாம் திருமதி சோனியா காந்தி அவர்களை யாரும்—உளவுத் துறை—உளவு பார்க்கவில்லை என்று அவர்கள் மறுப்பு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படியானால் உளவுத் துறை டில்லியிலே திருமதி சோனியா காந்தியும் முரசொலி மாறனும் சந்திக்கிறபொழுது, மாறனை மட்டும் உளவு பார்த்தார்களா, ஒதுக்கிவிட்டு, சோனியா அம்மையாரை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உளவுத் துறை கண்காணிக்கவில்லை என்பதே பிரச்சினை.

**திரு. துரைமுருகன்:** இரண்டாவது, எனக்கு என்ன கவலை என்று கேட்டால், இது திரு. இளங்கோவனுக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தெரிவித்த மறுப்பு மாதிரி தெரியவில்லை. முதலமைச்சருக்கே இவர் மறுப்புத் தெரிவித்ததைப் போலவும் இந்தக் கருத்து இருக்கிறது. ஆகையினாலே எது உண்மை? உள்ளபடியே உங்கள் உளவுத் துறை, முரசொலி மாறனும் சோனியா அம்மையாரும் சந்தித்துப் பேசியதை, இரகசியமாகப் பேசியதை, கண்காணித்ததா? வந்த செய்திகள் என்ன என்று சொல்கிறது. இல்லாவிட்டால், இல்லை என்று சொல்லலாம்.



2002 ஏப்ரல் 19] [திரு. துரைமுருகன்]

ஏன் என்றால், இருவரும் நீங்கள் ஒருவருக்கொருவர் மாறி மாறி அறிக்கை விடுவது எங்களைக் குழப்புகிறது. மக்களுக்கும் குழப்பம் ஏற்படுகிறது. இந்த அமைச்சரவையிலே நீங்கள்தான் தலைமை அமைச்சர், முதலமைச்சர். நீங்கள் சொன்னதற்கே ஒரு மறுப்புத் தெரிவித்திருக்கிறார், வெளியிலே. நீங்கள் உள்ளே சொன்னதற்கு, வெளியிலே மறுப்புத் தெரிவித்திருக்கிறார் என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்பவும் குழம்பாதீர்கள், திரு. துரைமுருகன். (சிரிப்பு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சிண்டு முடிவதற்கு எவ்வளவுதான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முயற்சித்தாலும் அது நடக்காது. எனக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் இடையே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நான் பணித்ததன் பேரில்தான் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் என்ன கூற வேண்டுமென்றும் நான்தான் அவருக்கு எடுத்துச் சொன்னேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பத்திலே மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது அன்றைக்கு நடந்த விவாதத்தின்போது, ஏன் நீங்கள் அடித்துக்கொள்கிறீர்கள் என்று நான் சொன்னதாக இங்கே குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சொற்களை நான் பயன்படுத்துவதேயில்லை. டில்லியிலே என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ளாமல் ஏன் சண்டை போட்டுக்கொள்கிறீர்கள் என்றுதான் நான் இங்கே கௌரவமாகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கௌரவமாகச் சொன்னேன். அதை நீங்கள் மாற்றி ஏன் அடித்துக்கொள்கிறீர்கள் என்று நான் கேட்டதாக இங்கே தெரிவித்தீர்கள்.

அடுத்தபடியாக, அன்றைக்கு மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் இந்தத் தகவல் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்ற ரீதியில் பேசினார். பத்திரிகைகளில் எத்தனையோ செய்திகள் வருகின்றன என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார். அதற்கு நான் பதிலளிக்கையில் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்து நான் எதுவும் சொல்லவில்லை. என்னிடம் உளவுத்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 19

துறை இருக்கிறது என்று அவ்வளவுதான் சொன்னேன். அதோடு நிறுத்திக் கொண்டேன். அப்படியானால், உளவுத் துறைக்கு இந்தத் தகவல் எப்படிக் கிடைத்தது? திருமதி சோனியா காந்தி அவர்களை அவர்கள் பின் தொடர்ந்தார்களா, கண்காணித்தார்களா, திரு. முரசொலி மாறன் அவர்களைப் பின் தொடர்ந்தார்களா, கண்காணித்தார்களா என்றெல்லாம் பல சந்தேகங்களை இங்கே திரு. துரை முருகன் அவர்கள் எழுப்பினார்கள்.

*முற்பகல் 11.10*

உளவுத் துறையின் பணி, உளவுத் துறையின் கடமை அரசுக்கு எல்லாவிதமான தகவல்களையும் தெரிவிப்பதாகும். உளவுத் துறைக்குத் தகவல்கள் சேகரிப்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன. குற்றவாளிகளை, தேச விரோதிகளை, சந்தேகப்பட வேண்டியவர்களை, அவர்கள் வேவு பார்ப்பதுண்டு. அவர்களைப் பின்தொடர்வது உண்டு. அத்தகைய ஒரு category, ஒரு பிரிவு என்பது வேறு. ஆனால், திரு. முரசொலி மாறன் அவர்கள், திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது என்று எனக்கு ஒரு தகவல் வந்தால், தமிழக அரசின் உளவுத் துறை திருமதி சோனியா காந்தி அவர்களையும், திரு முரசொலி மாறன் அவர்களையும் பின் தொடர்ந்து கண்காணித்தார்கள் என்று பொருள் அல்ல. உளவுத் துறையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு இந்தியா முழுவதும் எத்தனையோ பேரோடு தொடர்பு இருக்கிறது. அவர்களுக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். இந்தியா முழுவதும், எல்லா மாநிலத் தலைநகர்களிலும் அவர்களுக்கு sources இருக்கின்றன; தகவல் தெரிவிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, டெல்லியில் இருப்பவர்கள் சொல்லியிருக்கக்கூடும். உளவுத் துறையில் உள்ளவர்களுக்கு இப்படி டெல்லியில் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. திரு. முரசொலி மாறன் அவர்கள் திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஒரு தகவல் கிடைத்ததாக அவர்கள் எனக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவுதான். இது உண்மையா, இல்லையா, என்பது தெரியாது. ஆனால், இன்றுவரை திருமதி சோனியா காந்தி அவர்களும், திரு. முரசொலி மாறன் அவர்களும் இந்தச் செய்தியை மறுக்கவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2002 ஏப்ரல் 19]

**(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு பற்றியெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றுத்தான் கொடுத்தீர்கள். அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் (குறுக்கீடு) நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தபோது என்ன பதிலைச் சொன்னீர்களோ அதே பதிலைத்தான் நான் சொல்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் இராட்சத துளை கிணறுகள் போடப்படுவதால் விளை நிலங்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. அ. சிவபெருமாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அ. சிவபெருமாள். (குறுக்கீடு) நான் ஜோசியம் பார்க்க முடியாது. நாளைக்கா, நாளை மறுநாளா என்று.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஒட்டப்பிடாரம், புதியமுத்தூர், பாஞ்சாலங்குறிச்சி ஆகிய இடங்களில் தனியார் இராட்சத போர்வெல் போட்டுத் தண்ணீரை விற்பனை செய்வதால் அப்பகுதி விளைநிலங்கள் பாழாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 19

## அறிக்கை

1998 ஆம் ஆண்டு ஜனவரி நிலத்தடி நீர் கணக்கீட்டின்படி (Ground Water estimate) தூத்துக்குடி மற்றும் ஒட்டப்பிடாரம் ஒன்றியப் பகுதிகள் அபாயம் (Semi-critical) என்ற வகையில் வருகின்றன. அந்த ஒன்றியங்களில் உள்ள மொத்த நில நீர் இருப்பில் 70 முதல் 90 விழுக்காடு வரை தற்போது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

2001 பிற்பகுதியிலும் 2002 ன் முற்பகுதியிலும் இவ்வொன்றியங்களில் போதுமான அளவு மழை பெய்யாமையால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. எனவே, நிலத்தடி நீர் மட்டம் 4.04 மீட்டர் அளவுக்குக் குறைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவேதான் விளைநிலங்களுக்கு வேண்டிய அளவு நிலத்தடி நீர் கிடைக்கப் பெறவில்லை.

ஒரு ராட்சத துளைக் கிணறுக்கும் மற்றொரு இராட்சத துளைக் கிணறுக்கும் இடையே குறைந்தது 600 மீட்டர் இடைவெளி தூரம் இருக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளன. இந்த விதிமுறைகள் வங்கிகளில் அல்லது அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களில் இருந்து கடன் உதவி பெற்றுக் கிணறு அமைப்பவர்களையே கட்டுப்படுத்தும். சொந்த முதலீட்டில் இராட்சத துளைக்கிணறு அமைப்பவர்களை மேற்கூறிய விதிகள் கட்டுப்படுத்தாது. மேலும் சொந்த முதலீட்டில் கிணறு அமைப்பவர்கள் தற்போது உள்ள விதிமுறைப்படி நில நீர் சான்று பெற வேண்டிய அவசியம் இல்லை.

நிலத்தடி நீர் எடுப்பைக் கட்டுப்படுத்தவும் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் வளர்ச்சி மற்றும் மேலாண்மை சட்டம் ஒன்று இயற்றும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இச் சட்டம் செயல்வடிவம் பெற்றபின் இதுபோன்று தனியார்கள் இராட்சத துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரை விற்பனை செய்வது தடுக்கப்படும்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் தாயே, பாரத மாதாவே, இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே, சமூக விரோதிகளின் சிம்ம சொப்பனமே, எங்களின் இதய தெய்வமே, அம்மா அவர்களே, ஆன்றோர்கள் நிறைந்திருந்த இந்த அவையில் தாங்கள் வீற்றிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன் தாயே.



2002 ஏப்ரல் 19] [திரு. அ. சிவபெருமாள்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்தை நன்கு படித்தேன். ஓர் ஆற்றில் வரும் நீரை எடுத்துச் சென்றால் ஆற்றில் தண்ணீர் வந்துகொண்டே இருக்கும், அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால், நிலத்தடி நீரைத் தனியாராக இருந்தாலும், விவசாயியாக இருந்தாலும், விவசாயத்திற்கும் குடிநீருக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால், அந்த நிலத்தடி நீரை, வறட்சியாகத் திகழும் என்னுடைய தொகுதியிலே தனியார் நிறுவனங்களும் பணம் படைத்தவர்களும் போட்டி போட்டுக்கொண்டு சுமார் 300 அடியிலிருந்து 500 அடி வரை பெரிய பெரிய இராட்சத துளைகளைப் போட்டு சுமார் ஆயிரக்கணக்கான டாங்கர்களை, வரிசையிலே நிறுத்தி, ஒரு டாங்கரை நிரப்ப நீர் இன்ன விலை என்று நிர்ணயித்து சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் தொகுதியின் வெளிப் பகுதிக்கு எடுத்துச் சென்று பெரிய பெரிய தனியார் கம்பெனிகளுக்கும், லாரிகள் போன்ற வாகனங்களை சர்வீஸ் செய்யக் கூடிய சர்வீஸ் சென்டர்களுக்கும் எடுத்துச் சென்று வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் தொகுதியிலுள்ள வியாபாரிகள், மகளிர் மன்றங்கள், பொதுமக்கள், பெரும் அதிர்ச்சியடைந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபெருமாள் ஒரு கேள்வியாகக் கேளுங்கள். தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று.

**திரு. அ. சிவபெருமாள்:** இதனால் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இந்தப் பகுதியில் தண்ணீரை எடுத்து விற்பனை செய்வதனைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் எடுப்பைக் கட்டுப்படுத்தவும், நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தவும் மாண்புமிகு அம்மாவின் அரசால் தமிழ்நாடு நிலத்தடி நீர் வளர்ச்சி மற்றும் மேலாண்மைச் சட்டம் ஒன்று விரைவில் இயற்றப்பட்டு, இதுபோன்ற தனியார் இராட்சத துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரை விற்பனை செய்வது தடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 ஏப்ரல் 19

## (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிருவாக ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியையும் பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரியையும் இணைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சக்ரபாணி அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிருவாகத்தின்கீழ் இயங்கிவரும் ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியையும், பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரியையும் ஒன்றாக இணைப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

பழனி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரால் நிர்வாக மேம்பாட்டிற்காகவும், செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் பழனியாண்டவர் மகளிர் தொழில்நுட்பப் பயிலகத்தினை ஆடவர் தொழில்நுட்பப் பயிலகத்துடன் இணைக்க செயற்குறிப்பு தயாரித்து மேற்படி இரண்டு தொழில்நுட்ப பயிலகங்களையும் ஒருங்கிணைத்து அருள்மிகு பழனியாண்டவர் தொழில்நுட்பப் பயிலகம் என்ற பெயரில் ஒன்றுமையாக இயங்கவும், விதிப்படியான நடவடிக்கைகளைப் பின்பற்றி அதிகாரபூர்வமாக விரைவில் ஒருங்கிணைத்துச் செயல்பட இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட ஆண்கள் மற்றும் மகளிர் தொழில்நுட்பப் பயிலகங்களின் ஒருங்கிணைப்புக் குறித்து கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் உயர் கல்வித் துறை அரசு செயலாளருக்கு வருகின்ற 2002-2003ம் கல்வியாண்டு முதல் அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் பாலிடெக்னிக்கை பழனியாண்டவர் ஆண்கள் பாலிடெக்னிக்குடன் ஒருங்கிணைத்து நடத்திட உரிய அரசாணை வழங்கும்படி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தேதியிடப்படாத



2002 ஏப்ரல் 19] [திரு. பி.சி. இராமசாமி]

விண்ணப்பம் மூலம் மேற்கண்ட இணைப்புக் குறித்து ஆட்சேபித்துக் கடிதம் பெறப்பட்டது. அதன் மீது இணை ஆணையர்/செயல் அலுவலர் அறிக்கை கோரப்பட்டது. அதில் பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்பட்டு வரும் இரண்டு தொழில்நுட்பப் பயிலகங்களையும் ஒருங்கிணைப்பு [illegible]வதால் எந்தவிதமான பதட்டமான சூழ்நிலை மாணவ மாணவிகள் மத்தியிலோ மற்றும் ஆசிரியர்கள் பணியாளர்கள் மத்தியிலோ எப்பொழுதும் இல்லையெனவும், தற்பொழுதுமில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைப்புக் குறித்து பொதுமக்களிடமிருந்தோ ஒருங்கிணைக்கப்படவுள்ள மகளிர் தொழில்நுட்பப் பயிலக மாணவியரிடமிருந்தோ எவ்வித எதிர்ப்பும் கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைப்பின் மூலம் பழனி வாழ் மாணவர்களுக்குப் புதிய கூடுதல் பட்டப் பிரிவுகள், அனைத்து வசதிகள் கொண்ட ஆய்வகம், வகுப்பறை, தங்கும் விடுதி, வரைபட அறை, விளையாட்டு அரங்கம், கழிப்பறை போன்ற கூடுதல் வசதிகள் பெற வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பினால் ஆசிரியர்களுக்கோ ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கோ பணியிழப்போ, பணி மூப்பு பாதிப்போ ஏற்படும் என்ற பிரச்சினைக்கே வாய்ப்பில்லை. இந்த ஒருங்கிணைப்பினால் அரசின் நிதிச்சுமை குறைக்கப்பட்டு நிதி நலனுக்கு உகந்ததான சூழ்நிலை உருவாகிறது. மேலும் திருக்கோயிலின் நிதி நலனும் நிர்வாக நலனும் பாதுகாக்கப்படுகிறது. இணைக்கப்படவுள்ள பெண்கள் தொழில்நுட்பப் பயிலகம் மலைப்பகுதியின் மேற்கு கிரிவீதியில் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்து தரத் தேவைப்படும் சிறிய வளாகப் பகுதியில் அமைந்துள்ளது. ஒருங்கிணைப்பின் மூலம் அனைத்து வசதிகளும் கொண்ட பெரிய வளாகப் பகுதி ஒரே நிர்வாகத்தின் கீழ் குறைந்த நிர்வாக செலவில் மாற்ற வாய்ப்புள்ளது.

மேலும் பழனியாண்டவர் மகளிர் தொழில்நுட்பப் பயிலகத்தினை ஆடவர் தொழில்நுட்பப் பயிலகத்துடன் ஒருங்கிணைத்து ஒரே பயிலகமாகச் செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட இரண்டு பயிலகங்களில் பயிலும் மாணவ மாணவியர் மத்தியில் எந்தவிதமான பதட்டமோ எதிர்ப்போ இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிருவாகத்தின்கீழ் ஆண்கள் தொழில் நுட்பக் கல்லூரியும், பெண்கள் தொழில் நுட்பக்

கல்லூரியும் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாக, அங்கே ஏற்படுத்தப்பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயிருந்தும், குறிப்பாக திண்டுக்கல், தேனி, ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்து அந்த இரண்டு தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மாணவர்கள் படித்து வருகிறார்கள். பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி—இந்த விவர அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளவாறு—பழனி கோயிலின் மேற்குப் பகுதியிலே ஒரு குறுகிய இடத்திலே அமைந்திருப்பதால்தான் ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியோடு நிருவாக வசதிக்காக இணைக்கப்படுகிறது என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைப் பொறுத்தவரையிலே நிதி அதிகமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு, அந்தப் பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஓர் இடத்தைத் தேர்வு செய்து அந்தத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு வேண்டிய கட்டட வசதிகள், ஆய்வகங்கள், தங்கும் விடுதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்து அந்த மாணவிகளின் தனித் தன்மையைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த இரண்டையும் இணைப்பதைக் கைவிடுவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரிக்கு போதிய இடம் இல்லாததால் தற்சமயம் மின் இரயில் பாதை அருகில் அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் ஆய்வு செய்து, இந்த இடத்தில் விளையாட்டு மைதானம், நூலகம், ஆய்வுக் கூடம், போன்ற வசதிகள் இல்லையென்றும் கூரைக்கொட்டகையில் தற்போது இயங்கி வருகிறது; இந்த இடத்தில் இருந்தால் தொடர் அங்கீகாரம் கொடுக்க இயலாது என்றும் கூறிவிட்ட காரணத்தினால் வேறு இடம் பார்த்து பெண்கள் கலைக் கல்லூரிக்கு அருகில் 4 கோடி ரூபாய் அளவில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அங்கு ஆய்வு செய்தபோது, மாணவர்களுடைய எண்ணிக்கை, மாணவிகளுடைய எண்ணிக்கையை விட குறைவாக இருந்த காரணத்தினாலே, 3 ஆண்டுகளுக்கும் சேர்த்து மகளிர் தொழில் நுட்பக் கல்லூரியில்— 240 மாணவிகளுக்கு—படிக்கும் மாணவிகள் எண்ணிக்கை 130-தான். முதல் ஆண்டு 51 மாணவிகள், இரண்டாம் ஆண்டு 31 மாணவிகள் மூன்றாம் ஆண்டு 48 மாணவிகள், மொத்தம் 130 மாணவிகள் இருக்கின்ற காரணத்தினாலே, இதற்காக 4 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதற்காகத்தான் இரண்டையும் ஒன்றாக இணைக்கலாம் என்று



இப்போது ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அந்தக் கோயிலைப் பொறுத்தவரையிலே அதிகமான நிதியிருக்கிறது. அதைத்தான் சொல்கிறேன். எனவே, பெண்களுக்காகத் தனியாக இடம் வாங்கி, கட்டடம் மற்றும் அனைத்து வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அந்த இரண்டு தொழில் நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலேயும் 15 ஆண்டுகளாக, நிரந்தரமான முதல்வர் இல்லை. எனவே, அதையும் இந்த அரசு பரிசீலனை செய்து நிரந்தர முதல்வர் பதவியை ஏற்படுத்தித் தர முன்வருமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியிருந்தாலும், 10 கல்லூரிகள் அங்கே செயல்படுகின்ற காரணத்தினாலே, அவை அனைத்தும் அந்த ஆலயத்தினுடைய நிதியிலிருந்து செயல்படுகின்ற காரணத்தினாலும், மாணவிகள் குறைவாக இருக்கிற காரணத்தினாலும், அங்கே உள்ள ஆண்கள் தொழில் நுட்பக் கல்லூரியும் பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரியும் ஒரே இடத்தில் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கும் மாணவிகளுக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பாதுகாத்து, அவர்களுக்குப் பணியிடம் கொடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் பற்றி ஏதோ கேட்டாரே; Principal பற்றிக் கேட்டாரே?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** கூடிய விரைவில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மாவைக் கலந்து உடனடியாக முதல்வர் பதவி ஏற்படுத்துவதற்கு இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வரைக் கலந்து முதல்வர் பதவி ஏற்படுத்தப்படும். (சிரிப்பு)

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஒரு clarification

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் இல்லை. clarification எல்லாம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அறிக்கையைக் கொடுக்கட்டும்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு...

**திரு. பரிதி இளம்வழுதி:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்ட கண்ட நேரங்களில் எல்லாம் எழுந்து கேட்கக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, உட்காருங்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது முதல் பதினெட்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(இ) கோரிக்கை எண் 29-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு.**

**(ஈ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**



**(அ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் (குறுக்கீடு) உட்காருங்கள். பரிதி, உட்காருங்கள். பேரவைத் துணைத் தலைவராக இருந்தீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) கண்ட, கண்ட நேரங்களில் எல்லாம் எழுந்து பேசக்கூடாது. (குறுக்கீடு) zero hour முடிந்து போயிற்று. (குறுக்கீடு) வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்து, எல்லாம் எடுத்தாகிவிட்டன. (குறுக்கீடு) பரிதி, உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 25,00,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2806, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராம கடைநிலை ஊழியர்களாக பணிபுரிந்து மரணமடைந்து விட்டவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 642, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக வீடுகட்டி வாழ்வோருக்கு அவர்கள் வீடு கட்டியுள்ள நிலத்தை பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 579, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 989, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 129, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 193, திரு. எச். எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 50, திரு. ஐ. கணேசன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கமா? நான் அழைத்தது திரு. கணேசனைத்தானே? வைதியலிங்கத்திற்கு வைத்தியம் பார்க்கவேண்டும் போலிருக்கிறதே!

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பல ஆண்டு காலமாக எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கீடு செய்துள்ள நிலத்தில் வீடுகட்டி குடியிருந்துவரும் மக்களுக்கு அந்த இடத்திற்குப் பதில் மாற்று இடத்தில் வீட்டுமனைகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1830, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், ஆற்காடு குப்பம், திமிரி நகரில் 25 ஆண்டுகாலமாக வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1658, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2566, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2976, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3362, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3635, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 851, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1864, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2193, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 826,39,26,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,00,02,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1033, திரு. ப. ரங்கநாதன்.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 3243, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 3510, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் இயற்கைச் சீற்றத்தினால், கன்னியாகுமரி மாவட்ட கடலோரக் கிராமங்கள், மார்தாண்டம், வல்லவிளை, இரவின் புத்தந்துறை, தூத்தூர், பூந்துறை, முட்டம், குளச்சல், கொட்டில்பாடு போன்ற பகுதிகளில் நூற்றுக்கணக்கான வீடுகள் கடல் அலைகளால் இழுத்துச்செல்லப்பட்டு இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 3758, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இயற்கைச் சீற்றத்தால் பொதுமக்களின் வீடுகள் மற்றும் அவர்களது உடமைகளுக்குச் சேதம் ஏற்படும்பொழுது அவர்களது இழப்பீட்டை மதிப்பிட்டு அதற்கு ஏற்றவாறு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1193, திரு. கா. சந்தானம். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 425, செல்வி சு. பாலபாரதி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 2081, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1050, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், பர்லியார் சாலை அண்மையில் பெய்த மழையினால் நிலச்சரிவு ஏற்பட்டு அடைபட்டுள்ளதால் வாகனங்கள் உதகமண்டலம் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. பாதையினைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2309, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1183, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண்.1540, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை மேற்கு தொகுதியில் காந்திபார்க் பகுதியிலுள்ள மாநகராட்சிப் பூங்காவின் மதிற்சுவர் ஆறு மாதங்களுக்குமுன் பெய்த கன மழையால் இடிந்து அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏழு ஆட்டோ ரிக்ஷாக்கள் சேதம் அடைந்ததற்கும், ஒரு ஆட்டோ ஓட்டுநரும் ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளியும் பலத்த காயமடைந்ததற்கும் நிவாரணத் தொகை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1311 திரு. கு. பிச்சாண்டி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 3731. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2236, திரு. ஜெ. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '1994-ல் குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான நிவாரணம் வழங்காததினால் பலர் இன்னும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 5249, டாக்டர் ப. வள்ளல்பெருமான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 2883, திருமதி. காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2190, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண். 1145, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியைச் சேர்ந்த முத்துப்பேட்டை, தொண்டியகாடு பகுதிகள் கடலோர பகுதிகளாக இருப்பதால் ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெருமழையால், புயல் காற்றால் பாதிப்புக்குள்ளாகும் அப்பகுதி மீனவ, பொது மக்களை அபாயத்திலிருந்து பாதுகாக்க புயல் பாதுகாப்பு மையம் கட்டும் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 114,67,79,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 485 முதல் 555 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.
556 முதல் 569 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.
570 முதல் 585 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். உறுப்பினர்கள் பேச வேண்டும். ஒவ்வொருவரும் சரியாக 10 மணித்துளிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை, முத்திரைத்தாள்கள், எழுதுபொருள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், இந்த அவையில் இரண்டாவது முறையாக இடம் பெறச் செய்த தமிழினத் தலைவர், எங்கள் குடும்பத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மேயர் தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும், வெற்றிக்காக உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ஆம் ஆண்டு நான்காவது முறையாக தமிழினத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று, நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நடைபெறாத வளர்ச்சிப் பணிகளை நடத்திக் காட்டினார்கள் என்று வரலாறு தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல, இதுபோன்ற துறைகளானாலும் சரி, உள்ளாட்சித் துறையானாலும் சரி, அதேபோல தொழிலாளர் நலத் துறையானாலும் சரி, எண்ணற்ற துறைகள் மூலம், பல நல்ல திட்டங்களை அறிவித்து, விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர் தோழர்கள், பள்ளி மாணவர்கள் என அனைத்து வகையான மக்களுக்கும் பல நல்ல திட்டங்களை அறிவித்து சாதனை படைத்தார்கள் என்பது உங்களுக்கு நினைவு இருக்கும்.

குறிப்பாக, 1996-ஆம் ஆண்டு, 13-5-1996-ல் முதல்வராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் முதல் சாதனையை வருவாய்த் துறையிலே தொடங்கினார்கள் என்பது உங்களுக்கு நினைவு இருக்கும். இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஏழைமக்கள் வசிக்கக்கூடிய வீட்டினுடைய நில அடி வரியை இரத்துச் செய்கின்ற திட்டத்தை அறிவித்து ஏழையெளிய மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதேபோல, 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு உரிமைச் சட்டத்தை அறிவித்து, அதிலும் குறிப்பாக அந்தச் சட்டத்தின் அடிப்படையில் அரசு புறம்போக்கு நிலத்திலே வாழ்ந்து வந்த விவசாயக் கூலித்



தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தை வீட்டுமனைப் பட்டாக்களாக வழங்குகின்ற ஆணையைப் பிறப்பித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, வீட்டுமனைப் பட்டா பெறுகின்ற வகையில் பல சிறப்புத் திட்டங்களை அறிவித்தார் தலைவர் கலைஞர் அவர்கள். குறிப்பாக, ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, கழக ஆட்சியில் நகர்ப் புறத்தில் 24 ஆயிரம் ரூபாய் என்றும் கிராமப்புறத்தில் 16 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தி அவர்களுக்குக்கூட இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தை அறிவித்தார்.

*முற்பகல் 11-40*

அதேபோல, 10 ஆண்டுகள் ஒரே இடத்தில் அரசு புறம்போக்கில், அதிலும் குறிப்பாக அரசுக்குப் பயன்படாத புறம்போக்குகளில் மேய்ச்சல், நத்தம், நீர்வழி, மந்தைவெளி, மயானம், பாட்டை போன்ற அரசு புறம்போக்குகளில் குடியிருந்த ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகின்ற திட்டத்தைச் சிறப்புத் திட்டமாக அறிவித்து, கடந்த காலத்திலே பல இலட்சம் ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கச் செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால், அந்தத் திட்டம் சிறப்புத் திட்டம் என்கின்ற முறையில் கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே அதற்குக் காலநிர்ணயம் செய்யப்பட்டு, அது நிறைவேறியது. பிறகு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, கழக ஆட்சியில் நில உச்சவரம்புச் சட்டம்....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிபந்தனைக்கு உட்பட்ட நிலங்களுக்குப் பட்டா கொடுத்ததாக—முந்தைய அரசு அதை கொடுத்தது என்று—சொன்னார்கள். அவர்கள் கொடுத்ததை அவர்களே முடித்துக்கொண்டார்கள். நாங்கள் முடிக்கவில்லை என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 31-3-2001-றோடு முடித்துக்கொண்டார்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புத் திட்டம் அது. தேர்தலுக்கு முன்பே முடிந்துவிட்டது என்றுதான் சொன்னேன். நீங்கள் கால நீட்டிப்புச் செய்யுங்கள் என்றுதான் இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுத்தேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாங்கள் ஆரம்பித்து வைத்த திட்டத்தை நாங்கள் முடித்து வைத்தோம் என்றுதான் சொன்னார்கள். அதற்குத்தான் நான் மறுப்பு சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது கடந்த சட்டமன்றத் தேர்தலுக்காகத் தீட்டிய திட்டம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படியே வைத்துக்கொள்ளட்டும். 1970-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அறிவித்து, அதிலே 1,78,850 ஏக்கர் உபரி நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1,38,000 பேருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இலவச விவசாய நில ஒப்படைப்புத் திட்டம். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 52,792 பேர்களுக்கு விவசாய நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வெறும் 29,591 பட்டாக்கள்தான் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளுடைய முதுகெலும்பை உடைக்கக்கூடிய பாதைவரி ரத்து: ஒரு விவசாயி ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விவசாயத்திற்காக நீரை எடுத்துச் செல்கின்ற நேரத்தில், அரசு புறம்போக்கு வழியாக அந்த பைப்-லைன் அமைத்திருப்பார்கள். அப்படி அமைக்கப்பட்ட பைப்-லைனுக்குப் பாதைவரி என்கிற வரி இருந்தது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அந்தப் பாதை வரியை ரத்து செய்தது தலைவர் கலைஞருடைய ஆட்சி என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோலக் குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு வரி விதிப்பிலே பல பிரச்சினைகள் இருந்தன. குறிப்பாக, புஞ்சைப் பயிர்களுக்கு பாசனத்திற்காகத் தண்ணீர் திறக்கப்பட்டால், நஞ்சைப் பயிர் வைத்தால் அதற்குத் தண்ட தீர்வை விதிக்கப்பட்டது. அந்த தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டும் என்று சொல்லி விவசாயிகள் பல ஆண்டுகாலம் கோரிக்கை வைத்தார்கள். அது தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் ஏற்கப்பட்டு, அந்த வரி ரத்துசெய்யப்பட்டது என்பதையும் அதற்கு முன்பு விதிக்கப்பட்ட வரியையும் ரத்து செய்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்லாமல், கீழ்பவானி பாசன விவசாயிகளுக்குப் பயிர்வாரிக் கட்டுப்பாட்டை நீக்கி, ஏக்கர்வாரித் தீர்வை விதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்று



கீழ்பவானி விவசாயிகளுக்கு வரப்பிரசாதமானத் திட்டங்களை வழங்கினார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, பட்டா பாஸ்புத்தகம் என்ற சிறப்பான திட்டம் கொண்டுவரப்பட்டது. நில உரிமையாளர்கள் வரவேற்கக்கூடிய திட்டமாக இது அமைந்திருக்கிறது. இவ்வளவு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருந்த காலத்திலும், என்னுடைய பூமியை இன்னொருவர் கிரயம் செய்யக்கூடிய வாய்ப்பெல்லாம் முன்பு இருந்தது. சட்டத்தில் ஓட்டை இருந்தது. அதைத் தடுக்கின்ற வகையிலே நில உரிமையாளர்களுக்கு அந்த பட்டா பாஸ்புத்தகத்தை வழங்குகின்ற திட்டத்தை கழக ஆட்சியிலே துவங்கி வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதேபோல, பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டு, மேல்படிப்பிற்கோ, வேலைவாய்ப்பிற்கோ மாணவர்கள் செல்லவேண்டுமென்று சொன்னால், பெற்றோர்களுக்குப் பெரிய சுமையாக இருந்தது. தங்கள் குழந்தைகளுக்கு வேண்டிய சான்றிதழ்கள் பெற வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம் என்று அலைந்துகொண்டிருந்தார்கள். குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் எல்லாம் பெறுவதற்காகப் பள்ளியிலேயே தலைமை ஆசிரியர் மூலம் வருவாய்த் துறையினரின் ஒத்துழைப்போடு வழங்குகின்ற மகத்தான திட்டத்தை அறிவித்தவர் தலைவர் கலைஞர்.

அதேபோல, கடந்த ஆட்சியிலே நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததைப்போல, தரமான இலவச வேட்டி, சேலை வழங்கினோம். ஆனால், கடந்த நிதிநிலை அறிக்கையிலே ஏறத்தாழ 139 கோடி ரூபாய் என்று அறிவித்தீர்கள். ஆனால், ஒருவருக்கும் இலவச வேட்டி சேலை வழங்கவில்லை. துண்டையும் காணோம், துணியையும் காணோம்.

அதேபோல, விவசாயத் தொழிலாளர் நலன் அமைப்புச்சாரா நல வாரியம். திக்கற்றுக் கிடந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்குகின்ற வகையிலே, அவர்களிடமிருந்து மொத்த சந்தாவாக ரூ. 100 செலுத்தினால், அவர்களுக்கு பல நலத் திட்டங்களை அறிவித்தது தலைவர் கலைஞர் அரசு. அந்த அடிப்படையிலே, ஏறத்தாழ 8 இலட்சம் பேர் அதில் உறுப்பினராகச் சேர்ந்து ஏறத்தாழ 8 கோடி ரூபாய் இப்போது அரசிலே இருப்பு இருக்கிறது. அந்த நல வாரியத்தை இந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் குற்றச்சாட்டாக நான் குறிப்பிடுகின்றேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் (Tamil Nadu Agricultural Labour Welfare Board) என்பதில் அதனுடைய உறுப்பினர்கள், குறிப்பாக--members representing the Government--அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் மொத்தம் 9 பேர் என்றும், அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள் தொழிலாளர்களில் 9 பேர் என்றும் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் எல்லாம் கடந்த கால ஆட்சியிலே அவர்கள் கட்சியின் உறுப்பினர்களாகவே நியமிக்கப்பட்டார்கள். அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த வாரியமானது செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிலே 9 பேர் கட்சி உறுப்பினர்கள் போடப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இயக்குநர்கள் போர்டு என்பதிலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தந்தக் கட்சியைச் சார்ந்தவர்களை நியமிப்பது வழக்கம்தான். அதனால், நடவடிக்கை என்பதற்கும் வாரியம் செயல்படுவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இந்த வாரியத்தின் உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலைப் பார்த்தால் தெரியும். விஜயன் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். திருநாவுக்கரசு என்பவரும் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர். ஆக, வாரியத்தைப் பொறுத்தவரையிலும், வாரியம் செயல்பாட்டில்தான் இருக்கிறது என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆட்சி மாறியிருக்கிறது. உறுப்பினர்களும் கண்டிப்பாக மாற்றப்படவேண்டும். ஆகவே, உறுப்பினர்களை மாற்றியபின் கண்டிப்பாக வாரியம் செயல்படும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அந்த மாற்றங்களைச் செய்துகொள்வதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை. நீங்கள் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களையே நியமித்து, வாரியத்தை சிறப்பாகச் செயல்படுத்துங்கள் என்றுதான் இந்த நேரத்தில் வேண்டுகோள் வைக்கிறேன்.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய idea ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இனி இந்த ஆட்சியில் எந்த வாரியத்திற்கு உறுப்பினர்கள் போட்டாலும், கட்சிக்காரர்களைப் போடாமல் பொது வாழ்வில் இருப்பவர்களைப் போடுவது என்ற உறுதிமொழியைத் தந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு) அப்படிச் சொல்லவேயில்லை. வாரியத்தில் தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். புதிதாக உறுப்பினர்கள் போடப்படுவார்கள் என்றுதான் கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் அப்போதைய ஆளுங்கட்சிக்கு வேண்டியவர்கள்; இவர்கள் இப்போதைய ஆளுங்கட்சிக்கு வேண்டியவர்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது. அதேபோல, 1989-91 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில், திருவண்ணாமலை, நாகப்பட்டினம் என்று இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதேபோல, 1996-2001 ஆட்சிக்காலத்தில் நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர், அரியலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களும், அதேபோல, 10 வருவாய்க் கோட்டங்களும், 24 வருவாய் வட்டங்களும், 11 புதிய பிர்க்காக்களும் உருவாக்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்களை எடுத்துக்கொண்டால், 1991-96 அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வெறும் 10 கோடி ரூபாய் அளவுக்குத்தான் கட்டப்பட்டன. ஆனால், கழக ஆட்சியில் 77 கோடி ரூபாய் அளவுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களும், வட்டாட்சியர் அலுவலகங்களும் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் என்று எடுத்துக்கொண்டால் தூத்துக்குடி, சென்னை, விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், திருவாரூர், நாகப்பட்டினம்,

திருவள்ளூர், தேனி என்று 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கான கட்டடங்களும், 11 வருவாயக் கோட்டாட்சியர் அலுவலகங்களும், 13 வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

அதேபோல, வருவாய்த் துறைக்கான வாகனங்கள் வாங்குதல்: தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் நாலரை ஆண்டு காலத்தில் 7 கோடி ரூபாய் அளவுக்கு 256 வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டு இருக்கின்றன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ரூபாய் 3 கோடியே 39 இலட்சத்திற்கு 129 வாகனங்கள்தான் வாங்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன.

கலைஞர் என்றாலே கணினி என்று சொல்லக்கூடிய அளவிலே கழக ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் கணினி புகுத்தப்பட்டது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். வருவாய்த் துறையில் தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக அளவிலும், வட்ட அலுவலகங்களிலும் கணினி மயமாக்கல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதேபோல, நில அளவைத் துறையில் அதி நவீன தொழில் நுட்பமான 'டிஜிட்டல் கடாஸ்ட்ரல்' முறையில் நில அளவையின் தேவை உணரப்பட்டு, விண்கோள் சமிக்ஞை அளவின் துணையோடு ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் பொன்னேரி வட்டத்தில் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதேபோல, சேப்பாக்கத்தில் 3 கோடி ரூபாய் செலவிலும் மாவட்ட அளவில் 3 கோடி ரூபாய் செலவிலும் ஆவணக் காப்பகங்களுக்காகக் கட்டடங்கள் கட்டப்பட்டன. அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடம் மட்டும் தாருங்கள். 4 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அமைச்சர் குறுக்கிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிய நேரத்தைக் கழித்து தான் உங்களுக்கு நேரம் தருகிறேன். நிறையப் பேர் பேசவேண்டும். இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.



முற்பகல் 11-50

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் மூன்றாயிரத்திற்கும் குறைவான அசையாச் சொத்துகளுக்கு, கலைஞருடைய ஆட்சியில், விற்பனை வரியும், முத்திரைத் தீர்வையும், பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டது. இந்த ஆட்சி, அதை, ஆறாயிரமாக உயர்த்த வேண்டும் என இந்த நேரத்தில் கோரிக்கை வைக்கிறேன்.

அதேபோல, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில், 22 ஆயிரம் பேர்களுக்கு ஆவண எழுத்தர் உரிமம், கழக ஆட்சியிலே வழங்கப்பட்டிருக்கிறது. பதிவுத் துறை கணினிமயமாக்கப்பட்டது. கணினி திட்டத்தில் தொடங்கி, ஆவண பாதுகாப்பு, வில்லங்க சான்றிதழ், வழிகாட்டு மதிப்புத் தகவல் போன்ற பிற பொது மக்களுக்கான திட்டங்கள் எளிதாக்கப்பட்டன. அதேபோல, கடந்த காலங்களில், தமிழகத்தில் முத்திரைத்தாள் பதிவு கட்டணங்கள் அதிகமாக இருந்த காரணத்தினாலும், அதை ஒப்பிட்டுப் பார்க்கையிலே கேரளா போன்ற மாநிலங்களில் குறைவாக இருந்த காரணத்தினாலும், சொத்துகளை வாங்கக்கூடியவர்கள், கேரளா போன்ற மாநிலங்களுக்குச் சென்று பதிவு செய்தார்கள். அதனால், அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது. கழக ஆட்சி தொடங்கப்பட்ட நேரத்தில் பதிவுத் துறையில், 760 கோடி ரூபாயாக இருந்த முத்திரைத்தாள் வருமானம் ஆட்சி நிறைவு அடைந்த நேரத்திலே 1170 கோடி ரூபாய் அளவிலே வருமானம் உயர்த்திக் காட்டப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலக் கழக ஆட்சியில், ஏறத்தாழ 340 கோடி ரூபாய் அளவுக்கு, இயற்கைச் சீற்றங்கள் துயர் தணிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்பதையும், அதேபோல, எழுதுபொருள் அச்சுத்தொழில்—அரசுக்குச் சொந்தமானது—நவீனமயமாக்கப்பட வேண்டும்; அப்படி நவீனமயமாக்கப்படுகின்ற நேரத்தில், அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில் நுட்பங்களைக் கற்றுத் தருவதற்கு இந்த அரசு முனைப்போடு செயல்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலக் கழக ஆட்சியில், என்னுடைய தொகுதியில், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி அருகில், நல்லதங்காள் ஓடையின் குறுக்கே சுமார் 32 கோடி ரூபாய் அளவிலே அணை கட்டுகின்ற திட்டம், 5 ஆயிரம்

ஏக்கர் நிலம் பாசனம் பெறக்கூடிய அளவிலே திட்டம் உருவாக்கப்பட்டது. தேர்தல் நெருங்கிய நேரத்திலே, பல சூழ்நிலைகள் ஏற்பட்டு, நில அளவை எல்லாம் முடிவுற்று, இன்னும் வருவாய்த் துறையின் மூலம் நிலத்தினுடைய மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. அதை நிர்ணயம் செய்து, அதற்குரிய நில உரிமையாளர் பணத்தையும், அதுபோல மற்றப் பணிகளும் துரிதமாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வெள்ளக்கோவில் பிர்க்காவை இரண்டாகப் பிரித்து, முத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு பிர்க்காவும், வெள்ளக்கோவில் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றும், வெள்ளக்கோவில், மூலனூர் போன்ற சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு 2 நவீனக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நான் ஏற்கெனவே கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுத்து இருந்தாலும், இது வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது என்பதற்காக, பேரவைத் தலைவர் அவர்களே, இதை அனுமதிக்க வேண்டுகிறேன். '[ஈரோடு மாவட்டம், திங்களூர் காவல் நிலையம் தொடர்பான பிரச்சினை. (மணியடிக்கபெற்றது) ஒரே ஒரு பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை கவன ஈர்ப்பாக தனியாக எடுத்துக்கொள்வோம்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது; இன்னும் 9 பேர் பேசவேண்டும். முடித்து விடுங்கள். (குறுக்கீடு) திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அதை விட்டுவிடுகிறேன்; உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி, கொஞ்சம் உட்காருங்கள்; அவர் முடித்துவிடட்டும். ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுங்கள்.



**திரு. மு.பெ. சாமிநாதன்:** அது ஒன்றுமில்லை; ஆடு மாடுகள் எல்லாம் செத்துப்போய் விட்டன; அதை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

இப்போது சைதாப்பேட்டை போன்ற தொகுதிகளில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது; அதிலே பணியாற்றக்கூடிய ஒரு A.E.E., 10 J.E. போன்றவர்கள், இப்போது தேர்தல் அறிவித்த பிறகு, பழைய தேதியிட்டு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், இது எப்படி இந்தத் தேர்தல் விதிமுறைக்குப் பொருந்தும் என்பதையும் இந்த நேரத்தில் உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

அதுபோல, அன்னதானத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. காவல் துறையை வைத்து எதிர்க் கட்சிகளை, பத்திரிகையாளர்களை ஒடுக்குவதை நிறுத்திவிட்டு, அன்னதானத்தைச் சிறந்த திட்டம் என்று சொன்னார்கள்; அதைவிடச் சிறந்தது நிதானம் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின்மீது என்னைப்பேச வைத்த, ஏழு கோடி மக்களின் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கியும், தங்களை வணங்கியும், என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நான் பக்கவாத நோயால், அரசு மருத்துவமனையில் இருந்தபோது, எத்தனையோ வேலைகள் இருந்தும், அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி, ஒன்றரைக் கோடி தொண்டர்களிலே நானும் ஒருவன் என்பதை உணர்ந்து, இந்த ஏழைத் தொண்டனையும் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்து, ஆறுதல் அளித்துவந்த, என் அன்பு தெய்வமாகிய புரட்சித் தலைவி அவர்களை என் வாழ்நாளில் என்றைக்கும் நான் மறக்கமாட்டேன்.

இப்போது இங்கே வருவாய்த் துறை மானியத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இங்கே பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தாலும், அம்மா அவர்கள், என்னை—ஒரு சாதாரண தொண்டனைப்—பேச வைத்து அழகுபார்க்கிறீர்களே, அந்தத்

[illegible] நன்றி சொல்ல விரும்புகிறேன். ஒருவர் இங்கே பேசினார்: துணையைக் காணோம், துணியைக் காணோம் என்று சொன்னார். ** (குறுக்கீடுகள்) நீங்களே பார்த்தீர்கள். ஆகவே, அவர்கள், இப்படிப்பட்டவர்கள் பேசக் கூடாது; ஆனாலும் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்)

பகல் 11-55

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சால்வை போட்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) . . . .

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சட்டச் சிக்கல் வந்தபோது (குறுக்கீடுகள்) ஏதேதோ இப்போது பேசினார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) . ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து எல்லோரும் அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இடது பக்கம் இருப்பவர்கள் அமர்ந்தால்தான் வலது பக்கம் இருப்பவர்கள் அமருவார்கள். முதலில் இடது பக்கம் இருப்பவர்கள் அமருங்கள். திரு. ஜெமினி ராமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடுகள்) ஸ்பீக்கர் சார், ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) . . . Point of order ... (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. மு.பெ. சாமிநாதன்:** Point of order.......... (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) .... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெமினி ராமச்சந்திரன், பேசுங்கள்; மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் Point of order கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உட்கார்ந்தும் point of order என்ன என்று கேட்கிறேன். Point of order என்று எத்தனை பேர் எழுந்து கேட்பது? (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order (குறுக்கீடுகள்) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்; இல்லையென்றால் வெளியேற்றுவேன். (குறுக்கீடுகள்) . . .

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்பு சட்டமன்றம் முடிந்து சட்டசபையிலே இருந்து வெளியே போனார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) முதலமைச்சர் அவர்கள் மீண்டும் சட்டச் சிக்கலைச் சந்தித்து, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) என்னதான் காக்காயாகக் கத்தினாலும், இதற்கு யாரும் அஞ்சமாட்டோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of order ஒருவர்தான் கேட்க முடியும். (குறுக்கீடுகள்) Point of order யார் கேட்பது? மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** சட்டச் சிக்கலைச் சந்தித்து, மீண்டும் முதலமைச்சராக, (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அவர்கள் (குறுக்கீடுகள்).........

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சாமிநாதன் point of order கேட்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால் நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சத்தம் போடாமல் இருந்தால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) . . .

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சாமிநாதன், point of order கேட்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால் point of order யார் கேட்கப் போவது, பரிதி இளம்வழுதியா, சாமிநாதனா? நீங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெமினி ராமச்சந்திரன், கொஞ்ச நேரம் உட்காருங்கள். திரு. சாமிநாதன், point of order என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார்கள். அது எந்தப் பத்திரிகையிலே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆதாரத்தோடு பேச வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்து இருக்கிறது. (குறுக்கீடுகள்) பத்திரிகைச் செய்தி இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்து இருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகையிலே வந்து இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பத்திரிகையைச் சரியாகப் படியுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்களுடைய பேச்சில் குறுக்கிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்றபோது--மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மிக நன்றாக ஏற்கெனவே தீர்ப்புரைகள் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள்; சரியான ஆதாரத்தோடு சொல்வதைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமில்லை. ஆனால், ஏதோ, பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட பொத்தாம் பொதுவான வார்த்தைகளாக, ** என்பதையும் எங்களுக்கும் சொல்லத் தெரியும். ஆனால், ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும்; இல்லை என்றால், அந்தக் குற்றச்சாட்டை வாபஸ் பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலவச வேஷ்டி, சேலை; தமிழக அரசின் சார்பாக வழங்கப்பட்ட இலவச வேஷ்டி, சேலை ** என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நானும் படித்தேன். என்ன சொல்கிறேன் என்றால், அதை இப்போது சொல்வதற்கு முன்னால் அந்தப் பத்திரிகையைக் கொண்டுவந்து என்னிடத்திலே கொடுத்துவிட்டுப் பேசுங்கள். அதற்கு முன்னால் பேசியது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜெமினி ராமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது இன்னார் என்று யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதற்கு அப்புறம் பேசுங்கள்

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** எனக்கும் பேசத் தெரியும். நான் இன்னார் என்று சொல்லவில்லை. ஆகவே, யாரும் கேட்க முடியாது. ஆனால், இவர்கள் எப்படிச் சொல்கிறார்களோ, அந்தப் பாணியிலேதான் குற்றம் சொல்லி இருக்கிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெமினி, அதை விட்டுவிட்டு அதற்குப் பிறகு உள்ளதைப் பேசுங்கள்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** ** அதையும் நீக்க வேண்டும் அல்லவா!

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் நீக்கப்படுகிறது.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** வேண்டாம் என்பதை நீக்குங்கள். அவர் சொன்னாரே அந்த வாசகத்தை நீக்குங்கள். பேரவைத் தலைவர்களே, இங்கே துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று சொன்ன வாசகத்தை நீக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, சட்டச் சிக்கல்களைக் கொண்டு வந்து, புரட்சித் தலைவியை இங்கே ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்து, அவருடைய அந்த வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்த கூட்டம் இந்த நாட்டில்தான் இருக்கிறது என்பதையும் நாம் மறக்கவில்லை. ஆனாலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவற்றையெல்லாம் முறியடித்து ஆண்டிப்பட்டி தொகுதியில் வேட்பாளராக நின்றார்கள்; ஆனால், வேட்பாளராக நின்ற புரட்சித் தலைவி பயப்படவில்லை. ஒரு பக்கம் தி.மு.க. நண்பர்கள் வேட்பாளர்களை அறிவித்துவிட்டார்கள். அப்படி வேட்பாளரை அறிவித்துவிட்டு . . .

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? என்ன விஷயம்? பொன்முடி, என்ன விஷயம்? (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். ஒவ்வொரு தடவை பேசும்போதும் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** வேட்பாளராக அறிவித்துவிட்டு, மறுபக்கம் தேர்தலை நிறுத்தச் சொன்னது . . .

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன பிரச்சினை, சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்தோம் என்று சொல்கிறார். அது தேர்தல் கமிஷனால் தள்ளுபடி செய்யப்பட்டது. தேர்தல் கமிஷன் ஒன்றும் எங்கள் கட்சி உறுப்பினர் கிடையாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகப் பேசுகிறார். உட்காருங்கள். நீங்கள் என்ன ஒவ்வொன்றிலும் தலையிடுகிறீர்கள்? உட்காருங்கள். அவர் பொதுவாகப் பேசிக்கொண்டு செல்கிறார். ஏன் ஒவ்வொன்றிலும் தலையிட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? ஜெமினி, பேசுங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** பல்வேறு சோதனைகளை எல்லாம் தாங்கி மூன்றாவது முறையாக ஆட்சியிலே உட்கார்ந்திருக்கிறார்கள். அதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் தாறுமாறாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலசலப்புகளுக்கு எல்லாம் நாங்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் பயப்படமாட்டோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கும் தெரியும்; நீங்கள் உத்தமர்களா, நல்லவர்களா என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் பட்ஜெட்டைப் பார்த்தால், இந்தப் பட்ஜெட்டிலே ஒன்றுமே கிடையாது, எல்லாம் சுற்றி வளைத்துப் பார்த்தால் பூஜ்யமாக இருக்கிறது என்று சொன்னார்கள். பூஜ்யமாக ஆக்கிவிட்டுப் போன உங்களுடைய அந்தச் சரித்திரத்தை மாற்றி, ராஜ்யமாக ஆக்கிக் காட்டிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. புரட்சித் தலைவி இப்போது ஆண்டிப்பட்டியிலே நின்றபோது, ஏன் நம்முடைய கூட்டணிக் கட்சியிலே இருப்பவர்கள்கூட அன்றைக்கு ஆதரவு தராவிட்டாலும் பரவாயில்லை அபஸ்வரத்தை வாசித்திட்டார்கள்; இருந்தாலும் கவலையில்லை, இந்தத் தேர்தலிலே அவரவர்கள் வெற்றி பெற வேண்டுமென்று தன்னை வருத்திக்கொண்டு பட்டி தொட்டியெல்லாம் சுற்றி வெற்றி பெறச் செய்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கு நிற்கும்போது அவர்களுக்கு ஆதரவு தர மனமில்லாமல் போய்விட்டது. அதுபற்றிக் கவலை இல்லை. கவர்னர் உரையில் 15 அம்சத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். பட்ஜெட்டிலே பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். புரட்சித் தலைவி அவர்கள் இங்கே பட்ஜெட் உரையின்மீது பேசும்போது அன்னதானத் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், பூந்தோட்டம், பழத் தோட்டம், 39 ஆயிரம் தொகுப்பு வீடுகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபோல ஆதிதிராவிடர்களுக்கு சைக்கிள்களை இனாமாகக் கொடுப்பது தொடரப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அன்னதானத் திட்டம் சாதாரண திட்டமா? எந்தக் கோயிலிலாவது, எந்தக் காலத்திலாவது, யாராவது போட்டார்களா? புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆலயங்களிலே அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்து போட்டார்கள். அதற்கும் அபஸ்வரம் வாசிக்கிறார்கள். எத்தனை அபஸ்வரம் வாசித்தாலும் அம்மா அவர்களுடைய ஆட்சியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது என்பதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இப்போது வருவாய்த் துறைமீது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையின் மீது நான் பேச விழைகிறேன். கடந்த ஆட்சி இருந்தபோது ஆரணி தொகுதியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஓர் உத்தரவு போடப்பட்டது. என்னவென்றால் 31-3-2001 ஆம் தேதிக்குள் எவ்வளவு பேருக்குப் பட்டா வழங்க வேண்டுமோ அனைவருக்கும் பட்டா வழங்க மேற்கண்ட தேதியை நிர்ணயம் செய்தது. அது ஏனென்றால், தேர்தல் வர இருந்த காரணத்தால் இந்த உத்தரவு போடப்பட்டது. ஆனால், அரசு அதிகாரிகள் உரிய நேரத்தில் அதைச் செய்து முடிக்காத காரணத்தினால் நின்று போய் விட்டது. அவர்கள் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றாகி விட்டது. மீண்டும் புரட்சித் தலைவியே ஆட்சியைப் பிடித்தார்கள். பட்டா வாங்கித் தருகிறேன் என பணத்தை வாங்கியவர்கள் பட்டா கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். குறிப்பாக ஆரணி தொகுதியில் மட்டும் சுமார் 3,000 பேருக்குப் பட்டா வழங்குவதாக அறிவித்தார்கள். அதுவும் குளத்துப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கை எல்லாம் நத்தம் புறம்போக்காக மாற்றி அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் கொடுக்க உத்தரவு போடப்பட்டது. ஆனால் அதிகாரிகள் பார்த்தார்கள். நாம் மாட்டிக்கொள்வோம் இதிலே, கொடுக்கக் கூடாது என்று ஒதுங்கி விட்டார்கள். அன்றைக்குக் கொடுக்கப்படவில்லை.

பிற்பகல் 12-05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா வந்த பிறகு என் தொகுதியிலே ஏறத்தாழ 3,000 பேர் பட்டா கேட்டு மனுச் செய்து இருக்கிறார்கள். அந்தப் பட்டாவை அம்மாவினுடைய ஆட்சியிலே வழங்க வேண்டும். உதாரணமாக வருவாய்த் துறை மீது நடக்கின்ற மானியம் என்பதால்



மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகிய அனைவருக்குமே அரசால் உருவாக்கப்பட்ட குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியிலேதான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோலப் பரம்பரையாக பாரம்பரியமாகப் படிக்காதவர்கள், பதவி வகித்த பழைய முறையை மாற்றிப் தகுதி மற்றும் திறமை அடிப்படையில் 16-11-1980 முதல் டாக்டர் புரட்சித் தலைவர் மறைந்த மாமேதை எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் படித்தவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள் பதவி வழங்கியதன் மூலம் நிர்வாகச் சீர்கேட்டை சீரமைத்தார்கள். மேலும், இவர்களுக்குத் தகுதி மற்றும் பணி மூப்பு அடிப்படையில் வருவாய்த் துறையில் உதவியாளர்களாகப் பதவி உயர்வும் அளிக்க எங்கள் அம்மா ஆணையிட்டுள்ளார்கள்.

இயற்கைச் சீற்றங்களால் அதாவது வெள்ளம், புயல், தீ விபத்து ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000/- அவர்கள் குடும்பத்தினரிடம் மாவட்ட ஆட்சியரால் உடனடியாக வழங்க வேண்டுமென்றும், முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2,000/- வீதமும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1,000/- வீதமும் கடந்த 04-10-2001 முதல் எங்கள் அம்மா அமல்படுத்தி வழங்கியதோடு மட்டுமல்ல, பசு, காளை மற்றும் எருமை போன்ற கால்நடை ஒன்றுக்கு ரூ.5,000/- வீதமும் பசு மற்றும் எருமைக் கன்றுக்குட்டிக்கு ரூ.1,000/- வீதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால்நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கிடும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இத்தொகை தாமதமின்றி பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடியாகக் கிடைக்கும் வண்ணம் கருவூல விதி 27-ன்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கே அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இதுமட்டுமல்லாமல் வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்ட நெல், நிலக்கடலை, கரும்பு, பருப்பு வகைகள், பருத்தி மற்றும் சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயறு வகைகளுக்கும், தோட்டக்கலைப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க எங்கள் அம்மா ஆணையிட்டுள்ளார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணித் தொகுதியில் பையூர், எம்.ஜி.ஆர். நகர், ஆரணி பள்ளிக்கூடத் தெரு, கொசப்பாளையம் களத்து மேட்டுத் தெரு, ஆரணி அருணகிரி சத்திரம் தெரு, வெள்ளக்குளம் சபாஷ்கான் தெரு, வி.டி.எஸ். தெரு, ராந்தம், கொரட்டூர் பகுதி போன்ற இன்னும் பல கிராமங்களில் சுமார் 3,000 பேருக்குப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. 40 ஆண்டுகளாக வீடு கட்டி இருந்தும், பட்டா வழங்கவில்லை. கடந்த ஆட்சியில் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு வழங்க இருந்ததை நாங்கள் தடுத்து நிறுத்தினோம். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு இவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி தொகுதிக்கு வருகிறேன். இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஆரணி தொகுதி, ஆற்காடு-ஆரணி-வந்தவாசி சாலை, ஆரணி-செய்யார் சாலை, ஆரணி-தேவிகாபுரம் சாலை, ஆரணி-போளூர் சாலை இவைகளை அகலப்படுத்தி — நீண்ட காலமாக 1 அடி பள்ளம் உள்ள இந்தச் சாலையை — சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், ஆரணியிலுள்ள தனியார் கூலி நெசவாளர்களுக்கு கூலியை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தனியார் கூலி நெசவாளர் சங்கத்தினர் கூலி உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதனை நீங்கள் வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தேவிகாபுரம் கோவிலை நம்முடைய ஆட்சியிலே புதுப்பித்து திருப்பணி நடந்து வருகிறது. அங்கே புதிதாகத் தேர் ஒன்று வேண்டுமென்று சென்ற பட்ஜெட்டிலே பேசும்போது கேட்டிருந்தேன். அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்தார்கள். அந்தத் தேர்ச் செலவினை அரசாங்கமே ஏற்று-எப்படி தாரமங்கலத்திற்கு வழங்கினார்களோ ஒரு தேர் அதேபோல —தேவிகாபுரத்திற்கும் தேர் அரசினுடைய செலவிலே வழங்க அனுமதி வழங்கக் கோருகிறேன்.

கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு கட்டடம் கட்டித் தந்தது போன்று அவர்கள் மேலும் பல்வேறு கோரிக்கைகளை அம்மா அவர்களின் பார்வைக்குச் சமர்ப்பித்துள்ளார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

ஆண்டிப்பட்டிக்கு அடுத்ததாக இப்போது தொடு திரை கணினி மையம் எங்கள் தொகுதி ஆரணி தாலுகா அலுவலகத்திற்கு அம்மா



அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக ஆரணி தொகுதி மக்கள் சார்பில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அவையிலே என்னை இந்த அளவுக்குப் பேச வைத்த அன்புத் தெய்வங்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் இங்கே என்னை எதிர்த்துப் பேசியவர்களுக்கு நான் பழைய பாணியிலே பதில் சொல்ல முடியவில்லை. ஆனால், உடல் நலம் சரியில்லை என்பதால் இப்போது சொல்கிறேன், நீங்கள் என்னதான் மாயாஜாலம் காட்டினாலும், என்னதான் நீங்கள் உங்களுடைய எக்காளத்தைப் பண்ணினாலும், வெளிநடப்புச் செய்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை ஆட்டிப் பார்க்கவோ, அசைத்துப் பார்க்கவோ உங்களால் முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) திட்டவட்டமாகச் சொல்லி, வாழ்க புரட்சித் தலைவி என்று சொல்லி, இந்த வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை ஆகிய மானியங்கள்மீது பேச வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வெட்டுத் தீர்மானங்கள் முழுவதையும் படித்துப் பார்த்தால், வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திலேயும் பட்டா வேண்டும், பட்டா வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசு இந்த நாட்டு மக்களுக்கு வருவாய்த் துறை மூலம் விரைவில் பட்டா கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று முதலில் என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

அடுத்தபடியாக கிராம நல அதிகாரிகள். அவர்களுக்குப் பதவி உயர்வு வெறும் 10 சதவிகிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நன்கு படித்த, நீண்டநாள் அனுபவம் மிக்க அந்த கிராம நல அதிகாரிகளுக்கு 25 சதவிகிதமாவது பதவி உயர்வுக்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பிடித்த வீடுகளுக்கு வெறும் 1000 ரூபாய் இப்போது கொடுக்கப்படுகிறது. அதை 5000 ரூபாயாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இப்போது ரூபாய் 2000 கொடுக்கப்படுகிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** 2000 ரூபாய்கூடப் போதாது. ஆகவே, 5000 ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காலையில் பாண்டிச்சேரி சட்டமன்றத்தில் ஓர் அருமையான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. 40 வயது வரை திருமணம் ஆக முடியாத பெண்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படும் என்று பாண்டிச்சேரி அரசு இன்று அறிவித்திருக்கிறது. அந்த நல்ல செய்தியை இங்கே நான் தெரிவிப்பதோடு நம்முடைய அரசாங்கமும் 40 வயது வரை திருமணம் ஆக முடியாத பெண்களுக்குப் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புரட்சித் தலைவி ஆட்சியிலே எல்லோருக்கும் திருமணம் நடக்க வேண்டும். ஆகவே, இது வேண்டாமே. (சிரிப்பு) திருமணம் நடப்பதற்கு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** திருமணம் நடந்தால் மகிழ்ச்சி. ஒருவேளை திருமணம் நடைபெறாமல் போய்விட்டால் அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க வேண்டும்.

அடுத்து, Public Service Commission மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில Revenue உதவியாளர்களுக்கு 200 பேர்களுக்கு இதுவரை வேலை கொடுக்கப்படவில்லை என்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதனையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் மிகுந்த வறட்சிக்கு உள்ளாகி இருப்பதோடு ஒரு பெரிய கலவரப் பகுதி என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அங்கு ஏராளமான உயிர்களுக்குக்கூட பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் சாயல்குடி என்பது மிக மிகப் பிற்படுத்தப்பட்ட, மிக ஒதுக்கப்பட்ட இடமாக இருப்பதால் அங்குக் கலவரம் வருகின்றபோது, அதிகாரிகள் போய்ச் சேரவில்லை என்கின்ற குறையால் அங்கே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அங்கே ஒரு கோட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறோம். எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்குச் சிறப்பான முறையில் அறிக்கையை அனுப்பியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, தயவுசெய்து - இப்போது சிக்கன



நடவடிக்கை என்று நீங்கள் சொல்வீர்கள் என்று சொன்னால், ஏற்கெனவே பிரித்த மாவட்டத்தைக்கூட ஒன்று சேர்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற ஒரு காரணத்தைக் காட்டி, - இந்தக் கோரிக்கையை நிறைவேற்றாமல் விட்டு விடவேண்டாமென்று பணிவோடு கேட்டு, சாயல்குடியில் ஒரு கோட்டாட்சியர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்ன காரணத்தால் அங்கே கோட்டாட்சியர் அலுவலகம் வேண்டுமென்ற எல்லாவிதமான விரிவான, குறிப்புகளையும் நான் அமைச்சரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோன்று சிவகங்கை மாவட்டத்தில் திருபுவனம் என்பது ஒரு பெரிய ஒன்றியமாக இருக்கிற காரணத்தால் அதை ஒரு தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி என்பது இன்று தமிழகத்தில் பல மாவட்டங்களில் இருக்கிறது. இங்கே பேசிய பலரும் அதைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மக்கள் குடிநீர் இல்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அரசு, மைய அரசுக்குத் தகவல் கொடுத்து அங்கிருந்து யாராவது வந்து வறட்சி நிவாரணம் தேவையா என்பதைப் பார்ப்பதற்கு நம்முடைய அரசு ஆவன செய்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் இப்போது குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் 4, 5 கி.மீ. நடந்து சென்றால்தான் தண்ணீர் என்ற மோசமான சூழ்நிலையிருக்கிற காரணத்தால், நம்முடைய அரசு உடனடியாக மத்திய அரசை அணுகி, வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு எந்தெந்தப் பகுதிகள் வறட்சியாக இருக்கின்றன என்று தெரிந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற ஒரு வழியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு ரூபாய் Revenue Stamp ஐந்து ரூபாய்க்குக்கூடக் கிடைக்காத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதேபோலப் பத்திரங்களும் கிடைக்காத சூழ்நிலை இருப்பதோடு, போலிப் பத்திரங்கள் ஏராளமாக வந்துக் கொண்டிருக்கின்றன. நேற்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்த்தேன். இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் நம்முடைய அரசு கவனமாகக் கவனிக்கவேண்டும்.

தமிழ்நாடு முழுமையும் இப்போது பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு இருப்பதற்குக் காரணம், market value, guideline value என்று

சொல்கிறார்கள். உதாரணமாக, சென்னையை எடுத்துக்கொண்டால் கூட ஈக்காட்டுத்தாங்கல் என்ற பகுதியில் ஒரு சதுர அடி 555 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதேநேரத்தில் guideline value என்று சொல்லி அரசு 612 ரூபாய் என்று அதற்கு ரேட் வைத்திருக்கிறது. இதன் மூலமாகக் கூடுதலாக 14 சதவிகிதப்படி ஒரு கிரவுண்டுக்கு ரூபாய் 20 ஆயிரம் கட்ட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் இப்போது பல நிலைகளில் பத்திரங்களைப் பதியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால்தான் பொருளாதார முடக்கம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு உணர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தை இரத்து செய்து 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் சமபந்தப்பட்ட அலுவலகம் மட்டும் இன்னும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையை அரசு கவனிக்கவேண்டும்.

G.O. 150 என்று சொல்லி, ஒரு G.O. போட்டார்கள். அந்த G.O. என்னவென்றால், அதாவது unapproved layout-க்கு என்று சொல்லி ஒரு சட்டத்தைப் போட்டார்கள். இந்தக் கட்டடப் பிளானை approve செய்கின்ற அதிகாரம் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் 15 சென்ட் நிலம் விற்றால் site approval-க்கு சென்னைக்கு வரவேண்டும். அதற்குப் பதிலாக ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு அதிகாரமும், அதை ஏற்றுக்கொள்கிற மேல் அதிகாரி Regional Director ஆகவும் இருக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

அதோடு பத்திரம் பதிகின்ற இடத்தில் இப்போது ஏராளமான பத்திரங்கள் பதியப் பெற்று, அந்தப் பத்திரங்கள் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை: காரணம், இந்த G.O. 150 இன்னும் தளர்த்தப்படாமல் இருப்பதன் காரணமாக எந்தப் பத்திரம் பதிந்தாலும் வெளியே வருவது கிடையாது.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த G.O. 150 சம்பந்தமாக Tirunelveli Land Promoters Association filed a Writ Petition before the High Court. இது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள். இந்த G.O. 150 போட்டது



சரிதான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்குமேலாக இப்போது பாதிக்கப்பட்டவர்கள் Writ Appeal-க்குப் போயிருக்கிறார்கள். ஆகவே தற்சமயம் அந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே போடப்பட்ட அந்த G.O.-150-ன் அடிப்படையிலேதான் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அரசு தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டு, நீங்கள் வேறு அரசாணை பிறப்பித்து இதன் வழிமுறைகளை வகுத்தீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக அதற்கான ஒரு தீர்ப்புத்தான் கிடைக்கும். எப்போதுமே சட்டத்தினுடைய அடிப்படையில்தான் தீர்ப்பு வருமேயொழிய வேறல்ல. (குறுக்கீடு) அவரே ஒரு சிறந்த வழக்கறிஞர்; அவருக்கும் தெரியும். ஆகவே இந்த G.O.150, போட்ட காரணத்தினாலேதான் தமிழ்நாடு முழுக்க unapproved layout பதிவு செய்த பத்திரங்கள்கூட இன்னும் release ஆகாமல் இலட்சக்கணக்கிலே தேங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஆளுநர் உரையிலே இந்த அரசு அந்த Real Estate-க்குப் புத்துணர்ச்சி அளிக்கப்படும் என்று ஏற்கெனவே வாக்குறுதி அளித்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் கூட சில விதிகளையெல்லாம் மாற்றியமைத்து பணப் புழக்கத்திற்கு ஏற்பாடு செய்து அறிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் G.O. 150-ஐ withdraw செய்து வேறு கொள்கைகளை வகுத்து இந்த unapproved layout-களை approve-செய்வதற்கு ஆவன செய்ய முயற்சி எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நீண்டகாலமாக இருந்துவரும், Section 17-ன்கீழ் உள்ள நிலங்களை ஆய்வு நடத்தி — ஆய்வு நடத்துவதற்கு ஓர்உயர்மட்டக் குழு அமைத்து — விவசாயிகளுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது பழைய ஜமீன் காலத்து நிலம் என்பதும், அந்த ஜமீன் abolition ஆன பிறகு, அந்த நிலங்கள் எல்லாம் இன்று ... (குறுக்கீடு) நம்முடைய நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அங்கே அந்த நிலங்களை எல்லாம் விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் பல தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே அந்த Section 17-ஐ ரத்து செய்து உயர்மட்டக் குழு அமைத்து நிலங்களை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Section 17-ன்கீழ் என்பது நீலகிரியிலே குறிப்பாக கூடலூர், பந்தலூர் வட்டாரப் பகுதிகளில் நீலம்பூர் ஜமீனுக்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நிலங்கள் அனைத்தும் அரசினாலே கையகப்படுத்தப்பட்டன. கையகப்படுத்தப்பட்ட பின்னாலே அந்த நிலங்களைப் பெரிய முதலாளிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். முப்பதாயிரம் ஏக்கர், நாற்பதாயிரம் ஏக்கர் Manjeswari Plantations, பிர்லா போன்றவர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மற்ற நிலங்களில் எல்லாம் மிகச் சாதாரணமான சிறிய விவசாயிகள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், பதினேழு சென்ட், 27 சென்ட் என்று வைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் அந்த நிலத்தையெல்லாம் அவர்களுக்கே ஒப்படைக்கவேண்டுமென்று, பட்டா செய்யவேண்டுமென்று பல காலமாக அங்கே கோரிக்கைகள் வைக்கப்பட்டு போராட்டங்களும் நடத்தப்பட்டன. 1970-களில் போராட்டம் நடைபெற்றதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கலைஞர் அவர்கள் ஒரு உறுதிமொழி அளித்தார்கள். சிறிய விவசாயிகளாகிய அவர்களுக்கே பட்டா செய்து கொடுத்துவிடுகிறோம் என்றும், நிலம்கூட ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்றும் கணக்கெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது அமல்படுத்தப்படவில்லை. பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகும் அங்கே உள்ள விவசாயிகள் நில வெளியேற்றம் செய்யப்பட்டார்கள். அதைக் கண்டித்து போராட்டம் நடைபெற்றன. நான் சாகும்வரை உண்ணாவிரதம் சென்னையிலே மேற்கொண்டேன். அந்த நேரத்திலே எம்.ஜி.ஆர். அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்கள். நிச்சயமாக மூன்று ஏக்கருக்கு உள்ளாக இருக்கிறவர்களுக்கு எல்லாம் இலவசமாக வீட்டு மனை நிலப் பட்டா வழங்கப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். சில பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, பலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை. அது பெரிய பிரச்சினை. கட்டப்பட்ட கட்டடங்களிலிருந்தும் அல்லது அங்கே விளைநிலங்களிலிருந்தும் இப்போது மீண்டும் அவர்கள் வெளியேற்றம் செய்யப்படுகிறார்கள். அங்கே பதட்டம் நிலவிக்கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக, 30 ஆண்டுகளாக, 40 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக இன்னும் சொல்லப்போனால், நீலம்பூர் ஜமீனுக்குக் குத்தகை செலுத்தி - அந்த ரசீது எல்லாம் மலையாளத்தில் இருக்கிறது - அந்த ரசீது வைத்துக்கொண்டிருப்பவர்கள்கூட வெளியேற்றம் செய்யப்படுகிறார்கள். அந்த நிலங்களில் இருக்கின்ற தேயிலைத்



தோட்டங்கள், காப்பித் தோட்டங்கள் அல்லது வேறு மிளகுத் தோட்டங்கள் போன்றவற்றிலிருந்து அப்பொருட்களை குத்தியெடுத்தும், அவர்களும் வெளியேற்றப்படுகிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். அவர்களிடமெல்லாம் முறையாக நீங்கள் ஒரு விசாரணை நடத்தி, பல ஆண்டுகாலமாக — இப்போது வந்தவர்களுக்குத், தரவேண்டுமென்று நான் சொல்லவில்லை. பல ஆண்டுகாலமாக — அங்கே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும், அங்கே அவர்கள் விவசாயம் செய்தால் விவசாயம் செய்வதற்கும், வியாபாரம் செய்தால் வியாபாரம் செய்வதற்கும் நீங்கள் கண்டிப்பாக ஏற்பாடு செய்து அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கவேண்டும் என்றும் நான் இந்த நேரத்திலே அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு கலைஞர் அரசில் சபாநாயகம் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் எங்களுடைய துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு வருவாய்த் துறை நிர்வாக சீர்திருத்த ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுமையும் அந்தக் குழு சென்று ஓர் அருமையான அறிக்கையை அரசிற்குக் கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையை உடனடியாக இந்த அவைக்கு வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒரு முக்கியமான கோரிக்கையை நான் வைக்க விரும்புகின்றேன். நம்முடைய அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டில் ஒரு பொற்கால ஆட்சி நடத்தியவர்கள். அவர்களுடைய நூற்றாண்டு விழா வருகிற ஜூலை 15 ஆம் தேதி வருகிறது. அவருக்காக "King Maker" என்ற ஒரு படம் எடுக்கிறார்கள். அந்தப் படத்திற்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டும் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டேன். அதேபோல அன்றைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்தும் கேட்டேன். அதேபோல நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களையும் பார்த்துக் கேட்டேன். இது பத்திரிகையிலே எப்படி வந்திருக்கிறது என்றால் என் பெயரைச் சொல்லாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் 3 கோடி ரூபாய் தமிழக அரசிடம் கேட்டு

காமராஜர் பெயரால் படம் எடுக்கப்போகிறார் என்றும் ஆனால் அதற்கு 50 இலட்ச ரூபாய்தான் செலவாகும் என்றும் 2½ கோடி ரூபாய் அரசாங்கப் பணத்தை அபகரிக்கத் திட்டம் போடுகிறார் என்றும் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அது யார். பெயரைச் சொல்லுங்களேன் என்று இன்னொருத்தர் கேட்கிறார். இருக்கை என்ற பெயர் உடையவர் என்று ஒரு பதில் வருகிறது இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால் அந்த இருக்கை என்ற பெயர் உடையவர் நான்தான். இதில் தயவுசெய்து வடிவேலறிய வஞ்சகம் கிடையாது. அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் பெயரால் ஒரு நல்ல படம் எடுக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் பெயரும் என் பெயர்தான். அவர் ஆ பாலகிருஷ்ணன், நான் சோ. பாலகிருஷ்ணன். ஆகவே நம்முடைய அரசு அதற்கு உதவி செய்ய வேண்டும்.

இங்கே கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதி எல்லாம் சிறப்பான முறையிலே அமைந்திருக்கின்றன. ஆனால் அருமைத் தலைவர் காமராஜர் அவர்களுடைய சிலை அங்கே குப்பை கொட்டுகிற இடமாகக் காட்சியளிக்கிறது. அந்த அருமைத் தலைவர் காமராஜர் அவர்களுடைய நூற்றாண்டு விழா நடக்கின்ற இந்த நேரத்தில் அந்த இடத்தை ஒரு சிறப்பான இடமாக மாற்றுவதற்கு நம்முடைய அரசு துணை புரியவேண்டும். தலைவர் காமராஜர் அவர்கள் இறக்கின்ற அன்று காலையில் பத்திரிகைக்கு ஒரு செய்தி கொடுத்தார், நாம் எல்லோரும் காந்தியடிகளை மனதில் நினைத்து, அவருடைய உயர்ந்த இலட்சியங்களையும் தத்துவங்களையும் மக்களிடையே நினைவுபடுத்தி, மனித சமுதாயத்தில் இருக்கும் போட்டி, பொறாமை, ஏற்றத்தாழ்வுகளை நீக்க அமைதியான முறையில் காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றி மனித சமுதாயம் உயருவதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (மணியடிக்கப்பெற்றது) ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவருடைய ஆத்மா சாந்தியடைந்துவிட்டது. அவருக்கு நூற்றாண்டு விழா வரவிருக்கிறது. அவருடைய நூற்றாண்டு விழாவை எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசும், நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கமும் சேர்ந்து அருமை அன்னை சோனியா காந்தியினுடைய தலைமையில் நாங்கள் எல்லாம் இணைந்து ஒரு



சிறப்பான விழாவாகத் தமிழகம் மட்டும் அல்ல, இந்தியா முழுவதும் நடத்த இருக்கிறோம். அந்த அருமையான அருமைத் தலைவர் காமராஜருடைய பிறந்த நாளை, நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி நம்முடைய தமிழக அரசும் பெயர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. இரவிராஜ்.

* **திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய், வணிக வரித் துறை, முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது கருத்துகள் சொல்ல வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைக் கூறி, என்றைக்கும் ஈழத் தமிழர்களுக்காக அயராது பாடுபடுகிற எங்களது தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்களை வணங்கி, என்னுடைய கருத்துகளை இங்கே சொல்ல விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் வரைவு நிதிநிலை அறிக்கையில் அதாவது draft budget-ல் பல நல்ல ஆக்கபூர்வமான ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு ஆய்வு செய்ததன் அடிப்படையில் அதில் ஒன்றான மணல் மூலம் மேலும் கூடுதல் வருமானம் வர வாய்ப்புள்ளது என்றும், முதற்கட்டமாக சுமார் 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்க உள்ளது என்றும் இம்மாமன்றத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே இன்னும் கூடுதலாக வருவாய் கிடைப்பதற்கு வழிவகை உள்ளது. அப்படிப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆலோசனையை ஏற்று ஆய்வு செய்து வருவாய் கிடைக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகப் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் நிலவும் நிதிநிலையை மனதிலே கொண்டு அரசு, 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நிதிச் சீர்திருத்தங்களுக்கு

முக்கியத்துவம் அளித்துள்ளது. தமிழக அரசின் நிதிநிலையில் தொடர்ந்து வரும் பற்றாக்குறையும், அதைச் சமாளிப்பதற்கு அரசு கடன் வாங்கும் நிலையும் ஓர் ஆரோக்கியமான நிலையல்ல என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியும் ஏற்றுக்கொள்கிறது. நிதி ஒதுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் உருவாக்க நாம் புதிய முறையில் நிதிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதனால்தான் தமிழக பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து பராமரிக்கவும், ஆரோக்கியமான வலுவான தமிழகத்தை உருவாக்கவும் முடியும் என பாட்டாளி மக்கள் கட்சி நம்புகிறது. இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 4-ல் நிதிச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை விவரித்துள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 4 முக்கிய நோக்கங்களை விவரித்துள்ளார்கள். அவற்றில் முக்கியமானது, அரசின் வருவாயை உயர்த்துதல் ஆகும். அரசின் வருவாயை உயர்த்தினால் நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த முடியும். இந்த நோக்கத்துடன்தான் தமிழக அரசு நடுத்தர கால நிதிநிலைச் சீரமைப்புத் திட்டம் ஒன்றினைத் தயாரித்துள்ளது. எனவே, இன்றைய நிதிநிலை நெருக்கடியைப் போக்குவதற்கு அரசின் வருவாயைப் பல வழிகளில் பெருக்குவது அவசியமாகும். இந்தச் சூழ்நிலையில்தான் அரசின் வருவாய்த் துறை. வருவாய் போக்கு. வணிக வரி மற்றும் இதர வரிகளின் போக்கினை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. இந்தக் கண்ணோட்டத்தில் வருவாய்த் துறையின் மானியக் கோரிக்கையையும், வருவாய வரவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நிதிச் சீர்திருத்தங்களும் கோட்பாடுகளும், தத்துவங்களும் காற்றில் பறக்கவிடப்பட்டு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது ஒரு வரி ஆதாரத்திலிருந்து கிடைக்கும் வருவாயை வசூல் செய்வதற்கு உண்டாகும் செலவானது, வருவாயைவிடக் குறைவாக இருக்க வேண்டும். ஒரு திறமையான வருவாய்த் திட்டத்தின் முக்கிய அறிகுறியே இதுதான். ஆனால், நிதிநிலைக் குறிப்பு 2, 2002-2003 பக்கம் 3, 4, 334 ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொருளாதார ரீதியாக வருவாய்த் துறை ஒரு செயல்பாடு குறைவான துறையாகத் தெரிகிறது.

உதாரணமாக, 2001-2002-ல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி வேளாண்மை வரி வருவாயிலிருந்து அரசுக்கு ரூ.7.98 கோடி வருவாயாகப் பெறப்பட்டுள்ளது. ஆனால், இந்த வருவாய் வரியை வசூல் செய்வதற்கு அரசு ரூ.19.7 கோடி செலவு செய்தது. இந்த வகையில் வருவாய்த் துறை ரூ.11.72 கோடி ரூபாயை இழந்துள்ளது. 2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி வேளாண்மை வருவாய் வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் ரூ.5.47 கோடி என்று குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதனை



வசூல் செய்வதற்கான செலவு 19.5 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வருவாய்த் துறை இந்த ஆண்டு 14.3 கோடி ரூபாயை இழக்க இருக்கிறது என்று தெரிகிறது. வேளாண்மை வருவாய் வரி ரூ.7.98 கோடியிலிருந்து 5.47 கோடியாகக் குறைகிறது. ஆனால், இதை வசூல் செய்யும் தொகை ஒரே அளவாக இருக்கிறது. இவ்வாறு வரி ஆதாரங்களிலிருந்து நஷ்டத்தை ஈட்டுவதுதான் வருவாய்த் துறையினுடைய நோக்கமா எனக் கேட்க விரும்புகிறேன். இதைத்தான் அரசு சொல்லும் நிதிச் சீர்திருத்தக் கொள்கையினுடைய நோக்கமா? ஒரு ரூபாய் வசூல் செய்வதற்கு மூன்று ரூபாய் செலவு செய்வது என்பது புத்திசாலித்தனமா என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தும் இந்த நிதிநிலையை அரசு உணரவில்லையா? இதைத் தீர்ப்பதற்கு வரி வசூல் செய்யும் செலவினை அரசு உடனடியாகக் குறைக்க வேண்டும்.

வருவாய்த் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும் வரி வருவாயைப் பெருக்க முடியவில்லையெனில் அந்த ஊழியர்களை மற்றத் துறைகளுக்கு மாற்றுவதுதான் ஒரு நியாயமான முடிவாக இருக்கும். நில வரியின் போக்கினைப் பார்க்கும்போதுகூட இதே திறமையற்ற முறையைத்தான் பார்க்க முடிகிறது. சென்ற ஆண்டின் மதிப்பீட்டின்படி நில வரியிலிருந்து 55.53 கோடி ரூபாய் வசூல் செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கான வசூல் செலவு ரூ.100.76 கோடி என்று மதிப்பிடப்பட்டது. இதனால், வருவாய்த் துறைக்கு ரூ.45.23 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது.

*பிற்பகல் 12-35*

2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி நில வரியின் வருவாய், ரூ.44.82 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சென்ற ஆண்டைவிட நிலவரி வருவாய் ரூ.10.71 கோடியாகக் குறைந்து இருக்கும். ஆனால், ரூ.44.8 கோடி ரூபாய் வசூல் செய்வதற்கு செலவு ரூ.107.38 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு ரூபாயை வசூல் செய்வதற்கு வருவாய்த் துறை ரூ.2.40 பைசாவைச் செலவிட வேண்டிய ஒரு விநோதமான செயலைப் பார்க்க முடிகிறது. நிலவரி வருவாயிலிருந்து கிடைக்கும் தொகை குறையும்போது அதை வசூல் செய்யும் தொகை மட்டும் ஆண்டுக்காண்டு உயர்வது எந்த அடிப்படையில் நியாயம் என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

விளக்கம் அளிப்பாரா? இப்படிப்பட்ட திறமையற்ற ஒரு வருவாய்ப் போக்கை வைத்துக் கொண்டு நிதிச் சீர்திருத்தம் செய்கிறோம் என்று கூறுவது சரியானதுதானா, முறையானதுதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நிதி நிலைமையை மேம்படுத்துவோம் என்று கூறுவதும் உண்மைக்குப் புறம்பானது அல்லவா? நிதிச் சீர்திருத்தங்கள் என்று கூறுவதைவிட வருவாய்த் துறையினைச் சீரமைத்து இத்துறையின் வருமானத்தைப் பெருக்க அரசு முயற்சிகள் மேற்கொள்வது, தமிழக மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றாமல் இருக்க உதவும். வருவாய்த் துறை நிதிச் சீர்திருத்தங்களின் நோக்கங்களை அடையவேண்டுமெனில் பல நல்ல திட்டங்களை அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றிச் சிலவற்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்றபோது என்னுடைய தொகுதியிலே கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பீமாவரம் என்கிற கிராமத்திலே கடந்த 40 ஆண்டு காலமாக குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது என்று கூறினேன். குடிநீரையே பார்க்காத கிராமம் பீமாவரம் என்று இந்த மாமன்றத்திலே பேசினேன். அதை ஏற்றுக் கொண்டு இந்த அரசு உடனடியாக அந்தக் கிராமத்திலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த அரசைப் பாராட்டவும், சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வழங்கல் துறையினுடைய அதிகாரிகளைப் பாராட்டவும் இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சனை திருத்தணி நகரத்திலே தீராத பிரச்சினையாக இருக்கிறது என்பதை இதோடு நான் மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்திலே பேசுகிறேன். இதுவரையிலே அதற்கு உரிய தகுந்த நடவடிக்கை அங்கே எடுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே பல கிராமங்களில் இப்போது குடிநீர்ப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. அவற்றைப் போக்க இந்த அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சரை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே திருவாலங்காடு பகுதியிலே பேருந்து வசதிகள் என்பது மிகமிகக் குறைவாக இருக்கின்றன. அங்கே ஒன்றியத்தினுடைய தலைமையிடமாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே



அனைத்துத் துறை அரசு நிறுவனங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே பேருந்து வசதிகளைப் பெருக்க திருத்தணியிலிருந்து சென்னை செல்கிற பல வழித் தடங்களில் ஒருசில வழித்தடங்களை அந்தத் திருவாலங்காடு பகுதிக்கு வந்து செல்லுமாறு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மின்சாரம் கேட்டுக் கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான விவசாய மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ரூ.25,000 செலுத்தியும் காத்துக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கிடைக்கவும், அந்தப் பகுதியிலே அடிக்கடி மின் தட்டுப்பாடு ஏற்படுவதால், மின் வெட்டுகள் ஏற்படாத வண்ணமும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாலங்காடு பகுதியிலே 30 படுக்கை வசதிகளுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய விடையூர் ஆற்றுப் பாலத்திற்கு அருகில் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 50 கிராம மக்கள் பயனடையக்கூடிய வகையிலே விடையூர் பக்கத்திலே ஆற்றின் மீது ஒரு பாலம் அமைக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருவள்ளூரிலே செசன்ஸ் நீதிமன்றம் ஒன்றினை உடனடியாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து கடந்த 1-1-1997 ஆம் ஆண்டு முதல் திருவள்ளூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்த மாவட்டத்தில் 73 காவல் நிலையங்களும், 7 சப்-கோர்ட்டுகளும் மற்றும் முன்சீப் கோர்ட்டுகளும் இயங்கி வருகின்றன. ஆனால், இதுவரை மாவட்ட முதன்மை நீதிமன்றம் அமைக்கப்படவில்லை. எனவே, உடனடியாக நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாற்றுத் தலைவர் என்று சொல்லுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ் :** மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்ஜெட் தாக்கல் செய்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கருத்துச் சொல்கிறபோது,

*பிற்பகல் 12-40*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதாவது, அங்கே உட்கார்ந்தால் தலைவர்தான். மாற்றுத் தலைவர், மாற்றாத தலைவர் என்று கிடையாது. எனவே, உங்களைத் தலைவர் என்று அழைத்திருப்பதிலே நீங்கள் பெருமிதம் கொள்ளவேண்டும். அதுதான் தலைவர். கண்கொள்ளாக் காட்சியிலே இருக்கிறீர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நன்றி.

**திரு. கோ. இரவிராஜ்:** படுத்துவிட்ட ரியல் எஸ்டேட் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கப்படும் என்று தெரிவித்தார். ஓர் ஆண்டு ஓடிவிட்டது. படுத்துவிட்ட ரியல் எஸ்டேட் தொழில் இன்னும் கண் திறக்கவேயில்லை என்கிற நிலை உள்ளது. இதனால் அரசுக்கும் வருவாய் குறைந்துவிட்டது. ஏழை, நடுத்தர மக்கள் சொந்தமாக அரை கிரவுண்டு இடம்கூட வாங்க முடியாத ஒரு அவல நிலைமை உள்ளது. இதனைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோல புதிய பட்டா கேட்டு விண்ணப்பித்தாலோ, பட்டா மாற்றம் கோரி மனுச் செய்தாலோ தாசில்தார் அலுவலகத்திலே விரைவாக பட்டாக்கள் கிடைப்பதில்லை. மூன்று மாதத்திலிருந்து 6 மாதம் வரையிலே காத்திருக்க வேண்டிய ஓர் அவலநிலை இருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே (சிரிப்பு) தமிழகத்தில் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் போய்விட்டார்.

**திரு. கோ. இரவிராஜ்:** அடிக்கடி தலைவர்கள் மாறுவதால் குழப்பம் ஏற்படுகிறது. (சிரிப்பு) ஒரு நிமிடம்,

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் தலைவரைப் பார்த்துப் பேசியிருந்தால் இந்த மாதிரி ஆகியிருக்காது.

**திரு. கோ. இரவிராஜ்:** இங்கே அனுபவம் வாய்ந்த பல தலைவர்களே பேப்பரைவைத்து பார்த்து பேசிக் கொண்டிருக்கிறார்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே.

தமிழகத்தில் ஆரம்பத்தில் 13 மாவட்டங்களாக இருந்து, படிப்படியாகப் பிரிக்கப்பட்டு, இன்று 30 மாவட்டங்கள் உள்ளன. நிர்வாக வசதிக்காகவும், மக்கள் நலத் திட்டங்கள் மக்கள் அனைவருக்கும் விரைவில் சென்றடைய வேண்டும் என்றவகையில் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் ஒன்றியங்கள், ஊராட்சிகள், தாலுகாக்கள் எல்லாம் பிரிக்கப்பட்டு வருகின்றன. ஏன், புதிய மாநிலங்கள்கூட உருவாக்கப்பட்டதை நாம் சமீபத்திலே பார்த்தோம். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், பிரிக்கப்பட்டு செயலாற்றி வந்த அரியலூர் மாவட்டத்தை, பெரும்பான்மையாக வாழும் இன மக்கள்.........

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** பிரிக்கப்பட்டு செயலாற்றி வந்த அரியலூர் மாவட்டத்தைப் பெரும்பான்மையாக வாழும் இன மக்களுக்காகப் பிரிக்கப்பட்டது என்ற காரணத்தைச் சொல்லி மீண்டும் பெரம்பலூருடன் இணைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது, அந்த இன மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் பெரும் வருத்தத்தையும் உண்டாக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றுக்கூட அரியலூர் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் சென்னை, சேப்பாக்கத்தில் உண்ணாவிரதம் இருந்தனர். அனைத்துக் கட்சியினரும் அதில் கலந்துகொண்டுள்ளனர். அம்மாவட்ட அனைத்துத் தரப்பு மக்களும் தொடர்ந்து போராடி வருகின்றனர். எனவே, இதை மறுபரிசீலனை செய்து, மீண்டும் அரியலூர் மாவட்டம் தனித்தே இயங்க அறிவிக்க வேண்டும் என இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயம். T.N.P.S.C. மூலம் தேர்வு செய்யப்பட்டு Assistant-ஆகப் பணியில் இருந்தவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 பேர் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். 10 மணித் துளிக்கு மேல் ஆகிவிட்டது. திரு. இரவிராஜ் பேச்சை முடித்துவிடுங்கள். கடைசி வாக்கியத்தோடு முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** கடந்த வாரம் 19 பேர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 80 பேர் நீக்கப்படவுள்ளதாகச் செய்தி வந்துள்ளது. இவர்கள் தொடர்ந்து பணியில் சேர்ந்திடவும், தொடர்ந்து நீடிக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த துறையின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, வருவாய் உதவியாளர்கள் பணிக்கு ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். இத்தோடு முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** 207 பேர் பணி நியமனம் செய்யப்படாமல் உள்ளனர். அவர்களை உடனடியாகப் பணி நியமனம் செய்திட அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.



**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய வருவாயைப் பெருக்குவது இந்தத் துறை. அரசு சொல்கின்ற நலத் திட்டப் பணிகளை மக்களுக்கு எடுத்துச் சென்று வழங்குகின்ற துறையாகவும் இது அமைந்திருக்கிறது நம்முடைய ஜனநாயகத்திலே.

*பிற்பகல் 12-45*

அதிகாரிகள் என்று வருகின்றபோது ரெவின்யூ இலாகாவிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு இருக்கிற அதிகாரத்தைப் போன்று மற்றத் துறைகளிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஒரு clash நடக்கிறது, ஒரு சண்டை நடக்கிறது என்று சொன்னால், அந்த சண்டை நடக்கிற இடத்திலே அந்தச் சண்டையை அடக்குவதற்கு, அமைதியை உருவாக்குவதற்கு அந்தக் காவல் துறை எஸ்.பி.க்கு அதிகாரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் அந்த அதிகாரம். சுட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னால் அதுதான் உத்தரவு. தமிழ்நாட்டிலே அந்த அதிகாரத்தை வைத்திருக்கின்ற இந்த நிர்வாகத்தினைப் பார்க்கும்போது இப்போது வேதனை அளிக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் ஆட்சியை மாற்றுகிறார்கள். ஆனால் தாலுகா அலுவலக ஆட்சியில் காட்சிகள் மாறவில்லை. அப்படியேதான் இருக்கிறது. எந்த ஆட்சி வந்தாலும் இந்த ரெவின்யூ இலாகாவில் இருக்கின்ற Collector, D.R.O., R.D.O., Tahsildar, R.I., V.A.O., மேலே இருந்து கீழே வரையிலே பார்க்கும்போது அவர்களுக்கு மனமாற்றம் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை.

சாதாரண ஏழைகள் போய் பெரிய ஜமீன்தாருடைய சொத்தை எனக்கு எழுதி வையுங்கள் என்று கேட்கப் போவதில்லை. அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா கேட்டுப் போகிறார்கள். அவர்கள் தாத்தா, முப்பாட்டன் காலத்திலிருந்து குடியிருக்கிற இடம் அது. இப்போது எதற்குப் போனாலும் அந்த வீட்டுக்கு பட்டா இருக்கிறதா என்று கேட்கிறார்கள். ஒரு விளக்குத் திட்டம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அந்த ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் லைட் போடவேண்டுமென்று போய் கேட்டால் வீட்டுக்குப் பட்டா இருக்கிறதா என்று கேட்கிறார்கள். பட்டா இல்லை என்று அந்தப் பட்டாவை இந்தத் துறையின் மூலம் கேட்கின்றபோது அந்தச் சாதாரண குடிமகன் அதைப் பெறுவதிலே இருக்கின்ற கஷ்டத்தை எண்ணிப் பார்த்தால் ஏன் இந்த

ஒரு விளக்கு, தேவையில்லை என்று நாம் சிம்னி விளக்கிற்கே போய்விடலாம் என்ற நிலை இப்போது தமிழகத்தில் இருக்கிறது. இந்தக் குறிப்பிலேகூட இத்தனை இலட்சம் மனுக்கள் மனு நீதி நாளில் பெறப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. மாதத்திற்கு ஒரு முறை, திங்கட்கிழமை, காலையிலே கலெக்டர் அலுவலகத்தில் வைத்து மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்றும் இத்தனை இலட்சம் மனுக்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர அத்தனை இலட்சம் மக்கள் கோரிய கோரிக்கைகளில் இத்தனை பேருக்கு திருப்தி செய்திருக்கிறோம், கொடுத்திருக்கிறோம் என்ற பதில் அதிலே இல்லை. நான்கூட சட்டமன்ற உறுப்பினராக வந்தபின், இந்த 9, 10 மாதங்களில் 9 ஆயிரம் மனுக்கள் பொதுமக்கள் மத்தியிலிருந்து என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நேரடியாகக் கொடுத்து நான் விவாதித்தேன். ஒரு ஆளுக்குக்கூட, அந்த மக்கள் கேட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நிவாரணம் கொடுத்திருக்கிறோமா என்று சொன்னால், இல்லை. இவர்கள் பதில் அனுப்புகிறார்கள். தாங்கள் கோரிய அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது, விதிகளுக்கு உட்பட்டு இல்லை, அது நிராகரிக்கப்படுகிறது. அல்லது பரிசீலிக்கப்படும், இப்படித்தான் அந்த நிர்வாகம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறதே தவிர மக்களுடைய தேவைகளை சரி செய்யக்கூடிய நிர்வாகமாக அது அமையவில்லை. இதை மாற்றி அமைப்பதற்கு அம்மாவினுடைய அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்போது பதிவுத் துறைக்குப் போகும்போது, சாதாரண ஒரு ஆள், நிலத்தை, வீட்டை register செய்யப்போனால் N.O.C. வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த N.O.C. வணிக வரித் துறையிலிருந்து கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. வாங்கப் போகிறவர்கள் ஒரு சென்ட், இரண்டு சென்ட் வாங்கினால், N.O.C. என்று போய் அந்தத் துறையைத் தேடி அலைவதற்குள், அந்தச் செலவுகள் அதிகரித்து அவர்களால் தாங்க முடியவில்லை. எனவே வணிக வரித் துறையிலிருந்து N.O.C. வாங்க வேண்டும் என்பதைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது பல பகுதிகளிலே உள்ள தாலுகா அலுவலகங்கள் கணினிமயம் ஆக்கப்பட்டு, Computer Centre-ஆக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள 206 தாலுகா அலுவலகங்களிலும் இந்த கணினிமயத்தைக் கொண்டு வருவதன் மூலம்



வேகமாக அரசினுடைய செயல்கள் சென்று அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அம்மாகூட கடந்த வாரம் ஆண்டிப்பட்டி சென்று தொடு திரை கணினி மையம் அமைத்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு ஆரணி சட்டமன்ற உறுப்பினர் கூட ஆரணிக்கு அந்ததொடு திரை கணினி மையம் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். 206 அலுவலகங்களுக்கும் அதை அமைப்பதன் மூலம் எல்லா மக்களுக்கும் நன்மை கிடைக்கின்ற வாய்ப்புகள் இருக்கும். இந்தக் கணினி மூலமாக சாதாரண மக்கள் என்ன பயன் பெறப் போகிறார்கள் என்பதை மக்களுக்கு நாம் முதலில் தெரிவிக்க வேண்டும். சாதாரண மக்கள் இப்போது இந்தத் துறையிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். அப்படி எதிர்பார்க்கின்றபோது நன்மைகள் போய்ச் சேருவதற்கு, இதை வேகமாகச் செய்வதற்கு ஏற்ப இந்தத் துறை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

பட்டா கேட்டு V.A.O. விடம் சென்று அங்கே மனு போடுகிறார்கள். அங்கிருந்து R.I.யிடம் போகவேண்டு என்று சொல்கிறார். நான், தாசில்தார் இல்லை என்று சொல்கிறார். R.D.O.-விடம் போனால் அது அப்பீல் என்று சொல்கிறார். D.R.O.- போக வேண்டுமென்று சொல்கிறார்; கோர்ட் என்கிறார். கலெக்டர் என்று சொல்கிறார்கள். கடைசியிலே ஒரு பட்டா வாங்குவதற்கு முன் அங்கே இருக்கிற அதிகாரிகளில் பாதிபேர் மாறிப் போகிறார்கள்; Promotion-னில் போகிறார்கள்; வேறு department-க்குப் போகிறார்கள். அந்தப் பேப்பர் இருந்த இடம் தெரியாத ஒரு நிலை ஏற்பட்டு விடுகிறது.

என்னைப் பொறுத்தமட்டில் எனது தொகுதி மலைப்பகுதி. மலைப்பகுதி என்று வருகின்றபோது அரசாங்கத்திலே ஒரு standing order இருக்கிறது. மலைப் பகுதியிலே பட்டா கொடுக்கக்கூடாது என்று. அங்கே இருப்பது S.T. மக்கள். அவர்களுக்கு அரசாங்கத்திலே வீட்டு மனைக் கொடுக்கிறோம். அதில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் B.D.O.விடும் போகும்போது பட்டா வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஏழைகளுக்கு வீடு கொடு என்று சொல்கிறது. அவர்கள் வாழ்வது மலை. அந்த மலையிலே இருக்கின்ற அந்த மக்களுக்குப் பட்டா கொடுக்க முடியவில்லை. அப்படியானால் வீடு கொடுக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. அந்த வீடுகள் அவர்களுக்குக் கிடைக்க

வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. இதை அரசு பரிசீலித்து மலைப் பகுதியில் வாழுகின்ற அந்த S.T., S.C., வேறு இதர மக்கள் இருந்தாலும் அவர்களுக்கும் பட்டா கிடைப்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.

காட்டுப் பகுதி என்று வருகின்றபோது அது காட்டு இலாகாவுக்கு சொந்தமான இடம், மலைப்பகுதியிலே சாலை போடக்கூடாது என்று விதி இருக்கிறது. அப்படிப் போடும்போது ஏதாவதொரு வழியில் அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று ரெவின்யூ இலாகாவிலே முயற்சி பண்ணினால்கூட Forest Officers அதை reject பண்ணிவிடுகிறார்கள். செங்கத்திலேயிருந்து ஜமுனாமுத்தூருக்கு 54 கிலோமீட்டர் இருக்கிறது. 54 கிலோமீட்டரிலே கிட்டத்தட்ட 300 கிராமங்கள் அந்த மலையிலே இருக்கின்றன. என் தொகுதியிலே மட்டும். அந்த 300 கிராமங்களில் இருக்கின்ற மக்கள் தாலுகா ஆபீசுக்கு வரவேண்டுமென்று சொன்னால், திருப்பத்தூர் வழியாகப் போனால் 150 கிலோமீட்டர் ஆகிறது செங்கத்திற்கு வருவதற்கு. போளூர் வழியாகப் போய் வரவேண்டும் என்றால், போளூர்-திருவண்ணாமலை போய் வரவேண்டுமென்று சொன்னால் 200 கிலோமீட்டர் ஆகிறது. அவர் ஒரு மலை ஜாதியைச் சார்ந்தவர். பஸ் ஏறுவதற்கே முடியாத ஆள். 200-ம் 200-ம் 400 கிலோமீட்டர் பஸ்ஸைப் பிடித்து வந்து அந்த அதிகாரியைப் பார்ப்பதற்கு 2 நாட்கள் ஆகும். இந்த நிலை மாற வேண்டும். காட்டுப் பகுதியிலே இருக்கின்ற நிலங்கள் பற்றி காட்டு இலாகா அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், மலையிலே இருக்கின்ற விலையுயர்ந்த பயிர்களையெல்லாம் --ரோடு போட்டால்-- வெட்டி எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார்கள் என்று சொல்கிறார்கள். அதை மட்டும் கருத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது. (மணியடிக்கப்பெற்றது) அந்த மக்களினுடைய வளர்ச்சிக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு நிலங்களுக்குப் பட்டா வழங்கக் கூடாது என்று, உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே வன நிலங்களுக்குப் பட்டா வழங்க முடியாது.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்கிறேன். நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கலாம். அந்த மக்களுடைய ஜீவாதார உரிமைகள்.....



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** உச்சநீதிமன்றம் தீர்ப்பையே வழங்கிவிட்டது.

**திரு. போளூர் வரதன்:** அரசாங்கம் கொடுக்கக்கூடிய வீடுகள் அந்த ஜனங்களுக்குப் போக முடியவில்லை என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதை மாற்றியமைத்து அவர்களுக்குக் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தாருங்கள். அதுமட்டும் அல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** உரையை முடித்து விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் சென்னையிலே ** அது வந்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தண்ணீர் எல்லாம் குடிப்பதைப் பார்த்தால் ஒரு மணிநேரம் பேசுவதற்குத் தயார் ஆகிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. போளூர் வரதன்:** இதோ உரையை முடித்துவிடுகிறேன். அது வந்து, ** என்று ரெஜிஸ்டர் பண்ணியிருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சரியாகப் படியுங்கள், வரதன் பசிநேரம் கண்ணை மறைக்கிறது போல இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. போளூர் வரதன்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், 1999-லே இந்த மாதிரி பண்ணியிருக்கிறார்கள். இப்படிப் பண்ணும்போது 5 கோடி ரூபாய், அந்த 5 கோடி ரூபாயானது எப்படிப் பண்ணினார்கள்? அந்த 5 கோடி ரூபாய்....(குறுக்கீடு)

பிற்பகல் 12-55

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை ** ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டு சுமத்துவதைக்கூட நான் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் இந்த மன்றத்தில் ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தக்கூடாது. நான் பேரவைத் தலைவரிடத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம் இதற்கான ஆதாரங்களைத் தங்களிடத்திலே

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

காட்டினாரா? முன் அனுமதி பெற்றாரா? அனுமதி பெற்றதற்குப் பிறகு ஆதாரங்களை இந்த மன்றத்தில் அவர் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறாரா? காரணம் ஒரு சொத்தினுடைய மதிப்பு இவ்வளவு ? உண்மை மதிப்பு இவ்வளவு? அதை registration செய்தது இவ்வளவு? என்பதற்கு என்ன அளவுகோலை வைத்து அவர் தெரிவித்திருக்கிறார்? எனவே. பேரவைத் தலைவரிடத்திலேயிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தங்களிடத்திலே அளித்திருக்கிறாரா? ஏன் என்று சொன்னால், தாங்கள் என்ன தீர்ப்பு அளிக்கப் போகிறீர்கள் என்று தெரியாது இல்லாவிட்டால் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வெளியிலே வருவதைவிட அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வரதன் அவர்கள் என்னிடத்திலே அந்தக் குற்றச்சாட்டைக் காட்டினார். அது எந்த அளவிற்கு உண்மை என்பதைப் பரிசீலிப்பதற்கான நேரம் இல்லை. ஆகவே, வரதன் அவர்கள். பேசக்கூடிய அந்தக் கருத்துகளை அந்தக் குற்றச்சாட்டை நீங்கள் என்னிடத்திலே தாருங்கள். ஆதாரத்தைத் தாருங்கள். அது உண்மையிலேயே இருக்கக்கூடிய ஆதாரம் தானா என்று நான் அதைக் கண்டறிந்து, பரிசீலித்து, உண்மையென்று நான் ஏற்றுக் கொண்டால் நீங்கள் பேசிய பேச்சு அவைக்குறிப்பிலே ஏறும். அதுவரைக்கும் அவைக்குறிப்பிலேயிருந்து அது நீக்கப்படுகிறது.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலையிலே உங்களிடத்திலே அந்த documents-ஐ காண்பித்தேன். நான் யார் மேலேயும் தனியாகச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பத்திரத்தையும் உங்களிடம் காண்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அந்த documents-ஐ என்னிடத்தில் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** நான் யார் மீதும் தவறாகவோ, காழ்ப்புணர்ச்சியாகவோ சொல்லவில்லை. ஒரு சாதாரண குடும்பத்திலே இருபபவர்கள் 5 கோடி ரூபாய்க்கு register பண்ணாமலேயே அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை துஷ்பிரயோகம் பண்ணக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமே தவிர, அரசுக்குச் சேர வேண்டிய பணம்...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது, பொதுவாகச் சொல்கிறார். (குறுக்கீடு) இது, பொதுவாகச் சொல்கிறார்.



**திரு. போளூர் வரதன்:** அவர்களுக்கு எப்படி அந்தப் பணம் வந்தது. எத்தனை கோடி வந்தது என்று அவர்களுடைய சொத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. Registration பண்ணும்போது Government-க்கு இத்தனை percentage வருமானம் வரும். 5 கோடி ரூபாய் இப்போது மறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர, இது யார் வீட்டு நிலம், எதற்காக வாங்கினார்கள் என்பதற்கு நான் வரவில்லை. அரசுக்கு வரவேண்டிய வருமானம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் அவ்வாறு பண்ணினால், விட்டுவிடுவீர்களா? 100 ரூபாய் வாடகை கட்டவில்லையென்றால் (குறுக்கீடுகள்) கிராமத்திலே. பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன் அவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. பொன்முடி, நான் சொல்லிவிடுகிறேன். ஒன்றுமில்லை. உட்காருங்கள். போளூர் வரதன் அவர்கள் பொதுவாகத் தெரிவிக்கக்கூடிய கருத்துகளிலே நான் தலையிடவில்லை...** அவர்களைக் குறிப்பிட்டு, தாங்கள் சொல்லியிருக்கிற இந்தக் குற்றச்சாட்டு, இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரம் என்று நீங்கள் கையிலே வைத்திருக்கிறீர்களே ஏதோ அதை என்னிடத்திலே கொடுங்கள். அதைக் கொடுத்ததற்குப் பிறகு, அந்தக் குற்றச்சாட்டிலே உண்மையிருப்பதாகத் தெரிந்தால், நீங்கள் பேசிய கருத்துகளை அவைக் குறிப்பிலே ஏற்றுகிறேன். அதுவரைக்கும் அவை அவைக் குறிப்பிலே ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசி வாக்கியத்தைச் சொல்லி, பேச்சை முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே. அது அவைக்குறிப்பிலே இருப்பதும், இல்லாததும் உங்களுடைய பிரியம். என்னுடைய கோரிக்கை 100 ரூபாய், 50 ரூபாய் தாழ்த்தப்பட்டவர்கள் வீட்டுமனை வரி அல்லது நிலத்திற்கு வரி கட்டவில்லை என்றால் அவர்களுடைய வீட்டிலே இருக்கிற பாத்திரத்தை எல்லாம் தூக்கிக் கொண்டுபோய் விடுகிறீர்கள் தள்ளிக்கொண்டு போய் உள்ளே போடுகிறீர்கள். 5 கோடி ரூபாய் அரசை ஏமாற்றியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** இந்த நிலை சரியா? (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **அவர்கள் மீது (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் பார்த்து என்ன தீர்ப்புரைக்கப் போகிறீர்களோ, அதை நாங்கள் ஏற்கப் போகிறோம். அது இரண்டாவது பிரச்சினை. அதிலே நாங்கள் தலையிடவில்லை. ஆனால், அதன் தொடர்பே இல்லாமல், இப்பொழுது ஒருவர் 5 கோடி ரூபாயை ஏமாற்றினார் என்று அவர் சொல்கிறாரே. அதனோடு தொடர்புடையதுதானா? இது தனியா என்பதைத் தாங்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை** குறிப்பிட்டு அவர் சொல்லக்கூடியதற்கு— அந்தக் கையிலே வைத்திருக்கிற— ஆதாரத்தை வைத்திருப்பதாகச் சொல்கிறார். அந்த ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்து, அந்தக் குற்றச்சாட்டு உண்மையென்றால், அவர் பேசக்கூடிய கருத்து அவைக் குறிப்பிலே ஏறும். மற்றபடி அவை அவைக்குறிப்பிலே ஏறாது. பொதுவாக ஒரு கருத்தைச் சொல்கிறார். பொதுவாகச் சொல்கிறபோது யாரையும் குறிப்பிட்டுச் சொல்லாமல், பொதுவாகச் சொல்கிறார். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு Point of Clarification. யார் மீதும் குற்றம் சொல்வதற்காக அல்ல. தமிழ்நாட்டிலே நிறையப்பேர் சொத்து வாங்குகிறார்கள், சொத்து விற்கிறார்கள். அதை பத்திரப் பதிவு செய்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது, ஒரு சொத்தை வாங்கக் கூடியவர்கள் தன்னுடைய பணத்தைக் குறைத்துச் சொல்லி, அந்தப் பத்திரத்தை register பண்ணுவதற்குத்தான் விரும்புவார்கள். ஆனால் அந்த நிலத்தினுடைய மதிப்பினை நிர்ணயிக்க வேண்டியவர்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள். அந்த Sub-Registrar-தான் அதனைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட Sub-Registrars ஏன் அப்படி அதிக மதிப்பிலான சொத்து வாங்கியதைக் குறைந்த அளவுக்கு register செய்தார்கள் என்று பார்க்கவேண்டும். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி வாதன் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் அரசுக்கு வரவேண்டிய வருவாயைக் குறைத்து Register செய்தது, சம்பந்தப்பட்ட துறையாகத்தான் இருக்க முடியும். அந்தத் துறையின் மீதும் தாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன் சொல்லக்கூடிய அந்தக் குற்றச்சாட்டு உண்மையென்றால், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் பரிந்துரை செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நடைபெற்ற 11-வது சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இப்போது விதிமுறைகளைப் பேசுகின்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதே விதிமுறைகள் சென்ற முறை அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீது, இல்லாததையும், பொல்லாததையுமான குற்றச்சாட்டுகளை இட்டுக்கட்டிப் பேசிய போதெல்லாம், அப்போது இவருக்கு இந்த ஞானோதயம் எங்கே சென்றது என்பதை உங்கள் மூலம் நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குள்ள மாண்புமிகு அமைச்சர் அன்றைக்கு உறுப்பினராக இந்த மன்றத்தில் இருந்தவர். இப்படிப்பட்ட Point of Order-களைக் கிளப்பி சபாநாயகருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அன்றைக்குத் தூங்கிவிட்டு....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறை, இரு முறை அல்ல. ஒவ்வொரு நாளும் நாங்கள் இதைச் சொல்லிக் கொண்டுதான் இருப்போம். ஆனால் அவர்கள் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். அவர்கள் இஷ்டத்திற்குத்தான் பேசுவார்கள். சபைக் குறிப்பை வேண்டுமானால் நீங்கள் எடுத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எதிர்க்கட்சியினரை மதித்து அவர்களுடைய கோரிக்கைகளை அனுமதித்து, அவர்களைப் பேச அனுமதிக்கிறீர்கள். நாங்கள் இதுமாதிரிப் பிரச்சினையின்போது, Point of order என்று ஆரம்பித்தாலும் சரி, Point of clarification என்று கேட்டாலும் சரி, எங்களைத் தாக்கி, இதோ

நிற்கிறார்களே. இவர்களை விட்டு எங்களை வெளியிலேதான் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தார்களே தவிர வேறல்ல. அதுதான் அன்றைக்கு நடந்தது. ஆனால் நீங்கள் அவர்களைச் சுதந்திரமாக அனுமதித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இதுதான் நாட்டு நடப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த காலத்திலே எப்படி நடந்து இருந்தாலும் சரி. ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரமாக ஆக முடியாது. ஆகவே, இந்த ஆட்சி நேர்மையான ஆட்சி என்பதை நிலைநிறுத்திக் காட்டுவதற்காகவாவது இப்படிப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதேபோல, சட்டப் பேரவைத் தலைவரும் நேர்மையாக நடந்துகொள்கிறார் என்பதற்கு இது ஒரு சாட்சி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் திரு. துரைமுருகன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிப் பரிசீலிக்க மாட்டார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், அன்றைக்கு அவர்களுடைய ஆட்சியில் அமைச்சராக இருந்த நேரத்தில் எத்தனை முறை, நாங்கள் பேசுகிறபோதெல்லாம், பேச விடாமல் தடுத்து வெளியில் தூக்கி எறிந்தார்களே! அது அவர்களுக்கு ஞாபகம் இல்லையா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது...

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** அது மட்டுமல்ல. கடந்த ஆட்சியில் நான் ஒரு தாழ்த்தப்பட்டவன் என்ற நிலையில் சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசும்போது என்னை அடித்து, ஆஸ்பத்திரிக்கு அனுப்பி, கொல்லப் பார்த்தீர்களே? அதுவும் நினைவுக்கு இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு....

**திரு. துரைமுருகன்:** உண்மைக்கு மாறான தகவலை....

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இன்னும் எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். கடந்த ஆட்சியில்.....



**திரு. துரைமுருகன்:** உண்மைக்கு மாறான தகவலைத் தருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அப்போது தூக்கி எறிந்த காரணத்தினாலேதான் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது தூக்கி உங்களை அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அமருங்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. வரதன், முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், உட்காருங்கள், கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன். நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள். அந்தக் குற்றச்சாட்டிலே உண்மை இருக்குமானால் அதை அவைக் குறிப்பிலே ஏற்றிக் கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** நான் அந்தக் குறிப்புகளை இப்போதே உங்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஜனநாயக நாட்டில் மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி நியாயம் கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு நியாயம் சாதாரண தாழ்த்தப்பட்டவனுக்கு ஏழைக்கு ஒரு நியாயம் என்று இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். நீதிக்கு அனைவரும் தலைவணங்கியே தீர வேண்டும் என்ற எண்ணம் உடையவன் நான். நீதி நிலைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தனிப்பட்ட விரோதம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. போளூர் வரதன்:** பேசி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்.

**திரு. போளூர் வரதன்:** இறுதியாக என்னுடைய தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைத் தனியாக வைத்துக் கொள்ளலாம்.

அடுத்து மாண்புமிகு சுயேட்சை உறுப்பினர் திரு. அப்பாவு வாத்தியார். 8 மணித்துளிகள் பேசுங்கள்.

பிற்பகல் 1-05

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பாவு வாத்தியார் என்று என்னை அன்போடு அழைத்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில், ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு சாதாரண குடிமகனைப் போன்று அனைத்து நீதிமன்றங்களுக்கும் சென்று— ஒரு சாதாரண குடிமகனைப் போன்றுதான் தன்மீது வழக்குத் தொடுத்தார்கள் என்று கூறி, அனைத்து வழக்கு மன்றத்திலும்— தான் நிரபராதி என்று நிரூபித்து, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு இன்றைய முதல்வர் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே சாதாரண ஏழையெளிய மக்களைப் பற்றிச் சிந்தித்தவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அவரைப் போன்றே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும் சாதாரண ஏழையெளிய மக்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். சாதாரண ஏழையெளிய மக்கள் முன்னேற வேண்டுமென்றால் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்றால் அவர்கள் கல்வி கற்க வேண்டும் என்று சிந்தித்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அதை நடைமுறைப்படுத்தி, ஒரே ஆண்டு 2,700 பள்ளிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தையும் தந்து தாழ்த்தப்பட்டவர்களை பள்ளியில் படிக்க வைத்த பெருமை பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சாரும். அதற்குப் பின்பு இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 10-வது வகுப்பிலே படித்து முடித்து வீட்டிற்கு திரும்பாமல் பள்ளிக்கு ஈர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இன்றைய முதல்வர் அவர்கள் 11-வது வகுப்பு, 12-வது வகுப்பு படிக்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு சைக்கிள்



வழங்கினார்கள். அப்படி அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கனவை நனவாக்கிய பெருமை இன்றைய முதல்வர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்றுதான், தான் உழைத்துச் சம்பாதித்த சத்யா ஸ்டுடியோவை அந்தத் தொழிலாளர்களுக்கே கொடுத்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். தான் வாழ்ந்த தோட்டத்தை ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்த பெருமை எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். ஆகவே, இந்த நாட்டின் ஏழையெளிய மக்களைப் பற்றி மீண்டும் சிந்திப்பதற்கு, மீண்டும் இந்த சாதாரண ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு தமிழகத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, பெருமையாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சாதாரண ஏழை விவசாயிகள் வாங்கிய கடனுக்கு வட்டியை இரத்து செய்ய வேண்டுமென்று கடந்த கால ஆட்சியிலே நாங்கள் எல்லாம் கடுமையாகப் போராடினோம். மறியல் கூடச் செய்து பார்த்தோம். நபார்டு வங்கி எங்களைத் தண்டித்துவிடுவார்கள், தயவுசெய்து அந்தக் கடனை இரத்து செய்ய முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், நம்முடைய இன்றைய முதல்வர் அவர்கள் விவசாயிகள் வாங்கிய கடன், 317 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து, இந்தத் தமிழக ஏழை விவசாயிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மறு வாழ்வு அளித்தார்கள். ஆனால் நபார்டு வங்கி அவர்கள் மீது எந்தத் தண்டனையும் விதிக்கவில்லை. மாறாக உலக வங்கியே, தமிழகத்தில், கிளையை சென்னையில் ஆரம்பித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவில் தாழ்த்தப்பட்ட சாதாரண ஏழை மக்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்த ஆட்சி தொடர்வதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பனை ஏறும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு என்ன தொழில் செய்வது என்று தெரியாமல் மிகவும் வேதனையோடு இருக்கின்றார்கள். ஆந்திராவிலே ஒரு பனைக்கு 10 ரூபாய், 20 ரூபாய் ஆண்டுக்கு என்று பெற்றுக்கொண்டு சுண்ணாம்பு இல்லாத பதநீர் இறக்கி விற்பதற்கு அனுமதி அளிக்கின்றார்கள். அதேபோன்று நம்முடைய தமிழகத்திலேயும் மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள் பனை ஏறும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தென்னை உற்பத்தி செய்கின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, சுண்ணாம்பு இல்லாத பதநீருக்கு என்ன பெயர் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** சுண்ணாம்பு இல்லாத பதநீருக்குத் தனிப் பதநீர் என்று பெயர். உடலுக்கு ஆரோக்கியமான பதநீர். (சிரிப்பு) நோய்களைத் தீர்க்கின்ற அந்தப் பதநீர் இறக்குவதற்கு அனுமதியும், தென்னை மரத்திலே இருக்கின்ற தேங்காய்க்கு விலையில்லை; ஆகவே, அந்த தேங்காய் விற்பதற்குப் பதிலாக அதிலேயும் பதநீர் இறக்குவதற்கு அனுமதியும் அளிக்கவேண்டுமென்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், திசையன்விளையில் இயங்கி வருகின்ற ஆரம்ப சுகாதார மையத்தை முழுநேர அரசு மருத்துவமனையாக, 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உருவாக்கித் தருவதாக அவருடைய அறையிலே வைத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக ஆக்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோன்று, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பரந்து விரிந்து கிடக்கும் ராதாபுரம் தாலுக்காவை, திசையன்விளையைத் தலைநகராகக் கொண்டு ஒரு தனித் தாலுக்கா ஆரம்பித்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்துக்கு, ஆவரைக்குளம் பகுதியிலே 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அங்கே கால்நடை மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றிலே வரும் தண்ணீர், சிறுவெண்ணம் ஆற்றிற்குக் கீழே வீணாகக் கடலில் கலக்கின்றது. சேரன்மகாதேவி பகுதியிலிருந்து ஒரு வெள்ளப் பெருக்குக் கால்வாய் வெட்டி, எம்மல்தேரி பகுதி, ஆயங்குளம் படுகை, ஆறைக்குடி படுகை, வடமலையான் கால்வாய், கொடுமுடியாறு கால்வாய், ஆலந்துறை கால்வாய், ராதாபுரம் கால்வாய் போன்ற வறண்ட பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரைத் தரவேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடமும், முதல்வரிடமும்



கேட்டிருக்கிறேன். அதற்கு மதிப்பீடு தயாரிக்கச் சொல்லியிருக்கின்றார்கள். விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வெள்ளக் காலங்களிலே தோவாளைக் கால்வாய்ப் பகுதியில் கடுமையான தண்ணீர், சுசீந்திரம் ஆற்றிலே, பழைய ஆற்றிலே பாழாகக் கலக்கின்றது. அந்தத் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு, தோவாளை கால்வாய்க்கு இணையாக ஒரு வெள்ளப் பெருக்குக் கால்வாய் வெட்டி, மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலப்பதை, நம்முடைய ராதாபுரம் கால்வாய்க்குத் தரவேண்டுமென்று— மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்— நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம்கூறி, அதை நிறைவேற்றித் தரவேண்டும், அதற்கும் மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட நேற்றைக்கு 30 கி.மீ. தூரம் வரை மீன் வளம் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் அவுட்-போட் என்ஜின் வைத்துக் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள் கறிக்குக்கூட மீன் கொண்டு வராத நிலையிருக்கிறது. ஆகவே, கேரளாவிலே அவர்களுக்கு மாதம் 400 லிட்டர் மண்ணெண்ணெய் நியாயவிலைக் கடைகளிலே வழங்குவதைப் போன்று, தமிழக மீனவர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் மாதம் 400 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கடற்கரை கிராமமான கூட்டப்புளி, பெருமணல், தோமையார்புரம், இடிந்தகரை, கூத்தங்குளி, உவரி, கூட்டப்பனை, கூடுதாளை, பெரியதாளை ஆகிய பகுதிகளில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலும் அதிகமான தூண்டில் வளைவுகளை கட்டுவதற்கு அனுமதி அளித்தார்கள். இவற்றில் ஒன்றுகூட நிறைவேறவில்லை ஏதோ அவர்கள் மறந்து விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. தயவுசெய்து இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மேலே குறிப்பிட்ட மீனவக் கிராமங்களில் தூண்டில் வளைவைக் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஓரிரு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் கவர்னர் உரையிலே கேட்டேன், பட்ஜெட்டிலே பேசலாம் என்று சொன்னீர்கள். பட்ஜெட்டிலே பேசுவதற்குக் கேட்டேன். மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொன்னீர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** கூடுதலாக 2, 3 நிமிடங்கள் கொடுங்கள். கிராமப்புறப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிருக்கவேண்டும். 525 ஜி.ஓ. பிரகாரம், கிராமப்புறத்தில் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றால், 100 மாணவர்களுக்கு இரண்டரை ஆசிரியர்கள் என்றால், தரமான கல்வியைக் கிராமப்புறத்து மக்கள் பெறமுடியாது. ஆகவே, கிராமப்புறத்தில் படிக்கின்ற ஏழையெளிய மாணவர்களுக்குத்தான் அரசு கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். பணக்காரர்களோ, வசதி படைத்தவர்களோ விரும்பிய இடத்தில் படித்து விடுவார்கள். ஆகவே, ஏழையெளியவர்கள் மீது நலன் கொண்ட இந்த அரசு, 1 முதல் 5 வகுப்பு வரையுள்ள, கிராமப்புறப் பள்ளிகளில் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1991 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்ட அனைத்துத் தனியார் உதவிபெறும் பள்ளிகளுக்கும் அரசு மானியம் வழங்கி விட்டது. 1991 முதல் 1996 வரை, உங்கள் காலத்தில் தரம் உயர்த்தப்பட்ட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு இதுவரை மானியம் வழங்கப்படவில்லை. அவற்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகின்றேன். அவர்களுக்கு 1991-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட, தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு நிதியுதவி அளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அம்மா ஆட்சிக்கு வந்துவிட்டால் பணப் புழக்கம் வந்துவிடும் என்று எல்லோருமே சொன்னார்கள். வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். அந்த ரியல் எஸ்டேட்காரர்கள் தங்களிடம் உள்ள நிலத்தை விற்று பத்திரம் பதிய அனுமதி வழங்கவேண்டும். Government-க்கும் வருமானம் வரும்.



தொழிலும் நடந்து கொண்டிருக்கும். பணப் புழக்கமும் இருக்கும். ரியல் எஸ்டேட்காரன், ஒரு அரசு ஊழியரைக் கூப்பிட்டு, மாதம் 1,000 ரூபாய் கொடுங்கள், இந்த நிலத்தை எழுதித் தருகிறேன் என்று சொல்லி, எழுதிக் கொடுத்துவிட்டு போய்க் கொண்டேயிருப்பான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தேவையில்லை அந்த—வழக்கு போட்டதை வேண்டுமானால் withdrawal பண்ணச் சொல்லிவிடலாம். ஜி.ஓ. 150-ஐ withdrawal செய்து, பணப் புழக்கம் ஏற்படுவதற்கு வகை செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேபோன்று, தமிழகத்திலுள்ள காவலர்கள், தமிழ்நாட்டில் உள்ள எல்லா பகுதியிலிருந்தும் சென்னைக்கு வழக்குகளுக்காக உயர் நீதிமன்றத்திற்கு வருகிறார்கள்; அப்படி வருகிற காவல் துறை காவலர்கள், அதிகாரிகள் இறங்கிய வேகத்தில் எங்கே போய்த் துணிகளை மாற்றி, குளித்துவிட்டு, கோர்ட்டுக்குப் போகலாம் என்று தெரியாமல், பாவம்போல நடுத் தெருவிலே நிற்கிறார்கள். எனவே, உயர்நீதிமன்றம் பக்கத்திலே 100 காவலர்கள் தங்குகிற மாதிரி, தங்கும் வசதி ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனென்றால், காவலர்கள் படுகிற கஷ்டங்கள் உங்களுக்குத் தெரியும். கட்டிய 'பூட்ஸ்'சை ஐந்து நாட்கள்கூடக் கழற்றாமல் இருக்கிறார்கள். அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் காவலர்களுக்கு சென்னையிலே, உயர்நீதிமன்றம் அருகே ஒரு காவலர் விடுதியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, 21-05-1991 அன்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** முடித்துவிடுகிறேன். பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி அவர்கள் மறைந்தபொழுது, அவர்களுக்குக் காவலராக இருந்த காவல் துறை இன்ஸ்பெக்டர் இராஜகுரு அவர்கள் மறைந்துவிட்டார்கள். அவருடைய மகன், காவல் துறையிலே உதவி ஆய்வாளர் பணி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். காவல் துறைத் தலைவர் டி.ஜி.பி. அவர்கள், அந்த மனுவை, பரிந்துரை செய்து, அவருக்கு வழங்கலாம் என்று சொல்லி, அரசுக்கு அனுப்பி இருக்கின்றார்கள். 3 ஆண்டுகளாகக் கிடப்பிலே கிடக்கிறது. தயவுசெய்து, அவருடைய மகன் பிரவின் ராஜேஸ்ஸுக்கு உதவி ஆய்வாளர் பணி கிடைப்பதற்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*20-1-2001* அன்று மாசானமுத்து என்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர், மதகனேரியிலே ஒரு வெடி விபத்திலே அவர், அவருடைய மனைவி, அவருடைய மகன், இன்னும் இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். அண்ணா தி.மு.க. மீட்டிங் எங்கு நடந்தாலும் வெடி போடுவார். காசே வாங்கமாட்டார். அப்படிப்பட்ட ஒரு மனிதர் குடும்பத்திலே அவ்வளவு பேரும் இறந்து போய் விட்டார்கள். ஒரேயொரு பெண் பிள்ளை மட்டும் இருக்கிறது. அவருக்கு நிதி உதவி கேட்டு, மாண்புமிகு அமைச்சர் திரு. தளவாய் சுந்தரம் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களும் ஆவரங்குளத்திற்கு வந்தபோதுகூட, அதை அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த விபத்தில் பாதிக்கப்பட்ட, இறந்தவர்களுக்கு நீங்கள் நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், ஆளுக்கு *1* இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, *15-1-2002* அன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தோடு முடித்து விடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** முடித்துவிடுகிறேன். உவரி கடலிலே மீன் பிடிக்க மீனவர்கள் கடலுக்கு *15-1-2002* அன்று சென்றவர்கள் மகராஜன், அந்தோனிச் செல்வன், இரத்தினசாமி, ஜவஹர் அலி, ஸ்ரீமதி, கஜிதாபீவி ஆகியோர் கடலிலே விபத்திலே இறந்துவிட்டார்கள். அவர்களில் மகராஜன் என்பவர் திசையன்விளையைச் சேர்ந்தவர். கடுமையாகப் போராடி பல பேரைக் காப்பாற்றி இருக்கின்றார். ஆனால், முடிவிலே அவரும் இறந்து போனார். ஆகவே, அந்த இறந்தவர்கள் குடும்பங்களுக்கு நீங்கள் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று கூறிய பரம்பரையில் வந்த நக்கீரன் வாழ்ந்த இந்த பூமியில் இன்றைய முதல்வர் அவர்களும் வாழ்கிறார்கள். *21-5-1991* அன்று ராஜிவ் காந்தியை விடுதலைப் புலிகளுடைய தலைவர் பிரபாகரன் அவர்களுடைய சதியால் கொலை செய்தது குற்றம் குற்றமே என்றும், அந்தக் குற்றத்திற்குப் பரிகாரமாக அந்த பிரபாகரனை இங்கே அழைத்து வந்து, விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறியது (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் மட்டுமல்ல, உலகத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத துணிவு, அஞ்சாமை, வீரம் இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது இன்றைய தமிழக முதல்வர் ஒருவர்தான் என்பதை இந்த நேரத்திலே கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய நல்லாட்சி தொடர்ந்து நடைபெற என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எனக்கு இந்த மைக் ரொம்ப கட்டையாக இருக்கிறது. (சிரிப்பு) எங்கள் அண்ணன் நெப்போலியனுக்கு, நம்ம அண்ணன் சந்தானம் அண்ணனுக்கெல்லாம்; நாங்கள் எல்லாம் குனிந்து நின்று இந்த மைக்கிலே பேச வேண்டியிருக்கிறது. எங்களுக்கு இந்த மைக்கைக் கொஞ்சம் உயர்த்தித் தந்தீர்களென்றால், உங்களைப் பார்த்துப் பேச முடியும் (சிரிப்பு) எங்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. நீங்கள்தான், தலைவர் நினைத்தால்தான் இதைச் செய்ய முடியும். காலையிலே நெப்போலியன் அண்ணன் என்னிடம் வந்து சொன்னார்கள். நீங்கள் சொல்லுங்கள் என்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப பணிவாகப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் உங்கள் மைக் கட்டையாக வைக்கப்பட்டிருக்கிறது. (சிரிப்பு)

**திரு. மு. அப்பாவு:** பணிவாகத்தான் நான் உங்களிடம் இருக்கிறேன். தலைவராக உங்களை நான் ஏற்றதிலிருந்தே நான் பணிவாக இருக்கிறேன் என்று தெரியவில்லையா? உங்களுடைய முதன்மைச் சீடரே நான்தானே. அந்தவகையில், அதையும் என்னுடைய கோரிக்கையாக வைத்து, இந்த நல்ல வேளையிலே என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் சுயேட்சை உறுப்பினராக இருந்தாலும், வாரத்திற்கு ஒரு நாளாவது என்னைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு, நாலும் தனி ஆள் இல்லை. *1,400*-க்கும் மேற்பட்டவர்கள் போட்டியிட்டு, நான் ஒரு ஆள்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். எல்லோருடைய கருத்தையும் சொல்வதுபோல, மற்ற சாதாரண சின்னச் சின்னக் கட்சிக்கு ஒவ்வொரு மெம்பருக்கும் கொடுக்கிற மாதிரி உரிமையை எனக்கும் தரவேண்டும். அப்படியில்லையென்றால், 'ஒரு சிறிய கட்சியை ஆரம்பித்து, அப்படியே வந்துவிடு' என்று சொல்லுங்கள். அந்த அனுமதி தந்தால்கூட, அதையும் செய்ய நான் தயாராக இருக்கின்றேன். இந்த ஊரிலே ஒற்றை வேட்டிக்காரனைப் பார்க்கிற மாதிரி என்னை நீங்கள் ஒதுக்கி வைத்துவிடக்கூடாது. ஆகவே, தயவுசெய்து, சுயேச்சை உறுப்பினருக்கும்— நாங்கள் *1,400* பேர் போட்டியிட்டதிலே, சுயேச்சையாக நான் ஒரு ஆள் வந்திருக்கிறேன். எனக்கும்— அந்த சக கட்சிகளுக்குத் தருகிற மாதிரி அந்தஸ்தும் தரவேண்டும்; பேசுவதற்கும் அதிகமான வாய்ப்புத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு, பேச அனுமதித்ததற்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறிக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு மாதிரி, உயர்ந்த மனிதர்களுக்கு உயர்ந்த மைக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. நன்மாறன், அமைச்சர் அவர்கள் அரை மணி நேரத்திற்கு மேலே பதில் சொல்வதற்குக் கேட்டிருக்கிறார்கள். அதனால் சுருக்கமாக முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின்மீது கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதிச் சான்றுகளில் மலைவாழ் மக்கள், பழங்குடியினர் மத்தியில் இன்னும் பூரணமான நிறைவு காணப்படாத ஒரு நிலைமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பாவுக்கு சான்றிதழ் இருக்கிறது. மகனுக்கு இல்லை. அண்ணனுக்கு சான்றிதழ் உண்டு. தம்பிக்கு இல்லை. இப்படிப்பட்ட நிலைமை ஒழுங்கு படுத்தப்பட்டு, அனைவருக்கும் அப்பாவுக்கு இருக்கிறது என்றால் குடும்பத்தில் அனைவருக்கும் சான்றிதழ் கிடைப்பதற்கான வழியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடியினர், மலைசாதியினர் இவர்களுக்கான அந்தச் சான்று கிடைப்பதில் சிக்கல், தமிழகம் பூராவும் இருக்கிறது. மதுரை மாவட்டம் உட்பட இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், ஈழவ சாதி மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் கிடைக்கவில்லையென்ற கருத்தை, அங்கேயிருந்து தெரிவித்திருக்கிறார்கள். அதிலும் உரிய வழி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வட்டத் தலைநகரங்களிலிருந்து தொலைதூரத்தில் குடியேறிய மக்கள் சான்றிதழ் கேட்டு வரக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இதனை மாற்றி, அந்தந்த கிராமங்களிலே ஜாதிச் சான்றிதழ் பெறுவதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்களாக இருக்கிற V.A.O.-க்கள் இன்னும் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். அதிலும் உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கிராம மக்களுக்குப் பயன் கிடைக்கும் வகையில், பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். வருவாய்த் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள், 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் பணி வரன்முறைப் படுத்தப்படாமல் உள்ளனர். இதனை விரைந்து நிறைவேற்ற வேண்டும். டிசம்பர் 2000-ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் வருவாய் உதவியாளர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டும், 207 பேர் இன்னும் பணி நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உரிய நீதி வழங்க வேண்டும். பணி நியமனம் செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகள் கலைக்கப்பட்டு விட்டன. (மணியடிக்கப்பெற்றது) அதனால் பணியிழந்துள்ள அலுவலர்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிந்தோர் குடும்ப நலத் திட்ட உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு வருமான வரம்பை ரூ.7,200 லிருந்து ரூ.10,000-ஆக உயர்த்த வேண்டும்.

வருவாய்த் துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் கணினியை முறையாகக் கற்றவர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் தொடர்பான வழக்குகள் ஆண்டுக் கணக்கில் தீர்க்கப்படாமல் உள்ளன. அதில் அரசின் தனிக் கவனம் தேவை. விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முறையாக இயங்க வேண்டும். கோவில் நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருப்பவர்களுக்கே அந்த நிலங்கள் கிடைப்பதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டும். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மத்திய அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டது. இன்னும் மத்திய அரசு கையொப்பமிடாமல் இருக்கிறது. அதனை மீண்டும் வலியுறுத்த வேண்டும். கோவில் நிலங்களைப் பயன்படுத்துவோர்களுக்கு, கிரயம் செய்வதற்கும் தவணை முறையில் அந்தத் தொகையைப் பெறுவதற்குமுரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஜனவரியில் காவிரி படுகையில் வெள்ளம் ஏற்பட்டது. ஆனால், போதிய நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அது கிடைக்கப்பெறுவதற்கான வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று, இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு இருக்கின்றபோது, நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறது. குத்தகையையும் சேர்த்துத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறேன். பருவமழை தவறியதால் பாதிக்கப்பட்ட மதுரை போன்ற பல மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்.

பத்திரம் எழுதி வாழ்வு நடத்துவோர்கள், தற்போது அரசால் புகுத்தப்படுகிற படிவ முறையைக் கைவிடவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் பதிய வேண்டுமென்பதை மாற்ற வேண்டுமென்பதையும் கோரி இருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், 'சிற்றார் அணைப் பகுதியில், ஏழை விவசாயிகள் பட்டா கேட்டும் இன்னும் அது கிடைக்கப் பெறவில்லை. அது அணை புறம்போக்கு என்கிறார்கள். 2 கிலோ மீட்டர் தாண்டி இருபபதால், அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே கிராமத்தைச் சேர்ந்த ஆறுகாணி பகுதியில், 10 வருடங்களுக்கு முன்னால் பட்டா கிடைத்தும், தற்போது வருவாய்த் துறை அதிகாரிகள் தந்த பட்டாவை ரத்து' செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் பட்டா கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். லஞ்ச லாவண்யத்தில் காகோடு கிராம அதிகாரி, களியல் கிராம அதிகாரி மீது புகார் இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

சென்னை, பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், 1964-67 ஆண்டுகளிலே, பர்மா தமிழர்களுக்கு அரசு ஒதுக்கிய இடங்களான பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர், இந்திரா காந்தி நகர், காந்தி நகர், பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். ஒரு குற்றத்திற்கு ஒரு தண்டனை கொடுக்கப்படலாம். அரசு ஊழியர்கள் அப்படி நடத்தப்பட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், இன்னும் அது உறுதி செய்யப்படவில்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள். இல்லை, இல்லை. உறுப்பினர் அவர்கள் கேட்டது 3 நிமிடம். ஆனால் அவர் பேசுவது 5 நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மூத்தவரா? அவர் கேட்டது 3 நிமிடம் கேட்டார்கள். 5 நிமிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். நன்மாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அப்போது இல்லை. 5 நிமிடத்தில் முடிக்கிறேன் என்று சொன்னேன். ஒரு நிமிடம் முன்னே பின்னே ஒரு வாக்கியத்தை முடிப்பதற்காக அனுமதியளியுங்கள். இது சரியில்லை. சப்ஜெக்ட்-ன் மீது பேசுகிறவர்களையெல்லாம் கட் பண்ணுவது, மாமன் மச்சான் என்று பேசுகிறவர்களையெல்லாம் சிரிச்சிட்டு, ரசிச்சிட்டிருப்பது அப்படி என்றால் என்ன சட்டமன்றம் இது. ஜனங்கள் ஓட்டுப் போட்டிருப்பது அவர்களைப் பற்றிப் பேசுவதற்காகத்தானே தவிர வேறு டயலாக் பேசுவதற்கு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. சப்ஜெட்டுக்கு வந்துவிடுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** பூமிதான நிலக் கமிட்டிக்கு உறுப்பினர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. இதனால் மேற்படி நிலங்களிலுள்ள ஏழைக் குடும்பங்களுக்குப் பட்டா கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, மேற்படி கமிட்டியின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) கந்தக வாயு பரவியதால் கண்ணெரிச்சல்

**திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. அது பேரவைத் தலைவருக்கு வந்திருக்கிறதா? ஏதோ இன்று விமான நிலையத்திலே கந்தகம் போன்றது வெடித்து, அதனுடைய வாயு எல்லா இடங்களிலும் பரவி, கோட்டையைச் சுற்றி வெளியிலும் கண் எறிகிற அளவிற்கு எல்லோரும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே? அதுகுறித்து ஏதாவது பேரவைத் தலைவருக்கு செய்தி வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

14-11-1980-க்கு முன்பு பணியாற்றிய முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள் முழுத் தகுதி பெற்றிருந்தும், அவர்கள் கிராம நிர்வாகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்படவில்லை. அதற்கான அரசு ஆணை இருந்தும், பணி கிடைக்காமல் இருப்பவர்களுக்கு உடனே பணி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். 28,000 கிராம முழு நேர ஊழியர்கள், முழு நேரமாகப் பணியாற்றுகின்றனர். இவர்கள்தான் மக்கள், மரம், மண், ஆண், பெண், முதியவர், இளையவர், பிணம் என அனைத்தையும் அடையாளம் காட்டி, அனைத்தையும் பாதுகாக்கும் காவலர்களாகவும் உள்ளனர். இவர்களுக்குண்டான பணி என்பது மிகவும் கடுமையான அடித்தட்டுப் பணியாகும். கிராம உதவியாளர்களாக இருக்கும் இவர்களுக்கு, அரசு டி.வி.எஸ்.50 போன்ற இரு சக்கர வாகனங்களை இலவசமாக வழங்கி, அவர்களுக்கு சம்பள உயர்வு, வாரிசு அடிப்படையிலான பணிகள் உடனே கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பல இடங்களில் பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியிடங்கள் உடனே நிறைவு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் இன்னும் பல இடங்களில் முழுமையாக அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. அவற்றைக் கண்டறிந்து, முழுமையாக அது அமல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சமி நில மீட்பு 'பாழாய், பழங்கதையாய்ப் போய்விட்டது' என்று பாரதி சொன்னது போன்று, இப்போது இருக்கிறது. அது நாடு முழுவதும் இப்போது கண்டறியப்பட வேண்டும். வறுமையின் காரணமாகக் கைமாறியுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் நிலங்கள், பட்டாக்கள், அடங்கல் தீர்வைகள், குத்தகை போன்றவை தாழ்த்தப்பட்ட ஒருவர் மீதும், சாகுபடி மட்டும் மேலொரு உயர்ந்த சாதிக்காரர் செய்வதும் என்ற நிலை இருக்கிறது. இது தலைமுறை, தலைமுறையாக நீண்ட ஆண்டுகாலமாக இருந்து வருகிற நிலைமையாகும். அந்த நிலத்தைத் தங்களுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டி மனுக் கொடுத்து கொடுத்து, எவ்விதப் பயனும் இன்றி, இப்பிரச்சினை கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த அரசு இவ்வகை நிலங்களை உரியவர்களுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

நீண்ட காலமாகச் சாகுபடி செய்துவரும் புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றைச் சாகுபடியாளர்களுக்கு அளித்து, பட்டா வழங்கவேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.



தமிழ்நாடு முழுவதும் பெரிய அளவில் கால்நடைகள் இல்லை. மேய்ச்சல் தரை புறம்போக்கு என்பதன் பேரில் உள்ள நிலங்களைப் பல ஆண்டுகளாக விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். அதை எடுத்து, நிலமற்றவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நில அளவு, அத்துக்காட்டுதல் போன்றவைகளுக்கு விண்ணப்பித்தும் பல மாதங்கள் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. சர்வே துறையில் ஆள் பற்றாக்குறையின் காரணமாக இவ்வாறு கிடப்பில் உள்ளது என நான் அறிகிறேன். அவ்வாறு இருப்பின், போதுமான சர்வேயர்களை நியமனம் செய்து, இக் குறையைப் போக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணை எண் 168-ன்படி பலருக்கு மனைப் பட்டா வழங்கினார்கள். அவற்றில் இன்னும் ஏராளமானவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அவ்வளவு பேருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

1980-81 ஆம் ஆண்டு மண்வளப் பாதுகாப்பு மூலம், வரப்புப் போடப்பட்டு, அதற்கான தொகையை அந்த விவசாயிகள் மீது கடனாகச் சுமத்தப்பட்டுள்ளது. அது நீண்ட காலமாக இருப்பதால் அதைத் தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குத்தகை விவசாயிகளின் சாகுபடியைப் பதியச் செய்து அடங்கல் கணக்கு வைக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நிலப் பத்திரம் செய்தவுடனேயே பட்டா மாறுதல் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, குத்தகை விவசாயிகளுக்காக தாலுக்கா அலுவகங்களில் இயங்குகிற கோர்ட்டை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அதை ஒரு முழுமையான நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோலப்பன் தலைமையிலான வேளாண்மை உயர்மட்டக் குழு பரிந்துரையை முழுமையாக அமல்படுத்திட வேண்டுகிறேன். விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கின்ற இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த 16-4-2002 அன்று தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், நாடு முழுவதும் உண்ணாவிரதம் இருந்தனர். இது

ஏறத்தாழ ஒரு கோடி மக்களைப் பாதிக்கின்ற ஒரு பிரச்சினை என்ற முறையில் இக் கோரிக்கையை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், ஒசூரில் ஏழை எளிய மக்களின் குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கே R.D.O. அலுவலகம் அமைக்கப்போவதாகச் சொன்னார்கள். தற்போது அந்த இடங்கள் தனியாரால் கையகப்படுத்தப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையென்றால், அதைக் கண்டறிய வேண்டுமாய்த் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறையில் தலித் இன மக்களுக்கான இட ஒதுக்கீடு முழுமையாக அமல்படுத்தப்படவில்லை என்கின்ற குறை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்த ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். தலைமைப் பொறியாளர் 11 பேர்களில், தலித் இன மக்களுக்கான இட ஒதுக்கீடு 2. அதில் ஒன்றுகூட நிரப்பப்படவில்லை. அதேபோன்று, கண்காணிப்புப் பொறியாளர்கள் 33; இதில் 6 பேர்களுக்கு இட ஒதுக்கீடு; இதிலும் ஒன்றுகூட நிரப்பப்படவில்லை. கோட்டப் பொறியாளர்கள் 125; இதில் இட ஒதுக்கீடு 23; 11 பேர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்; மற்றவர்கள் நியமிக்கப்படவில்லை. உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 520 பேர், அதில் 94 பேருக்கு மட்டும் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது. 31 பேர் நியமிக்கப்படவில்லை. உதவிப் பொறியாளர் 1,200 பேர்; அதில் 216 பேர் மட்டும் நியமிக்கப்பட்டனர்; 126 பேர் நியமிக்கப்படவில்லை. இளநிலைப் பொறியாளர்கள் 700 பேர்; அதில் இட ஒதுக்கீடு 125; ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை. அவற்றை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

தமிழக அரசால், 1992 ஆம் ஆண்டு வரை இருந்துவந்த தலித் இனத்தவர்களுக்கான பதவி விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு, உச்சநீதிமன்றத்தின் உத்தரவால், 1992-ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 1991 ஆம் ஆண்டு வரை இருந்து வந்த பதவி மூப்புப் பட்டியலையும் காலி செய்து, கிட்டத்தட்ட 31 ஆண்டுகள் பதவி மூப்புப் பெற்ற தலித் இனப் பொறியாளர்கள், பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட 85-வது சட்டத் திருத்த மசோதா மூலம், தலித் இனத்தவர்களுக்கு



உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்ததுடன் பழைய நிலைக்கே பதவி மூப்பை வழங்கவும், எல்லாப் பதவிகளிலும், தலித் இன மக்களுக்கு விகிதாச்சாரப்படி பதவியில் அமர்த்தமான நிலை ஆக்கப்பட்டுள்ளது. இப்படி இருக்கிறபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தை, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று சூளுரைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். இவ்விஷயத்திலும், இந்தியாவிற்கே முன்மாதிரியாகச் செயல்பட்டு, சமூக வீராங்கனையாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் பதிலுரை. (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) கந்தக வாயு பரவியதால் கண்ணெரிச்சல்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொன்னார்கள். எல்லோருக்கும் கண் எரிகிறது; மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. அவைக்கு ஏதாவது தங்களது விளக்கத்தை அளித்து, அதற்கு நீங்கள் ஒரு தீர்வு காண வேண்டுமென்று தங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே தீர்வு ஒன்றும் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்— ஒன்றைச் சொல்லிவிட்டுப் போனார். அதை நான் விசாரித்த அளவில், அங்கே யாரோ ஒருவர் சிகரெட் புகைத்துவிட்டு Port-Trust-க்கு பக்கத்திலே போட்டிருக்கிறார். அது குப்பையிலே விழுந்து புகை வந்திருக்கிறது. அதனால் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. உறுப்பினர்கள் தைரியமாக உட்கார்ந்து கொண்டிருக்கலாம்.

**திரு. துரைமுருகன்:** கண் எல்லாம் எரிச்சலாக இருந்தது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு எரியவில்லை. (குறுக்கீடு) எனக்கு எரியவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எனக்கும் இப்போது எரிகிறது. அப்போது எரியவில்லை.

[2002 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது மணலைப் போட்டு அதை அணைத்து விட்டார்களாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அப்போது எரியவில்லை. இப்போது எரிகிறது. அவர் சொன்னபோதுகூட கண் எரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒருவேளை மனப் பயம்கூட இருக்கலாம் (சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அங்கே light-ஐப் பார்க்கும்போது எரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மெர்க்குரியைப் பார்த்துக் கொண்டிருந்தால், அது எரிந்துகொண்டுதான் இருக்கும். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

## 5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**—தொடர்ச்சி

(ஆ) **கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**—தொடர்ச்சி

(இ) **கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு**—தொடர்ச்சி

(ஈ) **கோரிக்கை எண் 48—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**—தொடர்ச்சி

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி மக்களின் நெஞ்சத்திலே இடம் பெற்று, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன் மாநிலமாக ஆக்குவேன் என்று உறுதிமொழி எடுத்து, பல்வேறு வழக்குகளை, நீதிமன்றத்திலே வென்று, இன்றையதினம் முதலமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிற அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு என்னுடைய பதிலுரையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், 'அன்னம் இட்டிருக்கிறீர்கள்; நிதானம் தேவை' என்று கூறினார். 'அன்னம் இட்ட கை' தான் இன்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. நிதானம் எதிலே



2002 ஏப்ரல் 19] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

தேவை? 1991-லிருந்து 1996 வரை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அரசியல் ரீதியாக யார் மீதாவது வழக்குகளைத் தொடர்ந்தார்களா? இதுதான் எங்களுடைய நிதானம். வழக்கு, ஒன்றல்ல; இரண்டல்ல; எத்தனை வழக்குகள்? எத்தனை நீதிமன்றங்கள்? வழக்குகளைத் தொடர்ந்தவர்கள், நீதிமன்றத்திலே தீர்ப்பு வருவதற்கு முன்னாலே, தீர்ப்புகள் எல்லாம் இப்படித்தான் இருக்கும்; தண்டனை பெற்று விட்டீர்கள் என்றெல்லாம் கூறினார்கள். நீதிபதிகளை எந்த அளவுக்கு அவமானப்படுத்தினார்கள் என்பதற்குக் கடந்த கால ஆட்சியிலே ஒரே ஒரு உதாரணத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தீர்ப்புகள் வருகின்றன; சென்னை உயர்நீதிமன்றத்தைச் சுற்றி Wall Poster-கள் ஒட்டப்படுகின்றன. 'வாங்கிய தீர்ப்பா? வழங்கிய தீர்ப்பா?' யார் ஒட்டினார்கள்? காவல் துறையிடம் நானே நேரடியாகச் சென்று புகார் கொடுத்தேன். நடவடிக்கை எடுக்கவே இல்லை. இந்தியத் துணைக் கண்டத்திலே, அரசியல்வாதிகள் மீது வழக்குகள் போடுவது சகஜம். வழக்குகள் நிலுவையிலே இருக்கும்போது, குறிப்பிட்ட சில வழக்கறிஞர்கள்--இந்த வழக்கை இந்த நீதிபதிதான் விசாரிக்க வேண்டும் 'டான்சி வழக்கைப் பொறுத்தவரை' எடுத்துப் பாருங்கள். வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சில வழக்கறிஞர்கள் சென்று,—நீதிபதி ஜகதீசன் இந்த வழக்கை விசாரிக்கக்கூடாது;'நீதிபதி பாலசுப்பிரமணியம் இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்று எந்த நாட்டிலே நீதிபதியை மிரட்டி இருக்கிறார்கள்? கடந்த காலத்தை நினைத்துப்பாருங்கள். வினை செய்தவன் வினை அறுப்பான். ஆக, ஒரே ஒரு வழக்கிற்கு, ஐயோ! அப்பா! என்று கத்துகிறார்களே; நாட்டு நிலைமையைப் பாருங்கள். வழக்கைச் சந்தித்துப் பாருங்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

17 ஆண்டு காலமாக வழக்கறிஞராக இருந்திருக்கிறேன். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். இங்கேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, பேசாததைப் பேசியது மாதிரி பேசினார். நான் பேசும்போதுகூட என்னுடைய வார்த்தைகளை அளந்து பேசுவேன். நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டீர்கள் என்று பேசினார். பாராளுமன்றத்திலே இப்படிப் பேசினால், அது வேறு இடம்; இது வேறு இடமாகிவிட்டது. சட்டமன்றத்திலே ஒரு அமைச்சர் பேசும்போது நிதானமாக, நான் என்னுடைய பதிலுரையில் தெளிவாகக் கூறினேன். அவர் ஏதோ பத்திரிகையில் ஆதாயம் தேடவேண்டும் என்பதற்காக அமைச்சர் அவர்கள்

இப்படி சொல்லிவிட்டார்கள் என்று தி.மு.க. உறுப்பினர் புகழேந்தி போன்றவர்கள் எல்லாம் கேட்கிறார்கள். நிதானம் தேவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு. (குறுக்கீடு) பேசி முடித்த பிறகு, நான் என்ன பேசினேன் என்பதை நீங்கள் தயவுசெய்து அங்கே இருக்கக்கூடிய ரிக்கார்டை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) எதை வேண்டுமானாலும் இப்போது பேசலாம் என்று பேசக் கூடாது. இப்பொழுது நீங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கிறீர்கள். ஆக, பேசும்போது எதைப் பேச வேண்டுமென்று சற்றுச் சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** எதை வேண்டுமானாலும் பேசலாம்........ (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்களுக்குக் கண் எரிந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) ஒன்றல்ல, இரண்டல்ல; இந்தியத் திருநாட்டிலே, நீதிமன்றத்திலே, வழக்குகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எத்தனை வழக்குகள் போட்டாலும், அத்தனை வழக்குகளையும் சந்தித்து, நீதிமன்றத்திலே நிரபராதி என்று நிரூபித்து நான் வருவேன் என்று சொல்லி சபதம் எடுத்து இங்கே வந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திற்குச் சென்றவுடனே நான் அங்கே உள்ள நாடாளுமன்ற நூலகத்திற்குச் சென்று இருக்கிறேன். Article 356-ஐ எந்தெந்த மாநிலத்திலே உபயோகித்து இருக்கிறார்கள் என்பது குறித்து அங்கே ''President's Rule in the States and Union Territories" என்ற ஒரு புத்தகத்தில் இருந்தது. அதையும் நான் படித்துப் பார்த்தேன். அந்தப் புத்தகத்திலே, முதன்முதலாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்திலே, "In this report the Governor has stated that the D.M.K. Ministry has done a serious act of mal-a dministration, corruption and misuse of power" என்று இருந்தது. இதை உங்களில் யாராலும் மாற்ற முடியாது.

அதற்கு அடுத்து, ''Growing L.T.T.E. activities in the State resulting in the law and order situation and the State Government's ineffectiveness in containing their activities" (குறுக்கீடுகள்) இது பாராளுமன்றத்தில் இருக்கும் புத்தகத்தில் உள்ள வாசகம். இது உங்களுக்கே தெரிகிறதே. பாராளுமன்றத்திற்குச் சென்று நீங்கள் படியுங்கள். தெரியும். (குறுக்கீடுகள்) No. No. I am not yielding (Interruption) I am not yielding (Interruption) I am not yielding to you. நான் முடித்த பிறகு பேசுங்கள். இதை நான் உங்களுக்குத் தருகிறேன். தாராளமாகப் படியுங்கள் (குறுக்கீடுகள்) இது பாராளுமன்ற வெளியீடு. (குறுக்கீடுகள்.)



***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு article 356-ஐ use பண்ணி எந்த ஒரு ஆட்சியைக் கலைத்தாலும், அதன்மீது இப்படிப்பட்ட குற்றம் சொல்லித்தான் அவர்கள் கலைப்பது வழக்கம். நாயை அடிக்கிறபோதுகூட அது பைத்தியம் என்று சொல்லுவார்கள். அதேநேரத்திலே, முன்னாள் முதலமைச்சராக மாண்புமிகு அமரர் எம்ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலே, அவர் ஆட்சி கலைக்கப்பட்ட காலத்திலேயும்சரி, ஏன், அன்றைக்கு இருந்த ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்டினுடைய அமைச்சரவையைக் கலைத்த காலத்திலேயும்சரி, கலைப்பதற்கு முன்னால் மத்திய அரசு இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லித்தான் கலைத்து இருக்கிறது. ஆனால், இதுவரையில் யாரும் அதைப் பேசாமல் இருந்தார்கள். திரு. பொம்மை அவர்கள் அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குப் போன பிறகுதான், அதற்கு ஒரு விடிவுகாலம் வந்தது. இப்பொழுது பொய்யான குற்றச்சாட்டைச் சொல்லி எந்த ஒரு மாநில அரசையும் மத்திய அரசு கலைக்க முடியாது என்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாடாளுமன்றத்திலே இருந்து எடுத்த புத்தகத்தைத்தான் உங்களிடம் காண்பித்தேன். ஆக, இந்தியத் திருநாட்டிலே, (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 1957-ஆம் வருடத்திலே ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய தலைமையிலே இருந்த அரசு கவிழ்க்கப்பட்ட நேரத்திலேயும் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன என்று சொன்னார்கள். ஆனால் அந்த அமைச்சரவைக்கு எதிராக எந்த Corruption charges-ம் அன்றைக்குச் சொல்லப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். ஏதாவது ஒரு குற்றச்சாட்டை— இதுமாதிரி குற்றச்சாட்டு அல்ல, ஏதாவது ஒரு குற்றச்சாட்டு— என்று நான் சொன்னேன்; அவ்வளவுதான்.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் இந்தப் புத்தகத்தைத் தருவித்துப் பார்த்தேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒன்றும் இல்லை. அப்படி ஒன்றும் இல்லை. புத்தகத்திலே இருக்கிறது. நீங்கள் நினைத்தால்கூட அதை மாற்ற முடியாது. ஆக, பாராளுமன்றத்தின் மூலம்

கலைத்தார்கள். எதற்காக? ஊழல் செய்திருக்கிறார்கள் என்ற காரணத்தால் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுடைய ஆட்சியைக கலைத்து இருக்கிறார்கள். எங்கள் தலைவிமீது வழக்குப் போட்டீர்கள். நிரபராதி என்ற தீர்ப்பை நாங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறோம். உங்களுக்கு அப்படி அல்ல; பாராளுமன்றத்தில் சென்றாலும் ஊழல், ஊழல்தான்; சர்க்காரியா கமிஷன் சென்றாலும் ஊழல் ஊழல்தான். அதை நீங்கள் அழிக்கவே முடியாது. எந்தக் காலத்திலும் நீங்கள் அழிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைசசர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அதிலேகூட ஊழல் என்பது இல்லை. அதனால்தான் நான் சொல்கிறேன். யாரோ சேற்றை வாரி இறைத்துவிட்டுப் போய் இருக்கிறவன், எழுதி வைத்த எழுத்தையெல்லாம் கொண்டுவந்து இங்கே அமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்கிறேன். அது ஒன்றுமல்ல. அப்படி திருப்பிச் சொல்வதற்கு எங்களுக்கும் நேரமாகாது.

**டாக்டர் க. பொன்முடி:** எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியைக் கலைத்தார்களே, எதனால்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், வாசியுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** புத்தகம் இருக்கிறது, புத்தகம் தருகிறேன். படியுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாகவா பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) நான் படித்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் படித்துக் கொண்டிருக்கிறேன் அல்லவா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் அதுபற்றிப் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** 1980-ஐக் குறித்தும் படிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு



வேண்டுமானால் இந்தப் புத்தகத்தைக் கொடுக்கிறேன். தயாராக இருக்கிறார்களா? நான் இதை...(குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கையை நீட்டிப் பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். உங்கள் துணைத் தலைவர் கேட்டார், அவர் பதில் சொல்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் புத்தகத்தைத் தருகிறேன். ஊழல் என்பது உங்களுக்குக் கொடுத்த பட்டம்தான், வேறு எந்த அரசாங்கத்திற்கும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். புத்தகத்திலே ஊழல் என்ற பட்டம் உங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நன்றாகப் படியுங்கள். நான் இந்தப் புத்தகக்தைத் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்திலே கொடுக்கப்பட்ட குறிப்பைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** திரு. பொன்முடி அவர்களே, நாடாளுமன்றத்தில் இருந்து எடுத்து வந்த புத்தகம். மாண்புமிகு பேரவை உறுப்பினருக்குச் சந்தேகம் இருந்தால், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. பொன்முடி அவர்களுக்கு சந்தேகம் இருந்தால், அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக இந்தப் புத்தகத்தை வாங்கிக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்போதிருந்த அரசு கலைக்கப்பட்டபோது,—மத்திய அரசு என்ன சொன்னது என்ற கருத்தை, நாடாளுமன்றம் வெளியிட்ட ஒரு குறிப்பைப் படிக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அச்சிடப்பட்ட குறிப்பைப் படிக்கிறார்கள். அவராகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** வழக்குகளைப் போட்டவர்கள் (குறுக்கீடு) ஐயா, புத்தகம் வேண்டுமானால் உங்கள் M.P. மூலமாக வாங்கிக் கொள்ளுங்கள். நாடாளுமன்றத்திலே இந்தப் புத்தகம் தாராளமாக இருக்கிறது. நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.

**திரு. இ. புகழேந்தி:** தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அமைச்சர் அவராக எதுவும் சொல்லவில்லை. நாடாளுமன்றத்திலே இருந்து வெளியிடப்பட்ட ஒரு நூலிலிருந்து, அன்றைக்கு இருந்த அரசு கலைக்கப்பட்டது சம்பந்தமாக மத்திய அரசு என்ன தகவல் சொல்லி இருக்கிறது என்பதைத்தான் படிக்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** அவர் வருவாய்த் துறை மானியத்திலே உரையாற்றும்போது, அதில் அறிக்கை கொண்டுவந்து படித்தார். பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட அறிக்கையில் இப்படி எழுதப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், அதுதான்.

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், அதைத்தான் திருப்பிச் சொன்னேன். ஆட்சியைக் கலைப்பதற்கு முன்னால், மத்தியிலே இருக்கிற ஆட்சி, கவர்னரிடத்திலே இப்படிப்பட்ட சிபாரிசுகளை வாங்குவதும், பழி சுமத்துவதும்...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஊழல் என்று சொல்லித்தான் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஊழல் என்று சொல்லித்தான் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னதும் குறிப்பேட்டிலே இருக்கிறது. நீங்கள் சொன்னதும் குறிப்பேட்டிலே இருக்கிறது. அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவரவர்களே, நீதிமன்றங்களிலே வழக்குகள் எல்லாம் விசாரணைக்கு வரும்போது இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பல கருத்துக்களைச் சொன்னார்கள். உங்களுடைய மேயர் அவர்கள் தீர்ப்பு வருவதற்கு முன்னாலே பல இடங்களிலே எங்களுடைய அம்மா அவர்கள், தேர்தலிலே நிற்க முடியாது என்று கூட்டத்தைக் கூட்டிப் பேசினார்கள். ஆக, தேர்தல் விதி இருக்கிறது. (குறுக்கீடு) ஆக தேர்தலிலே எத்தனை தடைகள் வந்தாலும், அத்தனை தடைகளையும் மீறி இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எனவே, உங்களுடைய வழக்குகள் எல்லாம் பொய் வழக்குப் பொய் வழக்கு என்று பல தடவை எங்களுடைய அம்மா அவர்கள் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். பொய் வழக்கு, பொய் வழக்கு என்று கூறும்போது, நீங்கள் நீதிமன்றத்திலே அது நிலுவையில் இருக்கிறது என்று கூறினீர்கள். வழக்குகளுடைய நிலைகளைப்



பார்த்தீர்களா, ஏன் நான் இதை மீண்டும் மீண்டும் கூறுகிறேன் என்றால், உங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுககு நிதானம் தேவை என்றார்கள். 1991-96 ஆம் ஆண்டு வரை நிதானத்தோடு இருந்ததனால்தான் ஒரு வழக்கு கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எந்த சட்டமன்ற உறுப்பினர்மீதும் மாண்புமிகு அம்மா அவர்கள் போடவில்லை.

நிதானத்திற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு; இது தான் நிதானம். (குறுக்கீடு)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையற்றது. திரு. பன்னீர்செல்வம், இது உங்களுக்குப் பழக்கமாகப் போயிற்று. மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டு பேசக் கூடாது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அரசினுடைய சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கிய கருவியாக வருவாய்த் துறை விளங்குகிறது. பொது மக்களுடைய வாழ்வின் பிறப்பிலிருந்து இறுதி நிகழ்ச்சி வரை...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். கண்டித்தாயிற்று.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பல்வேறு நிலைகளில் பணியாற்றுகிற துறை வருவாய்த் துறை. அமைப்பிலே எல்லாத் துறைகளுக்கும் மூத்த துறையாக இது விளங்கிக்கொண்டு இருக்கிறது. பல்வேறு துறைகளினுடைய பணிகளை பல்வேறு கால கட்டங்களிலே இந்தத் துறையானது செய்து கொண்டு வருகின்றது. குறிப்பாக, இந்தத் துறையின் சார்பாகப் பொதுமக்களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும், பல்வேறு நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்த எந்த துறையின் மூலமாக என்ன என்ன திட்டங்கள் வகுக்கப்படுகின்றனவோ அந்தந்தத் திட்டங்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வுக்கு எடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய மாநிலம் இந்தியாவிலே முதலாவது மாநிலமாக ஆக வேண்டும் என்பதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே தமிழகத்தை முதலாவது மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதற்காகத் தான் முதன் முதலாக ஆண்டிப்பட்டியிலே Touch Screen Computer Kiosks என்ற முறையைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். தொடுதிரைக்

கணினி மாடங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தொடுதிரைக் கணினி மாடங்கள் முதல் கட்டமாகக் கிட்டத்தட்ட 28 வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு இருக்கின்றன. இதற்கான செயல்முறைகள் குறித்துப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், ஜாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இந்தச் ஜாதிச் சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரையிலே, அதுவும் குறிப்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்ட உடனே, பல்வேறு சூழ்நிலையில் பல இடங்களிலே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. உதாரணத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் தன்னுடைய தொகுதிக்குட்பட்ட ஒரு பிரிவு மலைஜாதி மக்களுக்கு ஜாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். உடனடியாக நேற்றையதினமே அதற்கு உத்தரவிட்டு ஜாதிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார் என்பதையும் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, வருவாய்த் துறையில் வேலை பார்க்கும் ஒவ்வொரு அதிகாரிக்கும் தனிப்பட்ட முறையிலே ஜாதிச் சான்றிதழ்களை வழங்க அதுவும் குறிப்பாக, மலைப் பகுதியில் வாழ்கின்ற மலை ஜாதி மக்களுக்கு ஜாதிச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக பல அறிவுரைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, அருமைச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் கொடுத்ததிலே கூட, அவர்கள் நேரிடையாகச் சென்று அதை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நீங்கள் கூறியும்கூட இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று என்னிடம் மீண்டும் வந்து சொன்னார்கள். நான் மீண்டும் அவர்களோடு தொடர்பு கொண்டேன். நாங்கள் இரு தடவை போகும்போதும் அந்தக் குழந்தை அங்கே இல்லை என்றும், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இருந்தபோதிலும் ஜாதிச் சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரையில் மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மற்றபடி அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதிலே நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.



**•திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக அதற்கு நிவாரணம் கண்ட அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த அவையின் மூலமாக நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அடுத்தாற்போல், இயற்கைச் சீற்றங்களின் துயர் தணிப்பு சார்பாகப் பல்வேறு இடங்களிலே பல நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எடுக்கப்பட்டு வருகின்றன. அதுவும் குறிப்பாக எதை எதை உடனுக்குடன் செய்ய முடியுமோ, அததற்கு மாவட்ட ஆட்சியர் மூலமாகவும் அங்கே இருக்கக்கூடிய வருவாய்த் துறையினுடைய அதிகாரிகள் மூலமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள், நீங்கள் இந்த இயற்கைச் சீற்றத்தின் காரணமாக என்னென்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்றும், எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்றும், சில இடங்களுக்கு நிதி சரியாகப் போய்ச் சேரவில்லையே என்றும் விளக்கங்களை இங்கே கேட்டு இருக்கிறார்கள்.

Natural Calamity Fund என்பது மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து ஒதுக்குவது. மத்திய அரசிடமிருந்து வரக்கூடியதையும் மாநில அரசாங்கத்திலே தனியாக அதற்காக ஒதுக்கிய நிதியையும் வைத்தும் வழங்கக்கூடியது இந்த நிதியாகும். ஒரு எக்டேருக்கு முன்பு 1,000 ரூபாய் என்று கொடுத்து வந்ததைத் தற்சமயம் 2,500 ரூபாயாக வெள்ளச் சேதத்திற்கு உயர்த்தி இருக்கிறோம். மேலும் கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளச் சேதங்கள் ஏற்பட்டதன் காரணமாக 2,500 ரூபாய் போதாது, 5,000 ரூபாய் தரவேண்டும் என்று நாங்கள் இப்போது மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்காக 4-2-2002 அன்று வருவாய்த் துறைச் செயலாளர் மூலமாக மத்திய அரசுக்கு உடனடியாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மாநில அரசினுடைய பதிலை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருந்தபோதிலும் 4-2-2002 அன்று மீண்டும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு அவர்கள் உடனே அங்கே நிலுவையிலே இருக்கக்கூடிய ரூபாயை எடுத்துக் கொடுக்க உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று ஒரு கோரிக்கை வைத்தார்கள்.

பிற்பகல் 1-55

அதற்குப் பின்னால் 11-2-2002-இல் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் மழையினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு எக்டேருக்கு ரூபாய் 5,000 நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வந்தது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்றும் 5 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாநில நிர்வாக ஆணையத்திற்கும் தெரிவித்து, அமைச்சகத்திற்கும் தெரிவித்து, உடனடியாக உத்தரவு வழங்க வேண்டுமென்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. 11-2-2002-இல் மாநில இயற்கைச் சீற்ற இடர்பாடுகள் நிவாரணக் குழு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலே கூடி, முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் அனுப்பிவைத்த அறிக்கைகளையொட்டி, மீண்டும் 2,500 ரூபாயை 5,000 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று வலியுறுத்தியது. 5-3-2002, 7-3-2002, 13-3-2002, 20-3-2002, 22-3-2002, 16-4-2002 வரை, சேதம் அடைந்த பகுதிகளுக்கு எக்டேருக்கு ரூ.2500 லிருந்து ரூ.5,000 ஆக நிவாரணத் தொகை கோரியது நிராகரிக்கப்பட்டதை, சட்டமன்ற உறுப்பினர்களின் தொடர் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டும், சேதங்களின் மதிப்பைக் கணக்கில் கொண்டும், மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தலைமைச் செயலாளர் மூலமாக மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை இம்மாமன்றத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை கடிதம் எழுதி மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறார்கள். நன்றி. ஆனால், பக்கத்தில் இருக்கக்கூடிய பாண்டிச்சேரியிலே எக்டேருக்கு 2,500 ரூபாய் போதாது என்பதை மாநில அரசு உணர்ந்து, அதாவது ஏற்கெனவே ரூ. 2,500, என்பதுடன் ஒரு 500 ரூபாய் ஒவ்வொரு எக்டேருக்கும் கொடுத்து, புதுச்சேரி அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதேபோல் நம்முடைய அரசும் நம்முடைய பங்காக அந்த விவசாயிகளுக்கு ஏதாவது கொடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு, தமிழ்நாட்டினுடைய நிதி நிலைமை நன்றாகத் தெரியும். இருந்தபோதிலும் நீங்கள் பாண்டிச்சேரியைத் தமிழ்நாட்டுடன் ஒப்பிட்டுக்



கொண்டிருக்கிறீர்கள். 2,500 ரூபாய் என்பதை எப்படியாவது வலியுறுத்தி 5000 ரூபாயாக ஆக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். அதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 16-4-2002-க்குப் பிறகும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பதிவுத் துறை சம்பந்தமாகப் பல்வேறு கேள்விகளை இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேட்டார்கள். அதிலும் குறிப்பாக, போலி முத்திரைத்தாள்களின் புழக்கத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அருமைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்டார்கள். கடந்த காலங்களிலே சார்பதிவாளர் அலுவலகங்களில் மற்றும் கருவூலங்களில் முத்திரைத் தாள்களை விற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சென்னை துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு முத்திரைத் தாள் விற்பனை மையம் திறக்க அனுமதி கேட்டு, அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. விரைவிலே இந்த மையம் செயல்படத் தொடங்கும்.

முத்திரைத் தீர்வையைப் பணமாகச் செலுத்தலாம் என்பதை இந்த அவையிலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொது மக்கள் வெள்ளைத் தாளில்கூட ஆவணத்தை எழுதி, முத்திரைத் தீர்வையைப் பணமாகச் செலுத்தி, சான்று பெறலாம். இதற்கான வழிவகைகள் இருக்கின்றன. அதற்காக G.O.-வும் போட்டிருக்கிறார்கள். ஆகவே, முத்திரைத் தாள்களைப் பொறுத்தமட்டிலே கண்டிப்பாக முத்திரைத் தாள் தேவை என்பதில்லை. ஒரு வெள்ளைப் பேப்பரிலேகூட எழுதிக் கொடுத்து அதை நீங்கள் register பண்ணிக்கொள்ளலாம். அதற்குத் தகுந்த முத்திரைத் தீர்வையை நீங்கள் கட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கப்படுவது சம்பந்தமாக பல்வேறு கேள்விகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கேட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள 7 அச்சகங்களிலே—நேற்றைக்குக்கூட அருமைச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி அவர்களும், மற்றச் சட்டமன்ற உறுப்பினர்களும் அச்சகங்களை நவீனப்படுத்த வேண்டும்; இன்னும் 2 நவீனப்படுத்தப்படாமல் இருக்கின்றன.. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். (குறுக்கீடு) இரண்டு.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலே முதல் மாநிலமாக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்திலே, விருத்தாசலத்திற்கு 50 இலட்சமும், அடுத்தபடியாக திருச்சிக்கு 50 இலட்சமும், இந்த ஆண்டு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

## அறிவிப்புகள்

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றுக் கீழ்க்கண்ட அறிவிப்புகள் அறிவிக்கப்படுகின்றன:

*(1) புதிய சமாதான் திட்டம்:* பத்திரம் பதிவோர் வழிகாட்டி மதிப்பிற்கேற்ப முத்திரைத் தீர்வை செலுத்த மறுக்கும்போது சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிக்க துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு ஆவணம் அனுப்பப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் ஆவணங்கள் ஆண்டுக்காண்டு அதிகரிப்பதால் அரசுக்கு வரவேண்டிய முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும்பாதிப்பு ஏற்படுகிறது. பொதுமக்களும் மிகுந்த காலதாமதத்திற்கு ஆளாகிறார்கள். இதைத் தவிர்க்க சமாதான் திட்டத்தின் மூலம் சார்பதிவாளர் உத்தேசிக்கும் சொத்தின் மதிப்பிற்கும் ஆவணதாரர் குறிப்பிடும் சொத்தின் மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டில் 40 விழுக்காடு பத்திரம் பதிவோருக்கு தள்ளுபடி செய்து எஞ்சியுள்ள 60 விழுக்காட்டிற்கான முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தலாம் என்ற சலுகை வழங்கப்பட உள்ளது. இது தொடர்பான அரசு ஆணை மற்றும் அறிவிக்கை விரைவில் வெளியிடப்பட உள்ளது.

*(2) போலி முத்திரைத்தாள் விற்பனையைக் கண்காணிக்க ஒருங்கிணைந்த முயற்சிகள்:* பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைத் தாள்களை விற்பனை செய்தல், முத்திரைத்தாள் விற்பனை இடங்களைத் திடீர் ஆய்வு செய்தல், ரூ.1000 மற்றும் ரூ.5000 மதிப்புள்ள முத்திரைத்தாள்களில் கருவூல முத்திரையிட்டு வழங்குதல், போலி முத்திரைத்தாள் விற்பனை செய்பவர்மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்தல், போலி முத்திரைத்தாள்களைக் கண்டுபிடிக்க சார்பதிவகங்களில் புற ஊதா விளக்குகளைப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு போலி முத்திரைத்தாள் விற்பனையை அறவே ஒழிக்க அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. முத்திரைத்தாள் தட்டுப்பாட்டினைத் தவிர்க்கவும், பொதுமக்களை போலி முத்திரைத்தாள்



புழக்கத்திலிருந்து பாதுகாக்கவும், பதிவகங்களில் முத்திரைக் கட்டணத்தை ரொக்கமாகவும், கேட்புக் காசோலையாகவும் மற்றும் கருவூல இருசால் மூலமாகவும் செலுத்த சட்டத்தில் வழிவகை உள்ளது. பொதுமக்களின் பயன்கருதி, இதுகுறித்து விரிவான விளம்பரம் செய்யப்பட உள்ளது.

*(3) கணினிமயமாக்குதல்:* மக்களுக்கும் இத்துறைக்கும் பயன்படும் வகையில் கணினிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் மட்டும் 325 அலுவலகங்கள், கணினிமயமாக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 100 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள 225 அலுவலகங்கள் ஒருசில வாரங்களில் கணினிமயமாக்கப்பட்டு இயங்கத் தொடங்கும். இதுதவிர, நடப்பு நிதியாண்டில் மீதமுள்ள 300 அலுவலகங்களையும் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*(4) மாநிலத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தையும் மறு சீரமைப்பது தொடர்பாக:* சார்பதிவகங்களிலுள்ள பணிப்பளுவைக் கருத்தில்கொண்டு கூடுதலாகத் தேவைப்படும் பணியாளர்களைப் பணிப்பளு குறைவாக உள்ள இடங்களிலிருந்து பணியிடமாற்றம் செய்து கூடுதலாக நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி பணிப்பளு அடிப்படையில் பதிவகங்கள் திருத்தியமைக்கப்படும்.

*(5)* கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி மற்றும் மார்த்தாண்டம் ஆகிய பதிவு மாவட்டங்களில் நகராட்சி அல்லாத பகுதிகளில் உள்ள வீட்டு மனைகளின் மதிப்பு விளைநிலத்தின் மதிப்பில் 3 மடங்கு எனக் கணக்கிட்டு அதன்மீது முத்திரைத் தீர்வை வசூலிப்பதற்கு பதிவுத் துறைத் தலைவர் 1-2-1999 அன்று சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். இதை எதிர்த்து அப்பகுதிப் பொதுமக்களிடமிருந்தும், சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. டி. மணி ஆகியோரிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த உத்தரவை இரத்து செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த நடவடிக்கைக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பிலும், எங்களுடைய சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** வருவாய்த் துறையைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை இங்கே அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நிலநடுக்கங்கள் அடிக்கடி நிகழ்கின்றன என்பது அண்மைக் காலங்களில் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கங்களைச் செவ்வனே கண்காணிக்க துல்லிய அளவு-I நிலையிலான 4 நிலநடுக்க உணர்வு மையங்களை முதற்கட்டமாக காவலூர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் கிரனூர் ஆகிய இடங்களில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மைய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை முதற்கட்டமாக நிறுவப்படவுள்ள 3 நில நடுக்க உணர்வு மையங்களுக்கு மட்டும் தேவையான கருவிகளை இலவசமாக வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இராமநாதபுரத்தில் நிறுவப்படவுள்ள மையத்திற்குத் தேவையான கருவியினையும், இந்நான்கு மையங்களை நிறுவுவதற்குத் தேவையான நிலம் மற்றும் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தர மாநில அரசு இசைந்துள்ளது. இதற்காக மாநில அரசுக்கு ஏற்படும் செலவு சுமார் 12 இலட்சம் ரூபாயாகும்.

பிற்பகல் 2-05

கடந்த ஆண்டு பருவமழைக் காலத்தில் மிகக் குறைந்த அளவு மழை பெய்ததாக திண்டுக்கல், விருதுநகர், நீலகிரி, மதுரை, ஈரோடு, நாமக்கல், சிவகங்கை, திருவண்ணாமலை, கரூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளனர். அவர்களுடைய அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவுடன் ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையிலும் அதன்மீது முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையிலும் மேற்கண்ட மாவட்டங்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இயற்கைச் சீற்ற நிவாரண நிதியில் இருந்து ரூ.31.27 கோடி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்ட நிர்வாகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, சிரமப்படாதீர்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** உங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை வந்தவுடன் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட நிர்வாகத்தினுடைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு ரூ.44 கோடியை 11-வது நிதிக்



குழு (2000-2005-ம் ஆண்டுக்காக) அனுமதித்துள்ளது. இதற்குச் சமமான தொகையை மாநில அரசு வழங்கும். அதற்கேற்ப, 1993ஆம் ஆண்டுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட மாவட்டங்களிலே உள்கட்டமைப்பு வசதிகளையும் ரூ. 25.00 கோடி செலவிலே நடப்பு ஆண்டில் மேம்படுத்த அரசு கருதியுள்ளது. இந்த வசதிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் அமைத்தல், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள், வருவாய்க் கோட்ட ஆட்சியாளர்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுதல்/கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டுதல், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் இதர வசதிகளான தளவாடங்கள், நகல் எடுக்கும் இயந்திரம், fax முதலியன வழங்குவதையும் உள்ளடக்கியது. இவை தவிர வருவாய்த் துறை கட்டடங்கள் அல்லாதவைகளான வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுதல், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கு அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல், ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம், கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் அலுவலகம் முதலியன கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்து எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை. மாண்புமிகு அம்மா அவர்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் திருச்சி, விருத்தாசலம் கிளைகளுக்கு புதிய கருவிகள் வாங்குவதற்கு 2002-2003ஆம் நிதி ஆண்டிலே ரூபாய் ஒரு கோடி, அதாவது ஒவ்வொரு கருவியும் ரூபாய் 50 இலட்சம் என்ற அடிப்படையிலே இரண்டு கருவிகள், இரண்டு இடத்திற்கு வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லி, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று வேண்டி விடைபெறுகிறேன்.

## (அ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போ[illegible] வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை, வெட்[illegible] தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். [illegible] ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாக கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வருவாய்த் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 39-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,26,39,26,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.25,00,02,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



**(ஆ) கோரிக்கை எண் 11-வணிக வரித் துறை- முத்திரை தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11-வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஈ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய மானியக் கோரிக்கை எண் 11-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.78,20,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.



பிற்பகல் 2-10

## (இ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய—வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய மானியக் கோரிக்கை எண் 29-ல் வருவாய்க் கணக்கில் ரூ.50,22,71,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகர் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஊ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய மானியக் கோரிக்கை எண் 49-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.114,67,79,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### ஆ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*131. 2000-2001ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*132. 2000-2001ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்*

(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

133. 2000-2001ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

134. 2000-2001ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

135. 2000-2001ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

136. 2000-2001ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

130. பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2001-2002)

131. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2001-2002)

132. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2001-2002)

133. மானியக் கோரிக்கை எண். 11-வணிக வரித்துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)



134. மானியக் கோரிக்கை எண். 11, 2002-2003 ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

135. மானியக் கோரிக்கை எண்.29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்).

136. மானியக் கோரிக்கை எண். 29, 2002-2003 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

137. மானியக் கோரிக்கை எண். 39, வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 49-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண். 39, 2002-2003 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

139. மானியக் கோரிக்கை எண். 49, 2002-2003 ஆம் ஆண்டிற்கான இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

## இணைப்பு-I

*(383 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

## கோரிக்கை எண் 49—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர்த்தணிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002 - 2003

## அத்தியாயம்-I

**முன்னுரை**

அரசின் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கிய கருவியாக வருவாய்த் துறை விளங்குகிறது. பொது மக்களின் வாழ்வில் பிறப்பிலிருந்து இறுதி நிகழ்ச்சியாம் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் பணியாற்றுகிற துறை இத்துறையாகும். வருவாய்த் துறை, நிர்வாகத் துறைகளின் அமைப்பில் பாரம்பரியமும் பெருமையும் மிக்க மூத்தத் துறையாகும். நிர்வாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்குவதுடன், கட்டுக் கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுவது வருவாய்த் துறையாகும்.

2. மக்களுடைய நில உடைமை உரிமையைப் பாதுகாத்தல், நில வருவாய், ஆவணங்களைப் பராமரித்தல், மேம்படுத்துதல் முதலிய இன்னோரன்ன பணிகள் வருவாய்த்துறையின் முக்கிய பணிகளாகும். நில கையகப்படுத்துதல், நில ஒப்படை, நில குத்தகை முதலிய பணிகள் அனைத்தும் வருவாய்த் துறை மூலம் செய்யப்படுகிறது. நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி, மிகை நிலங்களை ஒப்படை செய்வதன் மூலம் சமுதாய சமத்துவத்தை உருவாக்கும் முயற்சியை வருவாய்த் துறை மேற்கொண்டுள்ளது. நகர்ப்புற நிலவரி, வேளாண்மை வருமானவரி மற்றும் நிலவரியை வருவாய்த் துறை வசூல் செய்கிறது. இந்த வரி வசூல் மாநிலத்தின் மொத்த வருவாயில் ஒரு பங்களிப்பு ஆகிறது.

3. வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலக் கட்டங்களில் வருவாய்த் துறைதான் முதலில் மக்களை நாடிச் செல்கிறது. இயற்கைச் சேதங்கள் எதிர்நோக்கப்படுமானால், பொது மக்களை முன்கூட்டியே எச்சரிப்பது வருவாய்த் துறை ஆகும். பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று, அவர்களுக்கு உணவு, உறைவிடம் அளிப்பதுடன் அத்தியாவசிய பொருட்கள் வழங்கி உதவித் தொகைகளையும் வருவாய்த் துறை வழங்கி வருகின்றது.

4. வருவாய் நிர்வாகம், பலதரப்பட்ட அலுவலர்களைக் கொண்ட அமைப்பாகும். மாநில அளவில், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம், மற்றும் நிலச் சீர்திருத்தம் தொடர்பான பணிகள் முறையே வருவாய் நிருவாக ஆணையர், நில நிர்வாக ஆணையர், மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், அவருக்குத் துணையாக மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களும் உள்ளனர்.



# அத்தியாயம்—II

## வருவாய் நிர்வாகம்

### 1. மாவட்ட வருவாய் நிர்வாகம்

மாவட்ட நிர்வாகம் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டிலும் அமைந்து சட்டம் ஒழுங்கைப் பராமரித்தும் மற்றும் மாவட்ட அளவில் இதர ஏனைய செயல்பாடுகளை முறைப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைந்த மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் மற்ற முக்கியமான பணிகளில் மனுநீதித் திட்டம் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சிகளை நடத்துவது ஆகும். சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் முதலியன வழங்குவது மாவட்ட நிர்வாகத்தின் மற்றும் ஒரு பொறுப்பாகும். மாவட்ட நிர்வாகத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராக இருப்பதால், எத்துறைத் தொடர்பான குறைகளாக இருப்பினும், அவற்றைத் தீர்ப்பதற்கு பொது மக்கள் மாவட்ட ஆட்சியரையே அணுகுகின்றனர். எனவே, மாவட்ட ஆட்சியரும், பல நிலையிலான வருவாய் அலுவலர்களும் மக்கள் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டியுள்ளது. அனைத்து வருவாய்த் துறைப் பணிகளையும் கணினிமயமாக்குவதன் மூலம் பொது மக்களுக்கும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் இடையே பெருமளவில் நெருக்கம் அதிகரித்துள்ளது.

#### 1.1 மனுநீதித் திட்டம்

(i) மனுநீதித் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காகச் செயல்பட்டு வருகிறது. இதர அரசுத் துறை மற்றும் வங்கி அலுவலர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். நிர்வாகம் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

(ii) மனுநீதித் திட்டம் மாதம் ஒரு முறை இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. இரண்டாவது புதன்கிழமை அரசு விடுமுறையாக அமையின் அடுத்து வரும் பணி நாளில் மனுநீதித் திட்டம் நடத்தப்பட வேண்டுமென அரசு கடித எண் *45010/வ.நி.3(2)/2001-1*, வருவாய், நாள் *14-12-2001-ல்* ஆணையிட்டுள்ளது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லா

கிராமங்களிலும் நடத்தப்படும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(iii) மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் எந்தெந்தக் கிராமங்களில் எந்தெந்தத் தேதியில் இத்திட்டத்தை நடத்த வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை மாவட்ட ஆட்சியர் முன்னதாகவே தயாரிக்கிறார். மாதம் ஒரு முறை நடத்தப்படும் இம்மனுநீதித் திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் தள்ளி வைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(iv) மனுநீதித் திட்டத்தின் வாயிலாகப் பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு மக்களின் குறைகள் களையப்படுகின்றன.

(v) மனுநீதித் திட்டத்தினைத் தீவிரமாகக் கண்காணித்து ஆய்வு மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 25-ம் தேதிக்கு முன்னர் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை ஆய்வு செய்து இந்தத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அரசுக்கு காலாண்டு அறிக்கை ஒன்றை அனுப்புவார்.

(vi) 2001ஆம் ஆண்டு 240752 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் 225735 மனுக்கள் மீது முடிவுகள் செய்யப்பட்டன.

### 1.2. பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

(i) ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/ வருவாய்க் கோட்ட அலுவலர்கள்/ வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடங்களிலேயே இருந்து பொது மக்களிடமிருந்து மனுக்களை பெற்று, பிற துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்று, குறிப்பிட்ட நாளில் மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்கிறார்கள்.

(ii) ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தொடங்கப்பட்டு அது ஒரு தனித் துணை ஆட்சியர்



(மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) கட்டுப்பாட்டிலும், மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித் துணை ஆட்சியருக்குத் தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தும் "நிக்நெட்" கணிப்பொறி மூலம் கிடைக்கும் விவரங்களைக் கொண்டும், மக்கள் குறை தீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின் மீது மாவட்டத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

(iii) அரசாணை (நிலை) எண் 104, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள், 15-6-2001-ல் அரசு மாநிலத்தில் ஒரு மாசுமறுவற்ற தூய்மையான திறமைமிக்க நிர்வாகத்தை செயல்படுத்த உறுதிபூண்டு அதன்படி பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்குரிய பதிலை அளிக்கத் தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது. அதாவது 5 நாட்களுக்குள் மனுக்களுக்கு ஒப்புகை அளித்தல், 90 நாட்களுக்குள் மனுக்களின் மீது முடிவு செய்தல், கணினியில் அப்போதைக்கப்போது உள்ள நிலவரத்தைப் பதிவு செய்தல் மற்றும் கோப்புகளை முடிவு செய்யும் வாரத்தை அனுசரித்தல் போன்றவைகளாகும்.

(iv) 2001ஆம் ஆண்டு 334895 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 316081 மனுக்கள் மீது முடிவுகள் செய்யப்பட்டுள்ளன.

### 1.3. சாதிச் சான்றிதழ்கள் முதலியன வழங்குதல்

(i) பள்ளிப்படிப்பை முடித்த பின், மேற்படிப்புக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

(ii) வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இந்த முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே இந்த சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படுகிறது. வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்குப் பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு, பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது.

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றிதழ்கள், மாறுதல் சான்றிதழுடன் (Transfer Certificate) பள்ளி நிர்வாகத்தால் ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 2. ஆட்சி எல்லைகள் சீரமைத்தல்

தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| மாவட்டங்கள் | 30 |
| கோட்டங்கள் | 73 |
| வட்டங்கள் | 206 |
| உள் வட்டங்கள் | 1120 |
| கிராமங்கள் | 17274 |

செலவைக் குறைக்கவும், நிருவாகத் திறனை மேம்படுத்தவும், அரியலூர் மாவட்டத்தைப் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. விரிவுப்படுத்தப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தின் தலைமையிடம் பெரம்பலூராக இருக்கும். இருப்பினும், விரிவுபடுத்தப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் வருவாய்க் கோட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அரியலூரில் தற்போது இயங்கி வரும் அரசு அலுவலகங்கள் (மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தவிர) மாவட்ட இணைப்புக்குப் பின்னும் அரியலூரிலேயே தொடர்ந்து செயல்பட அரசு முடிவு செய்துள்ளது.

## 3. உள் கட்டமைப்பு வசதிகள்

3.1. மாவட்டங்களில் உள் கட்டமைப்பு வசதியைப் பெருக்குவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து மாவட்ட ஆட்சியர் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரை அரசு அலுவலகக் கட்டடங்கள், அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.



3.2. 1993-க்குப் பிறகு உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், தேனி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் அரசு கட்டடங்கள் கட்டவும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும் 11-வது நிதிக்குழு ரூ.44 கோடி அளித்துள்ளது. இதற்கு இணையான தொகை மாநில அரசின் பங்காக அளிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். இத்திட்டத்தின் காலம் 2000-2005 முடிய ஐந்து ஆண்டுகள், அரசாணை நிலை எண் 78, வருவாய்த் (வ.நி.2) துறை, நாள்: 13-2-2002 இல் 2001-2002 முதல் 2003-2004 ஆண்டுகளில் செலவிட ரூ.73.96 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 அலுவலகக் கட்டடங்கள்

### (i) பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டில் தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் யாவும், அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தைத் தவிர, விரிந்த பரப்பில் நன்கு வடிவமைக்கப்பட்டு இதற்கென கட்டப்பட்ட அரசு கட்டடங்களில் அமைந்துள்ளன. இவை மாவட்டப் பெருந்திட்ட வளாகங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் அப்பகுதிக்கான அனைத்து முக்கிய மாவட்ட அலுவலங்களும் அமைந்துள்ளன. இந்தக் கட்டடங்கள் அப்பகுதியில் மிக முக்கிய இடமாகவும், அனைவரையும் கவரக்கூடிய வகையிலும் அமைந்துள்ளன. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. இடத்தேர்வு முடிவடைந்த பின்னர், பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட பெருந்திட்ட வளாகம் 11-வது நிதிக்குழு நிதியிலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (ii) வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்திலுள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் 72 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ரூ.35.20 இலட்சம் செலவில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ. 14 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**(iii) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

மாநிலத்தில் மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து 6 வட்டாட்சியர் அலுவலகங்கள் வரும் மூன்று ஆண்டுகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மானூர், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**3.4. குடியிருப்புக் கட்டடங்கள்**

**(i) மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் கட்டுதல்**

மாநிலத்தில் மொத்தமுள்ள 30 மாவட்ட ஆட்சியர்களில் 20 மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசுக் குடியிருப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களில் 6 மாவட்ட ஆட்சியர்களுக்கு அந்தந்த மாவட்ட பெருந்திட்ட வளாகத்திலேயே 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து குடியிருப்புகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது.

**(ii) மாவட்ட வருவாய் அலுவலர்கள் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 30 மாவட்டங்களில் சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடம் உள்ளன. இதில் 19 மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 10 மாவட்டங்களில், 6 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(iii) வருவாய்க் கோட்ட அலுவலர்கள் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில், 58 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 15 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் 8 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து குடியிருப்புகள்





கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(iv) வட்டாட்சியர்கள் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர்களில், 169 வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 37 வட்டாட்சியர்களில் 10 வட்டாட்சியர்களுக்கு 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள 5 வட்டாட்சியர்கள் தவிர, மீதமுள்ள வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(v) வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 1120 வருவாய் ஆய்வாளர்களில் 1080 வருவாய் ஆய்வாளர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. சென்னையில் உள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு அரசு குடியிருப்புகள் தேவையில்லை. 4 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் 11-வது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(vi) கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதிகள் படிப்படியாக செய்து தர கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க முதலில் மலைப்பகுதியில் உள்ள கிராமங்கள், கடற்கரையோர கிராமங்கள் மற்றும் கூர் உணர்வு உள்ள கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மலைப்பகுதி மிகுந்த தருமபுரி, சேலம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில், மலைப்பகுதிகளில் உள்ள 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து புதிதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், தேனி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 106 கிராம நிர்வாக

அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் வரும் மூன்று ஆண்டுகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2001-2002ஆம் ஆண்டில் 4000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டச் செலவினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பிற வகை நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும். கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் ஊராட்சி அலுவலகத்துடன் ஒட்டியும சுமார் 180 சதுர அடி பரப்பளவிலும் ஒவ்வொன்றும் ரூ.60,000/- செலவிலும் கட்டப்படும். ரூ.9.90 கோடி செலவில் 1650 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், பகுதி 2 திட்டத்தின் கீழும் ரூ.14.10 கோடி செலவில் 2350 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2001-2002 இன் கீழும் கட்டப்படும். மொத்த திட்ட மதிப்பீடு ரூ.24 கோடி ஆகும். இத்திட்டத்திற்காக ரூ.24 கோடியை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் கடனாக அளிக்கும்படி கோரப்பட்டு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் முதல் தவணையாக ரூ.12 கோடி அளித்துள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநர், பணி முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகிறார். இதுவரையில் 652 அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை 30-4-2002-க்குள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டம் 2002-2003-இலும் தொடரப்படுகிறது.

## 4. மோட்டார் வாகனங்கள்

வருவாய் அலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்குவது அத்தியாவசியத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் தேவைக்கேற்ப சீருந்துகளும், ஈப்புகளும் அரசு வழங்குகின்றது. கழிவு செய்த வாகனங்களுக்குப் பதிலாக, புதிய வாகனங்கள் வாங்குவதற்கு துறைத் தலைவர்களுக்கு அரசால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. கிராம நிர்வாகம்

*5.1.* கிராம நிர்வாகம் என்ற அடித்தளத்தின் மீதுதான் மாவட்ட வருவாய் நிர்வாகம் முழுவதும் அமைந்துள்ளது. பழைய கிராம நிர்வாக அமைப்பினை 1980-ம் ஆண்டு மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்ததன் விளைவாக பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் 14.11.1980 முதல் ஒழிக்கப்பட்டு வருவாய் கிராமங்களில் முழு நேர கிராம நிர்வாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் ஆணைக்கிணங்க (i) 14-11-1980 அன்று பதவியில் இருந்த



தகுதியுடைய முன்னாள் கிராம அலுவலர்கள், (ii) 14-11-1980 அன்று பதவியில் இருந்து 1982-க்குப் பின்னர் கல்வித்தகுதி (S.S.L.C. Passed) பெற்ற முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள் மற்றும் (iii) 14-11-1980-ல் பணியில் இல்லாத ஆனால், 14-11-1980-க்கு முன்னர் சிறிது காலம் பணியாற்றிய முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள் ஆகியோர் முழு தகுதி பெற்றிருப்பின் அவர்களை கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்ய அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 5.2. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

14-11-1980-இல் பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் ஒழிக்கப்பட்டதன் மூலம் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் வழங்க அரசாணை (நிலை) எண் 828, வருவாய், நாள்: 23-8-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி,

(i) முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.175 மற்றும் அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய்த் (பணி-VII) துறை, நாள் 22-7-1998-ல் ரூ.250/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. (இன்றைய தேதியில் மாதமொன்றுக்கு சுமார் ரூ.800/-அளவில் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.)

(ii) 14-11-1980 அன்று பணியிலிருந்து பின்னர் உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதம் ரூ.100/- குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய்த் (பணி-VII) துறை, நாள் 22-7-1998-ல் ரூ.150/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(iii) 14-11-1980 அன்று தற்காலிக பணி நீக்கம்/விடுப்பில் இருந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கும் அரசாணை (நிலை) எண் 753, வருவாய்த் (பணி-VII) துறை, நாள் 9-9-1998-ன் மூலம் இச்சிறப்பு ஓய்வூதிய திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.

(iv) 14-11-1980 அன்று பணி இழந்து, பின்னர் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்று கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்களில் 10 ஆண்டு குறைந்தபட்சத் தகுதிப் பணி முடிக்காமல் ஓய்வு பெற்றவர்களுக்கும், முன்னாள் கிராம அலுவலர்களுக்கான

சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்து வழங்க அரசாணை (பல்வகை) எண் 121, வருவாய்த் (பணி-VII) துறை, நாள் 13-3-2001-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(v) அரசாணை (பல்வகை) எண் 2261, வருவாய்த் துறை, நாள் 9-10-1978 இன் மூலம் 30-9-1980 அன்று 60 வயது பூர்த்தியாகி ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களுக்கும் முன்னாள் கிராம அலுவலர்களுக்குரிய சிறப்பு ஓய்வூதியத்தை வழங்க அரசாணை (பல்வகை) எண் 294, வருவாய்த் (பணி-VII) துறை, நாள்: 30-8-2001இல் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு 14-11-1980-க்கு முன்னர் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களும் இந்த ஓய்வூதியத்தின் பலனைத் துய்க்க அனுமதிக்கப்பட்டனர்.

**5.3. கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு**

அரசாணை (நிலை) எண் 386, வருவாய்த் (பணி-VII) துறை, நாள் 1-10-2001 இல் மாவட்டங்களில் ஏற்படும் உதவியாளர் பணியிடங்களில் 10 விழுக்காடு பணியிடங்களில் தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, நிர்ணயிக்கப்பட்ட ஏனைய சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உதவியாளர் ஆக பதவி உயர்வு அளிக்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

**5.4. கிராம உதவியாளர்கள்**

(i) அரசு தனது ஆணை (நிலை) எண் 623, வருவாய், நாள் 6-7-1995-ல் மாநிலம் முழுவதுமுள்ள 28,000 பகுதி நேர கிராம உதவியாளர்களை ரூ.600-10-750 என்ற புதிய ஊதிய விகிதத்தில் முழு நேர அரசு ஊழியர்களாக்கி ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணை 1-6-1995 முதல் அமலபடுத்தப்பட்டு வருகிறது. மேலும் 5-வது ஊதியக்குழு பரிந்துரையின்படி இவர்களது ஊதிய விகிதம் ரூ.1800-20-2240 என மாற்றி அமைக்கப்பட்டது. முழுநேர கிராம உதவியாளர்களின் பணி விதிகள், அரசாணை (நிலை) எண் 521, வருவாய், நாள் 17-6-1998-ல் வெளியிடப்பட்டுள்ளது. பணி வரன்முறை செய்யப்பட்ட, 1-6-1995-க்குப் பிறகு பணியிலிருக்கும்போது இறந்த கிராம உதவியாளர்களது வாரிசுகளுக்கு நடைமுறையிலுள்ள விதிகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்க அரசாணை (நிலை) எண் 362, வருவாய், நாள் 7-7-1999-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2002 ஏப்ரல் 19]

(ii) அரசு ஆணை (நிலை) எண் 1495, வருவாய், நாள் 1-9-1984-இல் கிராம உதவியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன்படி, கிராம உதவியாளர்கள் 31-5-1995 வரை பணி செய்த மொத்தக் காலத்தினை கணக்கில் எடுத்துக்கொண்டு பணி செய்த ஒவ்வொரு வருடத்திற்கும், அரை மாத ஊதியம் என்று கணக்கிட்டு பணிக்கொடை வழங்கப்படவேண்டும். 1-6-1995 முதல் கிராம உதவியாளர்கள் முழு நேர அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அரசு கடித (நிலை) எண் 469, வருவாய், நாள் 6-9-2000-இல் 5 வருடங்கள் பணி முடித்த கிராம உதவியாளர்களுக்கு, அரசு ஓய்வூதிய விதிகளின்படி ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவது போல் இவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**6. நிலவரி**

ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு விதிக்கப்படும் நிலவரி, தலமேல்வரி, கூடுதல்வரி, கூடுதல் தண்ணீர்வரி என்பன இதனுடைய பிற அம்சங்களாகும். 1-7-1967 முதல் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 1-7-1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்குக் குறைவாக நஞ்சை நிலங்கள் உள்ள தனி நபருக்கு மொத்த நஞ்சை தீர்வையில் புஞ்சை நிலத்தீர்வை அளவுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

2. தற்போது நடைமுறையில் உள்ள அரசு அறிவுரைகளின்படி நிலவரி பாக்கியினை வசூல் செய்வது தொடர்பாக அரசின் அனுமதியின்றி, கைப்பற்றுகை நடவடிக்கையில் யாரும் ஈடுபடக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலவரி வசூல் சுமூகமான முறையில் செய்யப்படுகிறது. பசலி ஆண்டு 1410-11-க்கான நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை 1-1-2001 முதல் 28-2-2002 வரையிலான விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**தள்ளுபடி**

**(i) பருவகால நிலவரி தள்ளுபடி**

ஒரு விவசாயி தனக்கு நிலவரி தள்ளுபடி பெற விரும்பினால் எந்த நிலத்திற்கு தள்ளுபடி வழங்கப்பட வேண்டும் என்பதை குறிப்பாக எழுத்து

மூலம் உரிய காலத்தில், சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், பயிராய்வு அலுவலரின் ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட வருவாய் அலுவலரால் நிலவரி தள்ளுபடி அனுமதிக்கப்படும். பருவநிலை தள்ளுபடியைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரித் தள்ளுபடி வழங்கப்படுவதில்லை.

**(ii) சில தவிர்க்கவியலாத சூழ்நிலைகளில் நிலவரி வசூலை நிறுத்தி வைத்தல்/தள்ளுபடி செய்தல்**

சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில், அதாவது பரவலாக நிலவிவரும் வறட்சி, பெருவாரியான நிலங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டால், நிலவரி வசூல் மற்றும் நிலவரி தீர்வை விதித்தல் ஆகியவற்றுக்கு நிறுத்திவைப்பு அல்லது தள்ளுபடி அரசால் அனுமதிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில், நிலவரி பாக்கித் தொகை மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. பயிர் உற்பத்தி 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தால் நிலவரி பாக்கித் தொகை, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் கூடுதல் மேல்வரி மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

## 7. இயற்கைச் சீற்றங்கள்

**மழை/வெள்ளம்**

7.1. தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதுமாகப் பெய்யவேண்டிய சராசரி மழையளவு 925 மி.மீ. ஆகும். ஆனால் ஜனவரி 2001 முதல் டிசம்பர் 2001 வரை 815.50 மி.மீ. அளவே மழை பெய்துள்ளது. இதில் வடகிழக்குப் பருவமழை காலமான அக்டோபர் 2001 முதல் டிசம்பர் 2001 வரை பெய்த மழையளவு மட்டும் 423மி.மீ. ஆகும். வேளாண்மை மற்றும் குடிநீருக்கு தமிழ்நாடு வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

7.2. தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் வடகிழக்குப் பருவ மழைக்காலத்தில் காற்றழுத்தத் தாழ்வுமண்டலம்/ புயல் போன்றவற்றால் ஏற்படும் மழை/ வெள்ளத்தால் கடலோர மாவட்டங்கள் பெரிதும்



பாதிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் இம்மாநிலத்தில், வட கிழக்குப் பருவமழைக் காலத்திலும், புயல் உருவாகும்போதும் ஏற்படும் சவால்களை நன்கு அமையப் பெற்ற பேரழிவு தடுப்புத் திட்டத்தின் மூலம் சமாளிக்க மாநிலம் தயார் நிலையில் இருந்து வருகின்றது. இம் மாநிலத்தில் 53 புயல் எச்சரிக்கை மையங்களும், 123 புயல் பாதுகாப்பு இல்லங்களும் உள்ளன. பேரழிவு தடுப்புத் திட்டம் மாநில நிவாரண ஆணையரான முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கண்காணிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும்போது, மாவட்ட அவசர காலத் திட்டத்தை செயல்படுத்தும் அதிகாரிகளான மாவட்ட ஆட்சியர்களால் பேரழிவு தடுப்புத் திட்டம் கண்காணிக்கப்படுகிறது.

7.3. வெள்ளம்/புயல்/தீ விபத்து ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

(அ) உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/- மாவட்ட ஆட்சியர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

(ஆ) முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. இந்த ஆணை 4-10-2001 முதல் அமலுக்கு வந்தது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

(இ) இறந்த கால்நடைகளுக்கு அதாவது, பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5000/-வீதமும், பசு மற்றும் எருமைக் கன்று ஒன்றுக்கு ரூ.3000/- வீதமும், செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால் நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

(ஈ) பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்கும் பொருட்டு கருவூல விதி 27-இன்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 19

(உ) வெள்ளம்/புயலால் பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

| வ.எண் | பயிர்வகை | நிவாரணத் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|
| | **வேளாண் பயிர்கள்** | |
| 1 | நெல | 2500 |
| 2 | நிலக்கடலை | 2500 |
| 3 | கரும்பு | 4000 |
| 4 | பருப்பு வகைகள் | 600 |
| 5 | பருத்தி | 1500 |
| 6 | தினைப்பயிர்கள் (சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் மக்காசோளம்) | 400 |
| | **தோட்டக்கலைப் பயிர்கள்** | |
| 1. | உருளைக்கிழங்கு, முட்டைக் கோஸ், கேரட், மிளகாய், வெங்காயம், காலிபிளவர், பூண்டு, மஞ்சள், வெற்றிலை, வாழை, திராட்சை, கொய்யா, சப்போட்டா, முந்திரி, காபி, ஏலக்காய், இலவம் பஞ்சு, மல்லிகை, கிராம்பு, கொத்து மலருடைய செடிவகை (Chrysanthemum.) கனகாம்பரம், சாமந்தி (Crossandra), வெண்ணிற மண மலர் செடிவகை (Tuberrose), நேரியம், (Nerium) வெண்ணிற விதைகள் கொண்ட சிவப்பு பழ வகை (strawberry) | 4000 |
| 2 | தக்காளி, சவ்-சவ், பட்டாணி, பாகாற்காய், லேப்-லேப் (Lab-Lab), முள்ளங்கி, பீட்ரூட் மற்றும் பீன்ஸ். | 2000 |
| 3 | கத்தரிக்காய், வெண்டை, கொத்தமல்லி, மரவள்ளிச்செடி | 1000 |



2002 ஏப்ரல் 19]

7.4. 2000ஆவது ஆண்டில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் இயல்பான மழையளவிற்கு மாறாக குறைந்த அளவே மழை பெய்தது. இதன்காரணமாக 2001ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ஜூன் திங்கள் வரையிலான கோடைக் காலத்தில் மாநிலத்தின் பல பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டதால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டது. வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து அரசு ரூ7635.75 இலட்சம் அனுமதித்துள்ளது: அதன் விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | சென்னை மாநகரம் .. | 7500.00 |
| 2. | நகராட்சிகள் .. | 45.25 |
| 3. | பேரூராட்சிகள் .. | 30.50 |
| 4. | கிராம ஊராட்சிகள் .. | 60.00 |

7.5. 2001ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை குறித்த காலத்தில் அதாவது 16-10-2001 அன்றே தென்மேற்கு பருவமழைக் காலம் பின்வாங்கியவுடன் ஆரம்பமானது. நவம்பர் மாதத்தில் சிறிய அமைதிக்குப் பிறகு ஓர் அரிய நிகழ்வாக வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு 11-1-2002 வரை நீடித்தது. இவ்விரு பருவமழையும் இவ்வாண்டு தமிழ்நாட்டின்மீது வலுவாக இருந்தபோதும், புயல் ஏற்படவில்லை.

இவ்வாண்டு வடகிழக்குப் பருவமழையினால் நீர் ஆதாரங்கள், பயிர்கள் மற்றும் சாலைகளுக்குப் பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. இந்தப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் 71 மனித உயிரிழப்பும், 37 கால்நடை உயிரிழப்பும் ஏற்பட்டன. 219 குடிசைகள் முழுமையாகவும், 1015 குடிசைகள் பகுதியாகவும் 12 நீராதாரங்களும் சேதமடைந்துள்ளன. எனினும் வடகிழக்குப் பருவமழை கோயம்புத்தூர், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தீவிரமாக இருந்தது. குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் வால்பாறை வட்டங்களில் பரம்பிக்குளம்-ஆழியார் அணை மற்றும் நவமலைப் பகுதியில் 6-11-2001 அன்று பெய்த பெரும் மழையினால் திடீரென்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் சிறிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டு பரம்பிக்குளம் -ஆழியார் திட்டத்தின் இதயப் பகுதியான காண்டூர் கால்வாய்க்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. காண்டூர் கால்வாயில் இயல்பான நீரோட்டத்தை உறுதிசெய்யும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாணை (நிலை) எண் [illegible], நாள்

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம் 224372 சென்னை-600 009

15-2-2002-ல் சேதமடைந்த காண்டூர் கால்வாயைச் சீரமைக்க அரசு இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து ரூ.75 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

7.6. எனினும் ஓர் அரிய நிகழ்வாக இலங்கைக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே ஒரு சிறிய குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியதால் 31-1-2002 முதல் 3-2-2002 முடிய வழக்கத்திற்கு மாறாக பருவம் கடந்த பெரும் மழை பெய்தது. இதனால் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நெற்பயிர்கள் மற்றும் இதர பயிர்கள், நீர்ப்பாசன ஆதாரங்கள், சாலைகள் ஆகியவை மிகவும் சேதமடைந்தன. 6 மனித உயிரிழப்புகளும், 470 கால்நடை இழப்பும் ஏற்பட்டது. 291 குடிசைகள் முழுமையாகவும் 3638 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. இத்தொடர் பெருமழையினால் மேற்காணும் மாவட்டங்களில் அறுவடைக்கு தயார் நிலையிலிருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி விவசாயிகளுக்கு அதிக சேதத்தை விளைவித்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் போதிய அளவு நிவாரணம் உடனடியாக வழங்கும் பொருட்டு முழுமையாக பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு உரிய நிவாரணம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1000-த்திலிருந்து ரூ.2500 ஆக உயர்த்தி அரசு ஆணை எண் 74, வருவாய், நாள் 11-2-2002-இல் அரசு ஆணையிட்டுள்ளது. கனமழையால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அரசாணை நிலை எண் 76, வருவாய், நாள் 12-2-2002இல் ரூ.49 கோடி இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

7.7. இயற்கை இடர்பாடுகள் மற்றும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின்போது உடனுக்குடனும் எளிதிலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக வருவாய்த் துறை அலுவலங்களில் இரு வழித் தகவல் தொடர்பு சாதனத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. முதற்கட்டமாக இந்த இருவழித் தகவல் தொடர்பு சாதனத்தை 12 கடலோர மாவட்டங்களில் உள்ள சில முக்கிய வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் அமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென தொடராச் செலவினமாக ரூ.99.25 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ.11.50 இலட்சமும் அரசாணை (நிலை) எண் 200, வருவாய், நாள் 6-6-2001-ல் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இச் சாதனத்தை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.



7.8. மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் அறிவுறுத்தியதற்கிணங்க மாநில மற்றும் மாவட்ட அளவில் மனிதர்களால் ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகள் உட்பட அனைத்து வகையான பேரழிவுகளையும் கையாள "பேரழிவு மேலாண்மைத் திட்டத்தை" தயாரிக்க, தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒரு குழுவும், ஐந்து துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. துணைக் குழுக்களின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் (1) | குழு எண் (2) | பொருள் (3) | அமைப்பாளர் (4) |
|---|---|---|---|
| 1 | துணைக் குழு-I | நீர் மற்றும் தட்பவெப்பம் தொடர்பான பேரழிவுகள் | செயலர், வருவாய்த் துறை |
| 2 | துணைக் குழு-II | புவியியல் தொடர்பான பேரழிவுகள் | செயலர், பொதுப் பணித் துறை |
| 3 | துணைக் குழு-III | இரசாயனம்/தொழிற் சாலை/அணுக் கதிர் தொடர்பான பேரழிவுகள் | செயலர், சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை |
| 4 | துணைக் குழு-IV | விபத்துக்கள் தொடர்பான பேரழிவுகள் | செயலர், உள் துறை |
| 5 | துணைக் குழு-V | உயிரியல் தொடர்பான பேரழிவுகள் | செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை |

அனைத்து துணைக் குழுக்களும், தத்தம் சம்பந்தப்பட்ட பேரழிவு மேலாண்மைத் திட்டங்களை தயார் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## 8. நலத் திட்டங்கள்

### (1) தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்

பொருளீட்டி குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும் பொருட்டு, தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அக் குடும்பத்திற்கு ரூ.10,000 நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முழுத் தொகையையும் மத்திய அரசே தனது தேசிய சமூக உதவித் திட்டத்தின் பகுதித் திட்டமான

தேசிய குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்கிறது. இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்குக் குடும்ப ஆண்டு வருமானம், அனைத்து வகையிலும் ரூ.7,200-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத் திட்டத்தின் கீழ் 1990-1991 முதல் 2001-2002 (28-2-2002 வரை) வழங்கப்பட்ட நிதியுதவி இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**(2) விபத்து நிவாரணத் திட்டம்**

ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்தினால் இறக்க நேரிட்டால், அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பம் செய்வதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இத் திட்டத்தின் கீழ் 44 வகை ஏழைத் தொழிலாளர்கள் பயனடைகிறார்கள். விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நபர்களின் குடும்பங்களுக்கு ரூ. 15,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. இதில் ரூ.10,000 தொகையை மைய அரசு அதன் தேசிய சமூக உதவித் திட்டத்தின் பகுதித் திட்டமான தேசிய குடும்ப நலத் திட்டத்தின்கீழ் வழங்குகிறது. எஞ்சிய ரூ.5000 தொகையை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ் விபத்தில் உடல் ஊனமுற்றோருக்கு அவர்களின் ஊனத்தின் அளவிற்கேற்றவாறு நிவாரணமாக ரூ.7,500 முதல் ரூ.15,000 வரை வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1990-1991 முதல் 2001-2002 (28-2-2002 வரை) வழங்கப்பட்ட நிதியுதவி இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம்-III

### நில நிர்வாகம்

*1.* அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும், வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நிலங்கள் அதன் பயன்பாட்டிற்கேற்ப வகைப்பாடு செய்யப்படுகின்றன. நத்தம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை, தீர்வை ஏற்பட்ட நஞ்சை, தீர்வை ஏற்படாத புஞ்சை, நீர்வழி புறம்போக்குகளான குட்டை, குளம், ஓடை, ஆறு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, தோப்பு, பாதை, வண்டிப்பாதை, கல்லாங்குத்து, கோயில் புறம்போக்கு மற்றும் மயான புறம்போக்குகள் ஆகியவை முக்கியமான வகைப்பாடுகளாகும்.

*1.1.* அரசு நிலங்கள் ஒப்படை, நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை முறைகளில் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகளுக்கும், அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருவதால், அவற்றை ஒதுக்கீடு செய்வது குறித்த ஒவ்வொரு செயற்குறிப்பையும் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

**1.2. நில ஒப்படை**

அரசு நிலங்கள் வீட்டுமனைக்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் ஒப்படை செய்யப்படுகின்றன.

**(i) வீட்டுமனை நில ஒப்படை**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே இவ்வரசின் நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. வீட்டுமனை ஒப்படை வருவாய் நிலை ஆணை 21-இன்கீழ் உள்ள வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.16,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது. மகளிர்க்குப் பொறுப்பளிப்பதைக் கருத்தில் கொண்டு, குடும்பத்

தலைவி அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டு மனைக்காக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

நடைமுறையில் இருந்த நிபந்தனைகளின்படி ஒப்படை பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர இதர நிதி நிறுவனங்களில் வீட்டுமனைப் பட்டாவை அடமானம் செய்ய அனுமதி இல்லை. இந்த அரசு வீட்டுமனைப் பட்டாவில் உள்ள இந்த நிபந்தனையை மாற்றி ஆணையிட்டதுடன் இந்திரா ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதமரின் கிராமோதய யோஜனா ஆகிய கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அரசால் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக கடன் உதவி மானிய திட்டத்தின்கீழ், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன்பெறும் பொருட்டு ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை அடமானம் செய்வதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டுமனை ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:—

(அ) எல்லைப்புறப் பாதுகாப்புப் படை மற்றும் பிரதேச இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) நிலமற்ற ஏழை

ஒப்படை செய்வதைத் துரிதப்படுத்துவதற்கும் அதனுடைய பயன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையிலும் வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளுக்குக் கீழ்க்கண்ட நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:—



| | அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | ரூ.10,000 |
| 2. | கோட்டாட்சியர் | ரூ.20,000 |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000 |
| 4. | மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. | நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. | அரசு | ரூ.2,50,000 -க்குமேல் |

(அரசாணை நிலை எண் 60, வருவாய்த் துறை, நாள் 6-2-1999-ல் நிர்ணயிக்கப்பட்டது.)

2001-2002-ல் மாநிலம் முழுவதும் 60,000 வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பினும் 28-2-2002வரை 1,12,341 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விவரங்கள் இணைப்பு-4இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**(ii) விவசாய நிலம் ஒப்படை**

கிராமங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த வேலைகளையும் நம்பி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் சொந்த நிலம் வைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே, நிலமற்ற ஏழைகளுக்கு அரசு நிலங்களை வழங்கி, விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளை தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது, ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகின்றது. விவசாய நில ஒப்படை வருவாய் நிலை ஆணை 15-இன்கீழ் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்தின் அளவு எப்படி இருந்தபோதிலும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12000-க்கும் குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை, விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை

செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் அம் மாவட்டத்தில் இந்தப் பரப்பளவு, ஓர் ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்படை நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்ற நிலத்தை ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒப்படை பெற்றவர் விவசாயம் செய்ய வேண்டும். ஒப்படை பெற்ற நிலத்தைப் பிறருக்கு விற்பனை செய்யக்கூடாது. ஒப்படை பெற்ற நிலத்தில் குறைந்தது 10 மரங்களை நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்படுமேயானால் இழப்பீடு எதுவும் வழங்கப்படாமல் நிலம் அரசால் மீளப்பெறப்படும்.

சமுதாயத்தின் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீர்வழிப் புறம்போக்குகளான ஏரி, குளம், குட்டை, வாய்க்கால் போன்றவற்றையும் மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் ஆகிய புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும் மண் அரிமானத்தைத் தடுப்பதற்காகவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்கள் தேவைப்படுவதால், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள்ளும் நில ஒப்படை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது போலவே, விவசாய நில ஒப்படை செய்வதற்கும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ.10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ.20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. அரசு | ரூ.2,50,000-க்கு மேல் |

[அரசாணை (நிலை) எண் 60, வருவாய்த் துறை, நாள் 6-2-1999-ல் நிர்ணயிக்கப்பட்டது]



2001-2002ஆம் ஆண்டுக்கு மாநிலம் முழுமைக்கும் 4,000 ஏக்கர் நிலம் ஒப்படை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 28-2-2002 வரையில் மாநிலத்தில் 5822.66 ஏக்கர் நிலம் 9,198 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் இணைப்பு 5-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**1.3. நிலக் குத்தகை**

பொதுவாக அரசு நிலங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டு, தனிநபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் நிலையாணை எண் 24-ஏ-யின்கீழ் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆண்டுக் குத்தகைத் தொகை நிலமதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள குத்தகை வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

| நோக்கம் | குத்தகை விகிதம் | தலவரி | தலமேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |
| வணிகமல்லாத நோக்கம் | 1% | 1% | 5% | 7% |

பொதுவாக குத்தகைக் காலம் ஒரு தடவையில் மூன்றாண்டுகள் ஆகும். இருப்பினும், எந்தவொரு அரசு நிலமும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை மாற்றியமைக்கப்படும்.

அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கு வருவாய்த்துறை அதிகாரிகளுக்குக் கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

| அலுவலர்கள் | | நிதி வரம்பு |
|---|---|---|
| வட்டாட்சியர் | .. | இல்லை |
| கோட்டாட்சியர் | .. | ரூ.20,000 வரை |

[2002 ஏப்ரல் 19

| | | |
|---|---|---|
| மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | .. | ரூ. 50,000 வரை |
| நில நிர்வாக ஆணையர் | .. | ரூ. 2,00,000 வரை |
| அரசு | .. | ரூ. 2,00,000 -க்கு மேல் |

[அரசாணை (நிலை) எண் 60, வருவாய்த் துறை, நாள் 6-2-1999-இல் நிர்ணயிக்கப்பட்டது.]

குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் குத்தகை புதுப்பிக்கப்பட வேண்டும். குத்தகை புதுப்பித்து குத்தகைத் தொகை திருத்தியமைக்கப்படும் வரை குத்தகைதாரர் குத்தகைத் தொகையைச் செலுத்த ஏதுவாக நிலத்தின் அப்போதைய சந்தை மதிப்புத் தொகையுடன் ஆண்டொன்றிற்கு ஊக உயர்வு சேர்த்து உத்தேச குத்தகைத் தொகை கணக்கிட்டு வசூலிக்கப்படும் என்ற ஒரு புதிய நிபந்தனையைக் குத்தகைப் பத்திரத்தில் சேர்க்க வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. அரசுக்குச் சேரவேண்டிய குத்தகை முடங்காமல் வசூல் செய்வதற்குத் தகுதி வாய்ந்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கு இப் புதிய நிபந்தனை வழிவகை செய்கிறது.

**1.4 நில மாற்றம்**

அரசு புறம்போக்கு நிலங்கள் மைய அரசுத் துறைகளுக்கு வருவாய் நிலையாணை எண் 23-இன்கீழ் வழக்கமாகச் சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், சென்னையில், துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்காக நிலங்கள் இரயில்வே துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23-அ-வின்கீழ் பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், போன்ற வணிக நோக்கமல்லாத பயன்பாட்டிற்காக நிலக்கிரயமன்றி நிலமாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கேட்கப்படும்பொழுது, நிலமதிப்பு வசூலிக்க ஆணையிடப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்காக ஆட்சேபணையற்ற, குறைந்தபட்ச அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் எந்தப் பயன்பாட்டிற்காக நிலமாற்றம் செய்யப்பட்டதோ, அவற்றிற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படாத



2002 ஏப்ரல் 19]

பட்சத்தில், அத்தகைய நிலங்கள் மீளப் பெறப்பட்டு, தேவைப்படும் பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**1.5 நில உரிமை மாற்றம்**

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்று வதற்காகவும் வருவாய் நிலையாணை 24-இன்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5000 வசூலித்துக் கொண்டும் அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதேபோன்று தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கும் இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்கு சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல் நிலக்கிரயம் வசூலிக்கப்பட்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவீதம் நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின், எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையையும் வழங்காமல், நிலங்கள் அரசால் மீறப் பெறப்படுகின்றன.

**2. ஆக்கிரமணங்களை அகற்றுதல்**

அரசு நிலங்கள் குறைவாக உள்ளன. அரசு நிலங்களைத் தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்தல் மூலமும் மற்றும் இதர வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், பொது நோக்கங்களுக்காகவும் அளிப்பதன் மூலமும் அவை நன்கு பயன்பட வேண்டும். எனவே, அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

பொது நோக்கங்களுக்கு எனக் குறிப்பாக குறிக்கப்படாத அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள், ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகளின் தன்மைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் வரன்முறைப்படுத்தப்படுவதற்குத் தகுதியுடையவை ஆகின்றன. நீர்ப்பிடிப்பு, நீர்வழிப் புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோயில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள

[2002 ஏப்ரல் 19

ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை எனக் கருதப்படுவதால் அவை அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், முறையற்ற ஆக்கிரமிப்புகளை, ஆக்கிரமணச் சட்டம் 1905-ன் படி முன் அறிவிப்பு அளித்த பின் அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் கீழ்க்கண்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு மாவட்ட அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் .. | தலைவர் |
| 2. | காவல் துறை-மாவட்ட அளவிலான அலுவலர் .. | உறுப்பினர் |
| 3. | பொதுப் பணித் துறை - மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) .. | உறுப்பினர் |
| 4. | நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் .. | உறுப்பினர் |
| 5. | வனத் துறை-மாவட்ட வன அலுவலர் .. | உறுப்பினர் |

மாவட்ட அளவிலான இக் குழு, மாதம் ஒருமுறை கூடி, ஆக்கிரமணங்களை அகற்றுவது குறித்த செயல் திட்டத்தை வகுக்கும். இக் குழுவின் செயல்பாடுகளை மாநில அளவில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆய்வு செய்கிறார்.

### 3. மரப்பட்டா திட்டம்

2-சி பட்டா என வழங்கப்படும் மரப்பட்டா வழங்கும் திட்டம் மாநிலத்தில் பல்லாண்டுகளாக செயலில் உள்ளது. இத் திட்டத்தின்கீழ் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் மரங்களின் இதர பயன்படும் பொருள்கள் ஆகியவற்றின் பலன்களைப் பயன்படுத்தும் உரிமை அருகில் உள்ள நில உடைமையாளருக்கோ அல்லது அம் மரங்களைப் பராமரிக்கக்கூடிய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும் அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப்பட்டா வழங்குவதில், ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 19]

புதிய சமூக மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஊரக நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு, திட்ட அளவிலான குழுவினால் தெரிவு செய்யப்பட்டு, பலன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் ஊராட்சி நிலங்களில் மரம் வளர்ப்பதற்கு அவர்களுக்கு மரம் நடுவதற்காக உரிமம் வழங்கப்படுகிறது. உரிமம் வழங்கப்பட்ட இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மரம் பூமியில் இருப்பது சரி பார்க்கப்பட்டு இவ்வுரிமைதாரர்களுக்கு மரப்பட்டா வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் 50 பழ மரங்கள் நடப்பட வேண்டும் என்ற திட்டத்தை அரசு கொண்டு வந்து, 1992-93 முதல் அத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத் திட்டம், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் மரங்களை நடுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 4. நில எடுப்பு

மைய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காக 1894ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் (மையச் சட்டம் 1/1894) நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நில எடுப்புச் சட்டத்தின் சாதாரண பிரிவின்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயல்முறைகளை முழுமையாக முடிப்பதற்கு மூன்று ஆண்டுக் காலம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவசரப் பிரிவு 17(1)-இன்கீழ் 15 நாட்களிலும், அவசரப் பிரிவு 17(2)-இன்கீழ் உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்த இயலும். நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்க கால வரைமுறைகளை நிர்ணயித்து திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்திமுறைப் படிவம் (PERT-CHART) அறிமுகப்படுத்தப்பட்டது. 21-09-2001ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 364-இல் நில மதிப்பீட்டுத் தொகை வழங்கும் வரையறை கீழ்க்கண்டுள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

(அ) வட்டாட்சியர்/தனி வட்டாட்சியர் ஆகியோர், எதிர்ப்புள்ள மற்றும் எதிர்ப்பில்லாத இரு இனங்களிலும், நில மதிப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு உள்ள நிதி வரம்பு ரூ.2,50,000 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரை உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) கோட்டாட்சியர்/துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள், எதிர்ப்புள்ள மற்றும் எதிர்ப்பில்லாத இரு இனங்களிலும், நில மதிப்பீட்டுத் தொகை வழங்குவதற்குள்ள நிதி வரம்பு ரூ.2,50,000

(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேல் ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரை உயர்த்தப்பட்டுள்ளது.

நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்தாமல் தனியார் பேச்சுவார்த்தை மூலம் இருபது இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடைமைதாரர்களிடமிருந்து வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் உண்டு. இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. ஒப்புக்கொள்ளப்பட்ட விலை, நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது குறைவோ, அதில் 150% விலையை ஏற்பதற்கு மாவட்ட மற்றும் மாநிலக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தனியார் பேச்சுவார்த்தையின் மூலம் நிலங்கள் வாங்குவதில் நிலம் கையகப்படுத்தும் திட்டம் விரைந்து செயல்பட கீழ்க்காணுமாறு உதவுகிறது:—

(i) திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு நிலம் உடனடியாகப் பெறப்படும்.

(ii) நிலம் கையகப்படுத்துவதில் உள்ள இயல்பான கால தாமதமும் தவிர்க்கப்படுகிறது.

(iii) நிலமெடுப்புச் சட்டத்தின் பிரிவு 4(1) இன் கீழான அறிவிக்கை மற்றும் பிரிவு 6-இன் கீழான விளம்புகை அறிவிப்புகள் நாளிதழ்களில் வெளியிடுவதற்கான செலவு தவிர்க்கப் படுகிறது.

(iv) நீதிமன்றங்களுக்குச் சென்று, நிலம் கையகப்படுத்தும் திட்டத்தினைத் தவிர்க்கவோ அல்லது காலதாமதப் படுத்தவோ அல்லது அதிகப்படியான இழப்பீட்டுத் தொகை கோரவோ வழியில்லை.

(v) நிலத்திற்கான தொகை நேரிடையாக ஒட்டுமொத்தமாகக் கொடுக்கப்படுகிறது.

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்தும் பொருட்டு, தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999) என்ற சட்டம் ஒன்று அரசால் தனியாக இயற்றப்பட்டுள்ளது. இச் சட்டமும் மற்றும் இச் சட்டத்திற்கான விதிகளும் 21-09-2001 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.



## அத்தியாயம் - IV

## நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பராமரித்தல்

### (அ) இடைத்தரகர்களை ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றலும்

1.1. பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் கீழ்க்கண்டவாறு இயற்றப்பட்டன:—

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948).

(ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963).

(இ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963).

(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963).

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969).

(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973).

தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் நீங்கலாக ஏனைய சட்டங்களைப் பொறுத்தவரை அநேகமாக அனைத்துப் பணிகளும முடிக்கப்பட்டுவிட்டன. மேற்கண்ட பல்வேறு சட்டங்களின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ள விவரங்கள் இணைப்பு-6-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1.2. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டத்தைப் பொறுத்தவரை ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர், அவர்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள்

(ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் மேற்படி தள்ளுபடி ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்கள் அளித்துள்ளனர். மனுதாரர்கள் தங்களது சிவில் மற்றும் ரிட் மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறுவதற்கு உச்ச நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். சட்டப்பிரிவு 9-இன்கீழ் ரயத்துவாரி பட்டா கோரி, ஏற்கனவே அரசுக்கு அளித்துள்ள மனுக்கள் மீது நடவடிக்கை தொடருவதாகவும் தெரிவித்தனர். இதனை உச்ச நீதிமன்றம் ஏற்று, எல்லா மேல்முறையீடுகளையும் திரும்பப் பெற்றதாகக் கருதி தள்ளுபடி செய்தது. சட்டப் பிரிவு 9 அல்லது 17-இன்கீழ் அவர்களது விண்ணப்பங்கள்மீது முடிவு எடுக்குமாறு மாநில அரசை உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. இந்த மனுக்களை முடிவு செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலர், பணி நிலையில் உதகமண்டலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனியாக நில வரித் திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். 24/1969 சட்டத்தினை அரசியல் சட்டத்தின் 9-ஆவது அட்டவணையில் சேர்த்தது அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்த சில மேல்முறையீடுகளையும், நீதிப் பேராணைகள் மனுவையும் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய விசாரணை மன்றத்திற்கு (Larger-Bench) உச்ச நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது.

**1.3.** நில உடைமைதாரர்களுக்கு இழப்பீடு தொகையும், தர்ம சத்திரங்கள், கல்வி மற்றும் ஆலய நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இழப்பீடு தொகையை நடுவர் நீதிமன்றத்தில் வைப்பு செய்து, ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சமயச் சார்புடைய நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட தஸ்திக் கொடை, மாவட்ட வருவாய் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தஸ்திக் கொடை ஒவ்வொரு ஆண்டும் தொடரும் செலவினமாகும். சமயச் சார்புள்ள நிறுவனங்கள் இருக்கும் வரை ஆண்டுக்கொரு முறை இது வழங்கப்படுகிறது.

## (ஆ) நில அளவை, நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு

### 1. நில அளவை

**1.1.** நில அளவை பதிவுருக்கள் துறை அளவைப் பணியை மேற்கொள்வதற்காகவும், நிலப் பதிவுருக்களை தயார் செய்து நில



வருவாயை நிர்ணயிப்பதற்கு மிகவும் இன்றியமையாத இத்தகைய பதிவுருக்களைப் பராமரிப்பதற்காகவும் பொதுமக்கள் தங்கள் நிலஉடைமைகள் குறித்த விவரங்களை அறிந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டது. கிராமம் மற்றும் நகர்ப்புற நிலங்களில் அளவை மேற்கொள்ளுதல் இத்துறையின் தலையாய கடமையாகும். கிராம எல்லைகள் மற்றும் நில உடைமைகளுக்கான எல்லைகள் வரையறுத்தல் மற்றும் கிராம வரைபடங்கள், புலப்பட சுவடிகள், பிரிவு மற்றும் வட்டார வரைபடங்கள், நகர அளவையில் நகர அளவைப் பதிவேடு மற்றும் நிலப்பதிவேடு தயாரித்தல் போன்ற பணிகள் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலப் பதிவுருக்களைச் சரிவர பராமரித்து நில அளவை எல்லைகளை பேணிக்காத்தல் துறையின் பொறுப்பாகும்.

### 1.2 நத்தம் நில அளவை

நத்தம் கிராமங்கள் நிலவரித் திட்டத்தில் புறம்போக்காக வகைபாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே நிலவரித் திட்ட பதிவுருக்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவை மேய்ச்சல் தரை புறம்போக்கு, ஆறு முதலிய பொதுமக்கள் பயன்பாட்டிற்கான இதர புறம்போக்குகளிலிருந்து வேறுபட்டவையாகும். நத்தம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சட்ட பூர்வமாக அவர்களது கையிருப்பில் உள்ள நிலத்தின்மீது அவர்களுக்கு நில உடைமை உரிமை உள்ளது. ஆனால், நத்தம் புறம்போக்கு களங்களில் அனுபவ பூர்வமான உட்பிரிவுகள் செய்யப்படவில்லை. எனவே, கிராமநத்தம் பகுதிகளிலும், விவசாயத்திற்கல்லாத நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களிலும், விரிவான நில அளவை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 206 வட்டங்களில், 199 வட்டங்கள் நத்தம் நில அளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 193 வட்டங்களில் நில அளவைப் பணி முடிவுற்றுள்ளது.

28-2-2002 முடிய 4,467 சதுர கிலோ மீட்டர் பரப்பு அளவை செய்யப்பட்டுள்ளது. 74,14,654 பட்டாக்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் 86,98,118 நபர்கள் பயனடைந்துள்ளனர். [இணைப்பு-7(i)]

### 1.3. நகர நில அளவை

அனைத்து மாவட்டங்களிலும் 82 நகரங்கள் மற்றும் 6 மாநகராட்சிகளில் நகர நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 80 நகரங்கள் 4 மாநகராட்சிகளில் அளவைப்பணி முடிவுற்றுள்ளது. 2 நகரங்கள் மற்றும் 2 மாநகராட்சிகளில் அளவைப் பணி முன்னேற்றத்தில்

உள்ளது. 28-2-2002 முடிய, 1,724 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டு, 1641.4 ச.கி.மீ. பரப்பளவுக்கு பிரிவு வரைபடங்கள், வட்டார வரைபடங்கள், நகர நில அளவைப் பதிவேடுகள் ஆகிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவை நிலவரித் திட்ட தனி அலுவலர்களால் இறுதித் தணிக்கைப் பணி மற்றும் வருவாய் பின்தொடர்பணி மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளன. [இணைப்பு-7(ii)]

### 1.4 மலைக்கிராம நில அளவை

கீழ்க்கண்ட 6 மலைகளில் உள்ள 66 கிராமங்களில் மலைக் கிராம நில அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டு அளவைப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது:—

1. ஏலகிரி மலை - வேலூர் மாவட்டம்
2. ஜவ்வாது மலை - வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்
3. பச்சைமலை - திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம்
4. கொல்லிமலை - சேலம் மாவட்டம்
5. அருநூத்துமலை - சேலம் மாவட்டம்
6. ஆனைமலை - கோயம்புத்தூர் மாவட்டம்

28-2-2002 முடிய 858 ச.கி.மீ. பரப்பளவு அளவை செய்யப்பட்டு, அதற்குரிய ஆவணங்கள் நிலவரித் திட்ட தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு - 7 (iii)

### 1.5 மாநிலப் பொது எல்லை

1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் புனரமைக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட எல்லைகளில் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டாய்வு மேற்கொள்ளப்படுகின்ற போதெல்லாம் அதற்கு அண்டை மாநிலங்களில் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். மாநில பொது எல்லையைப் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இக்கூட்டாய்வு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகின்றது. இக்கூட்டாய்வினை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



## 2. நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு

**2.1.** மாநில அளவில் இத்துறையின்கீழ் மாவட்டத்திற்கு ஒரு நில அளவை அலுவலகமும் மற்றும் சென்னையில் ஒரு மத்திய நில அளவை அலுவலகமும் இயங்கி வருகின்றன. பொதுமக்கள் தங்கள் நில உடைமை குறித்த புல எல்லைகளைத் தெரிந்துகொள்ளச் செய்வது, அவர்களது நில உடைமைகளை வருவாய்க் கணக்குகளில் பதிவுகள் செய்து கொடுப்பது, உட்பிரிவுகள் ஏற்படும்போது அதற்கேற்ப பதிவேடுகளில் மாறுதல்களைப் பதிந்துகொள்வது மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத் தொகையைப் பெற்றுக் கொண்டு புலப்பட நகல்கள் வழங்குவது ஆகிய பணிகளை வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவைப் பணியாளர்கள் மூலமாக இத்துறை செய்து வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான தகவல்கள் மாவட்ட நில அளவை அலுவலகத்தின் மூலம் தேவைப்படும்போது வழங்கப்படுகின்றன. இவை தவிர, மாவட்டங்களிலுள்ள நில அளவை விற்பனை மையங்கள் மற்றும் சென்னையிலுள்ள மத்திய நில அளவை அலுவலக விற்பனை மையம் மூலமாக, கிராம வரைபடங்கள், வட்ட வரைபடங்கள், மாவட்ட வரைபடங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதை காட்டும் வரைபடங்கள் ஆகியன குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள அச்சகத்தில் கருப்பு-வெள்ளை மற்றும் ஆறு வண்ணங்களில் வரைபடங்கள் அச்சடிக்கப்படுகின்றன. நிழற்பட. அச்சு மூலமோ அல்லது ஆப்செட் மூலமோ நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வரைபடங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. வரைபட நகல்கள் எடுப்பதற்கு நிழற்பட நகலெடுக்கும் கருவி, ப்ளான் பிரிண்டர், என்.சி. ஸ்கிரைபர், லேமினேடிங் கருவி மற்றும் கணினி போன்ற நவீன கருவிகள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்திய அச்சுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு அச்சகப் பிரிவினை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

இத்துறையை நவீனமயமாக்குவது குறித்து பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. மின் அணு தொலை அளவைக் கருவி, மைக்ரோ ஆப்டிக் தியோடலைட், எலக்ட்ரானிக் ஸ்கிரைபர் போன்ற நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 19

**2.2.** அன்றாட பராமரிப்புப் பணி தவிர தற்சமயம் கீழ்க்கண்ட திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன:—

**2.3 வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல்**

மத்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின்மூலம் வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல் திட்டத்திற்காக, 1989 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை, மாநில அரசின் 50 விழுக்காடு பங்குத் தொகை உள்ளடக்கி மத்திய அரசிடமிருந்து ரூ.1092.06 இலட்சம் நிதி உதவியாக மாநில அரசு பெற்றுள்ளது. இத்தொகை நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உட்கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டடங்கள் கட்டுவது போன்றவற்றிற்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.861.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2.4 நிலப்பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டம்**

மத்திய அரசின் 100% நிதி உதவியுடன் நிலப்பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

கிராம நிலப்பதிவுருக்களில் காணும் புள்ளி விவரங்களை கணினி மயமாக்குதல் இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். இத்திட்டத்தின்கீழ் 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கணினி நகல்கள் பொதுமக்கள் கோரும்போது வழங்கப்படுகின்றன.

நிலப்பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டத்திற்கு மைய அரசிடமிருந்து இதுவரை ரூ.1295.36 இலட்சம் பெறப்பட்டு, ரூ.1216.50 இலட்சம் நாளது வரை செலவிடப்பட்டுள்ளது (இணைப்பு-7(iv)) மீதமுள்ள தொகை விரைவில் செலவிடப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து 206 வட்டங்களிலும் கணினி வன்பொருள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பதிவுருக்கள் கணினிமயமாக்கும் திட்டம் இன்றைய நிலையில் மாவட்டம் மற்றும் வட்ட அளவில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலப்பதிவுருக்கள் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ், சம்பளப்பட்டியல், பணியாளர் விவரக்குறிப்பு முறை, கோப்பு மேலாய்வு செய்யும் முறை, வரவு செலவுப் பட்டியல் போன்ற உள்நடவடிக்கைகளும் மற்றும் ஓய்வு ஊதியம் வழங்கும் முறைகள்



2002 ஏப்ரல் 19]

(முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற/கைவிடப்பட்ட மகளிர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், இயலாமை ஓய்வூதியம்), உரிமம் மேலாய்வு செய்யும் திட்டம், துப்பாக்கி உரிமம் வழங்கும் திட்டம் போன்ற வெளிப்புற நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 8,500 பணியாளர்களுக்குத் தனியார் முகவர் மூலம் அடிப்படை கணினிப் பயிற்சியும் மற்றும் மென்பொருள் உபயோகிப்பதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

மைய அரசு நிதி உதவியுடன், நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகத்தில் மாநில அளவிலான கண்காணிப்புப் பிரிவு (State Level Monitoring Cell) ஒன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கண்காணிப்புப் பிரிவு நிலப்பதிவுருக்கள் கணினிமயமாக்கும் திட்டத்தினை நேரடிக் கண்காணிப்பு செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்ட அலுவலகங்களுடன் தொடர்புடையவாறு அமைக்கப்படும்.

**தொடுதிரை கணினி மாடங்கள்**

பொதுமக்கள் நிர்வாகத்தினை மிக எளிதில் அணுகவும், நிலப்பதிவுருக்கள் நிர்வாகத்தை ஒளிவுமறைவு இன்றி வெளிப்படையாக அறியவும் அரசு விரும்புகிறது. பொதுமக்களுக்கு செய்து வருகின்ற சேவையை மேலும் அதிகரிக்கும்பொருட்டு மாநிலத்தின் அனைத்து இடங்களிலும் நிலப்பதிவுருக்கள் சம்பந்தமான அனைத்து விவரங்களும், பொதுமக்கள் கோரும்போது, எளிதாகக் கிடைக்கும் வண்ணம, மாதிரி வட்டங்களாக 29 வட்டங்கள் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்டு ரூ.65.25 இலட்சம் செலவில் தொடுதிரை கணினி மாடங்கள் நிறுவப்படவுள்ளன.

**2.5 நில அளவைப் புலப்படங்களைப் கணினிமயமாக்குதல்**

நிலப் பதிவுருக்களில் நில அளவைப் புலப்படங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தற்சமயம் நில அளவைப் புலப்படங்கள் கையால் வரையப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. நில அளவைப்புலப்படங்களைக் கணினி மயமாக்குவதில் கீழ்க்கண்ட பயன்கள் உள்ளன:—

புதிய உட்பிரிவுகளை உருவாக்குதல், தற்போதுள்ள வரைபடங்களில் மாறுதல்கள் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய நில அளவைப் புலப்படங்கள்/வரைபடங்கள் மிகவும் துரிதமாக தயாரித்தல்.

புள்ளி விவரங்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாகிறது.

[2002 ஏப்ரல் 19

நில அளவைப் புலப்படங்களை வெவ்வேறு கோணங்களில் வரைந்து அதிக தெளிவினை அளிப்பதற்குரிய வசதியை ஏற்படுத்துகிறது.

நில உடைமைதாரர்களுக்கு புலப்படங்களின் நகல்கள் விரைவாக வழங்க முடிகிறது.

கடாஸ்ட்ரல் நில அளவையை அடிப்படையாகக் கொண்ட தகவலை மேம்பாடு செய்வதற்கு ஏதுவாகிறது.

வரைபடங்களைத் திருத்த முடியாமல் பாதுகாக்கவும் புள்ளி விவரங்களைப் பாதுகாப்புடன் வைத்துக்கொள்ளவும் முடிகிறது.

செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய நான்கு வட்டங்களில் மைய அரசின் நிதி உதவியுடன் ரூ. 124.36 இலட்சம் செலவில் இரண்டு முன்னோடித் திட்டங்களின்கீழ், நில அளவைப் புலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை மாநிலத்தின் இதர வட்டங்களில் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இரு முன்னோடித் திட்டங்களின் அடிப்படையில் மென் பொருளுக்கான பொதுவான விவரக் குறியீட்டைப் பரிந்துரை செய்வதற்கு வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு தமது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்தது. குழு பரிந்துரைத்துள்ள பொதுவான விவரக் குறியீட்டை அடிப்படையாக வைத்து மாநிலத்தின் இதர வட்டங்களில் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நிலங்களில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக பெறவிழைகின்ற கணினிமயமாக்கப்பட்ட நிலப் பதிவுருக்களின் நகல்களுடன் தற்போதைய நிலவரத்திற்கேற்ப மேம்படுத்தப்பட்ட கணினிமயமாக்கப்பட்ட புலப்படங்களை பொதுமக்கள் பெற இயலும். நில அளவைப் புலப்படங்களை கணினி மயமாக்கும் திட்டத்தினை விரிவுபடுத்திச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவி அளிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2.6 பெரம்பலூர் முன்னோடித் திட்டம்

கணினிமயமாக்குதலின் பயன்கள் இயன்றவரை தகுதியானவர்கள் அனைவரையும் சென்று அடையும்வண்ணம் நில நிர்வாகம் சம்பந்தமான முழு விவரங்களையும் கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை கணினிமயமாக்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் பெரம்பலூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின்



2002 ஏப்ரல் 19]

நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மத்திய அரசு இத்திட்டத்திற்குக் கொள்கையளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளதுடன், இத்திட்டத் தொடக்கத்திற்காக ரூ.42.11 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:-

கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை நில நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளின் பணி வெளிப்பாடு மற்றும் அதன் செயல்திறன் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்.

கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை நில நிர்வாக விவரங்களை கணினிமயமாக்க மென்பொருள் தயாரித்தல்.

கிராம அலுவலர்களுக்கும் வட்ட, கோட்ட, மாவட்ட அலுவலர்களுக்கும், நிலம் சம்பந்தப்பட்ட கோப்புகளைக் கையாளும் அலுவலர்களுக்கும் கணினி வழங்குதல்

சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், வட்ட அலுவலகத்திற்கும் கணினி இணைப்பு ஏற்படுத்துதல்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் முடிவு மேற்கொள்பவர்களின் உபயோகத்திற்காக கணினி இணைப்பு தகவல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுக் கருவிகளை மேம்படுத்துதல்.

கணினி இணைப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிவரங்களைப் பொதுமக்கள் புரிந்துகொள்கிற வகையில் மேம்படுத்துதல்.

பெரம்பலூர் மாவட்டத்தில், இத்திட்டத்தினைத் தொடங்குவதற்கான பணி வெளிப்பாடு செயல்முறை ஆய்வுகளை (Work flow study) தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்துடன் கலந்து மேற்கொள்ளும்படி தேசிய தகவலியல் மைய அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தேசிய தகவலியல் மைய அதிகாரிகள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆய்வினை மேற்கொண்டு முடித்துள்ளனர். இம்முன்னோடித்திட்டம் மிக விரைவில் தொடங்கப்படும்.

## 2.7. விண்கோள் நில அளவை முறை

கடாஸ்ட்ரல் நில அளவையில் தற்போது வடிவமைக்கப்பட்டு புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள விண்கோள் நில அளவை தொழில்நுட்பத்தை நாற்புறமும் சுழன்று அளவெடுக்க பயன்படுத்தப்படும் இருமுனை இணைப்புகளுடன் இணைத்து பயன்படுத்துவதற்கான ஒரு

முன்னோடித் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.120.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கான 50 விழுக்காடு நிதியுதவியை மத்திய அரசு வழங்கியதுடன், நமது பங்காக ரூ.60.00 இலட்சத்தையும் விடுவித்துள்ளது. மாநில அரசும் தமது பங்கான 50 விழுக்காடு தொகையை வழங்கியுள்ளது. இந்த முன்னோடித் திட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தில் தற்போது செயல்படுத்துவதன்மூலம், ஒரே வட்டத்தில் நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்குதல், புலப்படங்களை கணினி மயமாக்குதல் மற்றும் விண்கோள் நில அளவை ஆகிய மூன்று திட்டங்களின் ஒருங்கிணைந்த பயனினை முழுமையாகக் கொண்ட கணினி மயமாக்கி மேம்படுத்தப்பட்ட நில வரைபடங்கள் மற்றும் நில அளவைப் பதிவுருக்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான செயல்முறைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலமாக, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகின்ற நில அளவையில், விண்கோள் நில அளவை முறையைப் புகுத்துவதற்கான வழிவகை ஏற்படும். இத் தொழில்நுட்பத்தை இயக்குவதற்குத் தேவைப்படுகின்ற திறமையும், அறிவும் பெறுவதற்கு, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையம் மற்றும் தேவைக்கேற்ப இவ்வளவை முறையில் திறமை பெற்றுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்படும். இத்திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**2.8. பயிற்சி வசதிகள்**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் ஓர் நில அளவைப் பயிற்சி நிலையம், வருவாய்த் துறையின் சார்பு அலுவலர்கள், தகுதிகாண் பயிற்சி பெறுகின்ற உதவி ஆட்சியர்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், பிற துறைகள் மற்றும் மாநகராட்சிகளைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நில அளவைப் பயிற்சி அளிப்பதற்கு இயங்கி வருகிறது. வான்வெளியிலிருந்து நிழற்படம் எடுத்தல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய துறைகளில் குறிப்பிட்ட நபர்களுக்கு சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. நில அளவைப் பணியாளர்களுக்கு நவீன நில அளவைத் தொழில்நுட்பம் மற்றும் அது சம்பந்தமான கருவிகளை இயக்குவதற்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், மற்றும் பிற மாணவர்களுக்கு நவீன நில அளவைத் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிக் கல்வி தொடங்குவதற்காகவும், ஒரு நவீன உயர் தொழில்நுட்பப் பயிற்சி மையம் (C-STAR) சென்னையில் அமைப்பதற்காக அரசு ரூ.127.03 இலட்சம்





வழங்கியுள்ளது. மத்திய அரசும் வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ், இப்பயிற்சி நிறுவனத்திற்காக தமது பங்காக ரூ.125.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது. ஆரம்பத்தில் இந்தப் பயிற்சி நிலையம் சென்னையில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கும். இந்த உயர் தொழில்நுட்ப நிலையம், நில அளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் (C-STAR) என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த மையம் ஒரு செயற்குழுவால் நிர்வகிக்கப்படும்.

**3. நில உரிமைப் பதிவேடு திட்டம்**

தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டம் 1983, விவசாய நில உடைமைதாரர்களுக்கு "நில உரிமைப் பதிவேடு" வழங்க வகை செய்கிறது. நில உரிமைப் பதிவேடானது, நிலத்திற்கு உரிமைதாரர் என்று உறுதிப்படுத்தும் சான்றாவணமாகவும் மற்றும் இதன்வாயிலாக நிதி நிறுவனம், கூட்டுறவு வங்கி மற்றும் இதர வங்கிகள் ஆகியவை வில்லங்கச் சான்றிதழ் ஏதுமின்றி விவசாயிகளுக்குக் கடன் வழங்க ஏதுவாகிறது.

இத்திட்டம் முதற்கட்டமாக, வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நில உரிமைப் பதிவேடு சட்டத்தின் 5, 9 மற்றும் 15-வது பிரிவுகள் 15-6-2000 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில் 22,96,699 நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டத்தில் நில உரிமைப் பதிவேடு சட்டம் 1-7-2000 முதல் (விவசாய நிலங்கள் இல்லாமையால் சென்னை மாவட்டம் நீங்கலாக) இதர அனைத்து மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள படிவங்கள் அச்சிடப்பட்டு, நில உரிமைப் பதிவேடு வழங்கப்பட உள்ள நில உரிமைதாரர்களால் பூர்த்தி செய்து தரும் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நில உரிமைப் பதிவேடுகளை கணினி மூலம் தயாரித்து வழங்க அரசால் முடிவு எடுக்கப்பட்டு, இதற்காக ரூ.18.93 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. எங்கெல்லாம் அறிவிக்கை பிரசுரம் செயவது உட்பட அனைத்து நடவடிக்கைகளும் முடிக்கப்பட்டு விட்டதோ அங்குள்ள நில உரிமைதாரர்களுக்கு கணினி மூலம் தயாரிக்கப்பட்ட நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்படும். இப்பணி 'எல்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 96 இலட்சம் நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்பட உள்ளன.

[2002 ஏப்ரல் 19.

# அத்தியாயம் - V

## நிலச்சீர்திருத்தம்

### (அ) நிலச்சீர்திருத்தம்

1. வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன்மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் பொருட்டும் உபரியாக உள்ள அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும்பொருட்டும் 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட சட்டம் 6-4-1960 முதல் அமுலுக்கு வந்தது. அதில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு குடும்பத்தில் 5 உறுப்பினர்களுக்கு மேல் இருந்தால் 30 தர ஏக்கர் உச்சவரம்பு தவிர ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் ஒட்டுமொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் பெண் உறுப்பினர்களுக்கென்று சீதனச் சொத்தாக 10 தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமை உண்டு. கூடுதலாக மிகை நிலம் பெறும் நோக்கத்துடன், உச்சவரம்பின் அளவு அரசால் 1970 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டம் 58/61-க்கு திருத்தச் சட்டம் 17/70 மூலமாக சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டதன்மூலம் நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. மேலும் முதன்மைச் சட்டத்தில் 58/61-ல் ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை 40 தர ஏக்கராகக் குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. இதற்காக (தமிழ்நாடு சட்டம் 20/72) இரண்டாவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-3-1972 முதல் நடைமுறைக்கு வந்தது. சுருங்கக் கூறின், இன்றைய நிலையில் இம்மாநிலத்தில் எந்தவொரு குடும்பமும் அதிகபட்சமாக 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக்கொள்ளலாம். உச்சவரம்பிற்கு மிகையான நிலங்கள், கையகப்படுத்தப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் நிலமற்ற தகுதியுடைய ஏழைகளுக்கு அதிகபட்சம் 3 ஏக்கர் புன்செய் நிலங்கள் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலங்கள் என்ற அளவில், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் ஒப்படை செய்யப்படுகிறது. மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்தப் பரப்பின் விவரம், அதில் ஒப்படையானது மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை, ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினைச்



2002 ஏப்ரல் 19]

சார்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் மற்றும் நிலச்சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 28-2-2002 வரையில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு விவரங்கள் மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப்பரப்பு விவரங்கள் இணைப்புகள்-8, 9 மற்றும் 10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2. குடிவாரச் சட்டங்கள்

2.1 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955) இன்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவரச் செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தைத் தவிர்த்து மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும்வகையில் செயல்புரிந்தாலோ தவிர, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப் படையினரைத் தவிர, வேறு எந்த நில உடைமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது.

2.2 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1956) குத்தகைதாரர்களால் மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினை தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொது பொறுப்புக் கழகங்களுக்கு குத்தகைத் தொகையாக அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின்மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால் விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2.3. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1961) பொது பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு பொது பொறுப்புக் கழகமும், தன்னுடைய பண்ணை சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கருக்கு மேல் நிலத்தினை வைத்துக்கொள்ளக் கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான

பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும். குடிவார சட்டங்களின் கீழ் 28-2-2002 வரை நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்கள் இணைப்பு-11-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.4. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) மூலம் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தற்போதைய ஊதிய விகிதங்கள் பின்வருமாறு உள்ளன:—

| விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்த பட்ச ஊதியம் |
|---|---|
| 1. தங்கள் சொந்த ஏர் மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.100/- |
| 2. தங்கள் சொந்த ஏர் மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.54/- |
| 3. நெல் அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச் சென்று கதிர் அடித்தல், அவற்றை அளந்து மற்றும் மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர் | நாள் ஒன்றுக்கு ஆறு மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/- நாள் ஒன்றுக்கு ஐந்து மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/- அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அவற்றில் எது அதிகமோ அது. |
| 4. நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செயயும் தொழிலாளர்/இதர விவசாயப் பணிகளில் ஈடுபடுவோர் | நாள் ஒன்றிற்கு 6 மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/- நாள் ஒன்றிற்கு 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/- |

2.5. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பதிவு செய்து கொள்ள வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலராக உள்ள வருவாய் வட்டாட்சியருக்கு அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழு உதவிபுரியும். இச்சட்டத்தின்கீழ் 28-2-2002 வரை குத்தகைதாரர்களாக



பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் இணைப்பு-12-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.6. 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) குடியிருப்புகளில் சொந்த வீட்டு மனை இல்லாத அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி 19-6-1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர், உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலை பெற்று இருக்கும். தமிழ்நாடு கிராமப்புறக் கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் 1976 (சட்டம் 38/1976) குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் 1-7-1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டு மனை இல்லாத கிராமக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க வகை செய்கின்றது. மேற்கூறிய இரு சட்டங்களில் உள்ள காலக் கெடு தமிழ்நாடு சட்டம் 39/1990 மூலம் 1-4-1990 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. 28-2-2002 வரையில் உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு-13-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3. நிலத் தீர்ப்பாயங்கள்

சார் நீதிமன்றங்களின் ஆளுகையின்கீழ் இருந்த நிலச் சீர்திருத்த வழக்குகளைத் துரிதமாக முடிவு செய்வதற்காக தனித் தீர்ப்பாயங்கள் 1980 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது. 1-11-1990 முதல் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டு, சென்னை உயர் நீதி மன்றத்திற்கு இருந்த நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் அதிகார வரம்பு நீக்கப்பட்டு அவ்வழக்குகள் இத்தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டன. இருப்பினும் சமீபத்தில் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவுகள் உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்சின் நீதிப்பேராணை வரம்புக்குட்பட்டவை என உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. 28-2-2002 வரையில் தனி

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் இணைப்பு-14ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**4. வருவாய் நீதிமன்றங்கள்**

கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள், 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராகத் தொடரப்படும் மேல் முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளிப்பார்கள். அவர்கள் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் வழங்குதல்) சட்டம் 1956, தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961, தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டம், 1969, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம், 1961 தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1976 ஆகிய சட்டங்களின்கீழ் கொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்து வருகின்றனர்.

**5. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம் அரசாணை (நிலை) எண் 600, வருவாய்த் துறை, நாள் 27-11-2000-ல் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2001-க்கு அரசு ஆணை (நிலை) எண் 62, வருவாய்த் துறை, நாள் 9-2-2001-ல் ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தின்படி ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும், இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள ஒரே தடவையில் பங்களிப்புத் தொகையாக ரூ.100/- செலுத்தவேண்டும். இவ்வாறு பதிவு செய்துகொண்ட விவசாயத் தொழிலாளர்கள், கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து நிவாரணம் போன்ற உதவிகளைப் பெறுவதற்கு தகுதி உள்ளவர்களாகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 18



வயதடைந்தவரும் 60 வயது பூர்த்தியாகாதவருமான ஒரு நிலமற்ற விவசாயத் தொழிலாளரோ அல்லது ஒரு ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 2.50 ஏக்கர் புன்செய் நிலம் வைத்து நேரடியாகப் பயிர் சாகுபடி செய்பவரோ உறுப்பினராகப் பதிவு செய்யலாம். இத்திட்டம் 9-2-2001-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 28-2-2002 வரையில் 7,21,447 நபர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், ரூ.7,21,42,481 வாரிய நல நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) நகர்ப்புற நில உச்சவரம்பு**

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/1999) இன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. இச்சட்டம், அதன் நோக்கங்களை அடைவதில் தவறிவிட்டது என்று கருதியதால் நீக்கறவு செய்யப்பட்டது. இதே போன்று, அநேக பிற மாநிலங்களும் இச்சட்டத்தை நீக்கறவு செய்துள்ளன. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம்வைத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மற்றும் முதன்மைச் சட்டப்பிரிவு 21(1) இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீக்கறவுச் சட்டம் பொருந்தாது. விலக்களிப்பில் உள்ள நிபந்தனைகள் எப்பொழுது மீறப்படுகின்றன என்று தெரிய வருகிறதோ அப்போது அந்நிலங்களை மீளப்பெறுவதற்கு, விலக்களிப்புப் பெற்றவர்களுக்கு அறிவிக்கைகள் அனுப்பப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தச் சட்டத்தின்மூலம் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு கீழ்க்கண்டவாறு கொள்கை முடிவு எடுத்துள்ளது:-

(i) நகர்ப்புறங்களில் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லாத நிலங்களை, கீழ்க்கண்டபடி முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:-

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக சமுதாய நலன் கருதி தொடங்கப்படும் திட்டங்கள்;

[2002 ஏப்ரல் 19

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்;

(இ) மின்சார வாரியம், போக்குவரத்து போன்ற மாநில அரசு நிறுவனங்கள் பயன்பாட்டிற்கும் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் போன்ற அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள்.

(ii) ஒதுக்கீடு செய்யப்படாத மீதமுள்ள மிகை வெற்று நிலங்களை ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏலம் மூலமாக விற்பனைக்குக் கொண்டு வருதல்.

(iii) நகர்ப்புற மிகை வெற்று நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வியாபார நோக்கில் பயன்பட்டு வந்தால் அந்நிலங்களுக்கான இரண்டு மடங்கு வழிகாட்டிப் பதிவேட்டு மதிப்பினை வசூலித்த பின் முறைப்படுத்தப்பட வேண்டும்.

இதுபோன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப்பற்றிய விவரம் அறியாது 1 ½ (ஒன்றரை) கிரவுண்ட் வரை குடியிருப்புக்காக வாங்கியிருப்பின், அதனை அரசு நிர்ணயித்துள்ள குறிப்பிட்ட மதிப்பினைச் செலுத்தி வரன்முறைப்படுத்த அரசு ஆணை (நிலை) எண். 649, வருவாய், நாள் 29-7-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட நாள் வரை 2472 ஹெக்டேர் மிகை வெற்று நிலங்கள் உபரி நிலங்களாகக் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 339 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, பொதுத் துறை மற்றும் இதர நிறுவனங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 109 ஹெக்டேர் நிலப்பரப்பு நீதிமன்ற நடவடிக்கையிலும், 508 ஹெக்டேர் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பிலும் உள்ளன. மீதமுள்ள மிகை வெற்று நிலங்கள் ஒதுக்கீடு செய்வதற்கு ஏதுவாக உள்ளன.

**(இ) நகர்ப்புற நிலவரி**

வளர்ந்து வரும் நகர்ப்புறப் பகுதிகளில் நகர வசதிகளை அளிப்பதற்காக அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்களிடம் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டும்



2002 ஏப்ரல் 19]

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன்முதலில் 1-7-1963இல் அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர், இச்சட்டம் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னைப்புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது. இச்சட்டம் மேலும் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு 1-7-1981 முதல் விரிவுபடுத்தப்பட்டது. கீழ்க்கண்ட நகராட்சிகளும் நகரியங்களும் (தற்போது நகராட்சிகள்) 1-7-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன:

நகராட்சிகள்

| | |
|---|---|
| மயிலாடுதுறை | கும்பகோணம் |
| காஞ்சிபுரம் | உடுமலைப்பேட்டை |
| கடலூர் | பழனி |
| விழுப்புரம் | காரைக்குடி |
| புதுக்கோட்டை | இராஜபாளையம் |
| ஈரோடு | நாமக்கல் |
| | உதகமண்டலம் |
| பொள்ளாச்சி | திண்டுக்கல் |
| தஞ்சாவூர் | கரூர் |
| திருப்பூர் | நாகர்கோவில் |
| தூத்துக்குடி | |
| வேலூர் | |

நகரியங்கள் (தற்போது நகராட்சிகள்)

| | |
|---|---|
| கொடைக்கானல் | மேட்டூர் |

[2002 ஏப்ரல் 19

இந்த எல்லாப் பகுதிகளுக்கும் 1-7-1981-ம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக்கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்படுகிறது. வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு உள்ளது:-

| சென்னைப் புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்திற்கும் | | | சென்னைப் புற நகர்ப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1 | முதல் மூன்று மனைகள் | வரியில்லை |
| 2 | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2 | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | ஐந்துமனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3 | ஏழுமனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4 | பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

நகர்ப்புற நிலவரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கேட்பு, வசூல் மற்றும் நிலுவை குறித்த 28-2-2002-ன்படியான விவரங்கள் இணைப்பு-15-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட நிலங்கள் விலக்குப் பெறுகின்றன:-

(1) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி நிலங்கள்.

(2) பொது வழிபாட்டுக்கான நிலங்கள்.



2002 ஏப்ரல் 19]

(3) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்.

(4) மயான பூமி நிலங்கள்.

(5) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(6) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(7) பொதுப் பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்.

(8) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்.

விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு அதிகமாக சிரமம் இருப்பின், பிரிவு 27(1) இன் கீழ் அரசு வரி விலக்கு அளிக்கிறது.

நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும், அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சென்னை-5 சேப்பாக்கத்தில் உள்ள நிலச்சீர்திருத்தத் துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நிலத் தீர்ப்பாயம்) தீர்ப்பாயமாக செயல்படுகிறார்.

[2002 ஏப்ரல் 19

## அத்தியாயம்-VI

### வேளாண்மை வருமானவரி

தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டில் வேளாண்மை வருமானவரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு வரி விதிக்கப்படுகிறது. பின்னர் 1958 ஆம் ஆண்டில், மலைத்தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்குக் கூட வரிவிதிப்பு செய்வதற்கு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான், மலைத் தோட்டமல்லாத பயிர்களின்மீது வேளாண்மை வருமானவரி விதிப்பு 1-4-1992 முதல் முழுமையாக அகற்றப்பட்டது. தற்போது, இரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், பாக்கு, கிராம்பு மற்றும் மிளகு ஆகிய மலைத்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிப்பு செய்யப்படுகிறது. 8 சாதாரண ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை உடைய வரிதாரர்கள் மட்டுமே, 1-4-1992 முதல் 1955-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். 8 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு இணக்க முறை வரிவிதிப்பு அனுமதிக்கப்படுகிறது. 1992-1993ஆம் வரிவிதிப்பு ஆண்டு முதல் சுயவரிவிதிப்பு மற்றும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரி நீக்க வருமான உச்சவரம்பு தற்பொழுது ரூ.28,000 ஆகும். மலைத் தோட்டப்பயிரல்லாத இனங்களின் வருமான வரி நிலுவையினை வசூலிக்கும் பணி 1-6-1992 முதல், வட்டாட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2001-2002ஆம் ஆண்டிற்கான வேளாண்மை வருமான வரி பற்றிய கேட்பு, வசூல் மற்றும் நிலுவை குறித்த விவரங்கள் இணைப்பு-16 இல் கொடுக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 19]

## இணைப்பு-1

பசலி ஆண்டு 1410-1411-க்கான நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை 1-1-2001 முதல் 28-2-2002 வரையிலான விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| | | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | கேட்பு | 79.65 |
| 2. | தடையாணை மூலம் நிலுவை | 10.76 |
| 3. | வசூலிக்கப்பட வேண்டிய கேட்பு | 68.89 |
| 4. | 1-1-2001 முதல் 28-2-2002 முடிய மொத்த வசூல் | 50.65 |
| 5. | வசூலிக்கப்பட வேண்டிய நிலுவை | 18.24 |

## இணைப்பு-2

### 1990-1991 முதல் 2001-2002 (28-2-2002 வரை) தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 22,154 | 6,36,65,000 |
| 2 | 1991-92 | 22,161 | 6,69,56,000 |
| 3 | 1992-93 | 39,087 | 12,66,39,335 |
| 4 | 1993-94 | 36,835 | 15,62,00,000 |
| 5 | 1994-95 | 19,296 | 11,48,90,295 |
| 6 | 1995-96 | 54,762 | 24,56,39,000 |
| 7 | 1996-97 | 61,755 | 30,88,62,970 |
| 8 | 1997-98 | 40,034 | 26,18,70,000 |
| 9 | 1998-99 | 37,214 | 35,91,91,000 |
| 10 | 1999-2000 | 22,574 | 18,84,46,000 |
| 11 | 2000-2001 | 18,632 | 17,91,38,000 |
| 12 | 2001-2002 (28-2-2002 வர | 7,929 | 7,92,90,000 |

## இணைப்பு-3

**1990-1991 முதல் 2001-2002 (28-2-2002 வரை) விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி**

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 998 | 88,65,000 |
| 2. | 1991-92 | 1081 | 91,36,000 |
| 3 | 1992-93 | 961 | 70,00,000 |
| 4 | 1993-94 | 991 | 66,06,000 |
| 5 | 1994-95 | 1024 | 89,74,000 |
| 6 | 1995-96 | 1836 | 2,00,89,000 |
| 7 | 1996-97 | 1548 | 1,33,41,000 |
| 8 | 1997-98 | 992 | 1,20,29,000 |
| 9 | 1998-99 | 1578 | 2,36,73,000 |
| 10 | 1999-2000 | 1166 | 95,05,000 |
| 11 | 2000-2001 | 684 | 61,52,000 |
| 12 | 2001-2002 (28-2-2002 வரை) | 392 | 39,20,000 |



## இணைப்பு-4

**2001-2002ம் ஆண்டில் மாவட்ட வாரியாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய விவரங்கள்**

குறியீடு .. 60,000

சாதனை .. 1,12,341

| வகுப்பினர் | | பயனாளிகள் |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 32456 |
| பழங்குடியினர் | .. | 2164 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 27876 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 46981 |
| ஏனையோர் | .. | 2864 |
| மொத்தம் | | 1,21,341 |

## இணைப்பு-5

**2001-2002 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட விவரங்கள்**

(ஏக்கரில்)

குறியீடு .. 4000

சாதனை .. 5822.66

| வகுப்பினர் | | பயனாளிகள் |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 2251 |
| பழங்குடியினர் | .. | 58 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 3147 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 3504 |
| ஏனையோர் | .. | 238 |
| மொத்தம் | .. | 9198 |
| ஒப்படை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு (ஏக்கரில்) | | 5822.66 |

# இணைப்பு-6

## இடைத்தரகர்களை ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றலும்

பல்வேறு சட்டங்களின்கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:-

### (அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948)

| வ. எண் | | உடைமைகள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 5092 | 29,567.15 |
| 2 | செயல்படுத்தப்பட்டவை | 5092 | 29,567.15 |
| 3 | நிலுவை | இல்லை | இல்லை |
| 4 | பயன் அடைந்தவர்கள் | 23,33,840 | |

### (ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

| வ. எண் | | உடைமைகள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 2125 | 4126.43 |
| 2 | செயல்படுத்தப்பட்டவை | 2115 | 4108.75 |
| 3 | நிலுவை | 10* | 17.68 |
| 4 | நிலுவை விவரம்:- | | |
| | தஞ்சாவூர் 2 | | |
| | நாகப்பட்டினம் 1 | | |
| | புதுக்கோட்டை 1 | | |
| | தருமபுரி 6 | | |
| | மொத்தம் 10* (நீதிமன்ற வழக்குகளால் நிலுவையில் உள்ளன.) | | |
| 5 | பயனடைந்தவர்கள் | 3,62,118 | |



### (இ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)

| வ. எண் | | கிராமங்கள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்கள் | 12 | 84.22 |
| 2 | செயற்படுத்தப்பட்டவை | 12 | 84.22 |
| 3 | நிலுவை | இல்லை | இல்லை |
| | பயனடைந்தவர்கள் | .. | 6,003 |

### (ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

| வ. எண் | | | உடைமைகள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|---|
| 1 | அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட உடைமைகள் | | 1,37,038 | 3,742.25 |
| 2 | செயற்படுத்தப்பட்ட உடைமைகள் | | 1,37,032 | 3,719.32 |
| 3 | நிலுவை | | 6* | 22.93 |
| | புதுக்கோட்டை மாவட்டம் | 4 | | |
| | இராமநாதபுரம் மாவட்டம் | 1 | | |
| | நாகப்பட்டினம் மாவட்டம் | 1 | | |
| | மொத்தம் (நீதிமன்ற வழக்குகளால் நிலுவையில் உள்ளது) | 6 | | |
| 4 | பயனடைந்தவர்கள் | | | 5,11,182 |

[2002 ஏப்ரல் 19

**(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)**

| வ. எண் | | உடைமைகள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டவை | 10 | 324.10 |
| 2 | நிலவரித் திட்டம் அமல்படுத்தப் பட்டவை | 3 | 146.18 |
| 3 | நிலுவை | 7* | 177.92 |
| 4 | பயன் அடைந்தோர் | 6,468 | - |

*சட்டங்கள் 26/63, 30/63 மற்றும் 24/69 ஆகியவற்றின்கீழ் காண்பிக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ள நிலுவை பரப்புகள் நீதிமன்றத் தடையாணைகள் மற்றும் இதர இடர்ப்பாடுகளினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973)**

| வ. எண் | | கிராமங்கள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த கிராமங்கள் | 122 | 100.69 |
| 2 | முடிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் பரப்பளவு | 122 | 100.69 |
| 3 | நிலுவை | இல்லை | இல்லை |

**(எ) வருவாய்ப் பின்தொடர் பணி**

காலங்கடந்த காரணத்தினால் நில அளவை மூல ஆவணங்கள் பயனற்றுப் போய்விட்ட காரணத்தினால் மறு நில அளவைப் பணிகள் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து வருவாய் பின்தொடர் பணி மேற்கொள்ளப்பட்டது.



2002 ஏப்ரல் 19]

வருவாய் பின்தொடர் பணி கீழே விவரித்துள்ளவாறு முழுமையாக முடிக்கப்பட்டது:—

| வ. எண் | விவரங்கள் | கிராமங்கள் | பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த கிராமங்கள் | 222 | 11,495.73 |
| 2 | முடிக்கப்பட்ட பரப்பு மற்றும் கிராமங்கள் | 222 | 11,495.73 |
| 3 | நிலுவை | இல்லை | இல்லை |
| 4 | பயனடைந்தோர் எண்ணிக்கை | | 86,375 |

**(ஏ) நில உடைமைதாரர்களுக்கு இழப்பீடு**

தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்கள் மூலமாக இதுவரை 20,316 உடைமைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நட்ட ஈட்டுத் தொகையாக இதுவரை ரூ. 7,81,35,129 உடைமைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், இடைக்காலத் தொகையாக ரூ. 2,63,81,443 வழங்கப்பட்டுள்ளது. சட்டம் 26/1948 பிரிவு 54 (பி)-இன்கீழ் ஒருங்கிணைந்த தமிழ்நாடு ஆந்திர மாநில முன்னாள் நிலச்சுவான்தாரர்களுக்கு வழங்க நட்ட ஈட்டுத் தொகையாக ரூ. 12.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி தொகையை இரு மாநிலங்களுக்கு நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆந்திரப் பிரதேச அரசுடன் கடிதத் தொடர்பு போக்குவரத்தில் உள்ளது.

2001-2002ஆம் நிதியாண்டில் "என. இழப்பீடு" என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,000 "ஏபி. இடைக்காலத் தொகை" என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஐ) மலைக் கிராமங்களில் வருவாய்ப் பின்தொடர் பணி**

| | | |
|---|---|---|
| 1. | அறிவிக்கை செய்யப்பட்ட மொத்த கிராமங்கள் | 66 |
| 2. | அறிவிக்கையிலிருந்து நீக்கப்பட வேண்டியவை | 4 |
| 3. | புதிதாக அறிவிக்கை வெளியிட முன் மொழிவுகள் அனுப்பப்பட்டவை | 5 |
| 4. | பணி முடிவுற்றவை | 44 |
| 5. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 16 |
| 6. | பணி தொடங்கப்பட வேண்டியவை | 2 |

[2002 ஏப்ரல் 19

## இணைப்பு-7

### நில அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள்

**(i) நத்தம் நில அளவை :**

மாநிலம் முழுவதும், நத்தம் நில அளவையில், குறியீட்டின்படி நில அளவைப் பணி முழுமையாக முடிக்கப்பட்டு விட்டது. (4467 சதுர கிலோ மீட்டர் அளக்கப்பட்டுள்ளது). ஒரு மாதத்தில் ஒவ்வோர் அலகிலிருந்தும் 0.60 கி.மீ.-க்கு உரிய ஆவணங்கள் நத்தம் நிலவரித்திட்டப் பிரிவிற்கு ஒப்படை செய்ய வேண்டுமென குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2001-2002-க்கான செயல்திறன் அறிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:-

| காலம் | நில அளவைப் பணி (ச.கி.மீ.) | நிலவரித் திட்டப் பிரிவிற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல் (ச.கி.மீ.) |
|---|---|---|
| 28-2-2002 வரை | 4467 | 4467 |

**(ii) நகர அளவை:**

மாநிலம் முழுவதும், நகர அளவையில் 1724 சதுர கிலோ மீட்டர் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில் ஒவ்வொரு அலகிற்கும் 0.80 சதுர கிலோ மீட்டர் பரப்பு அளவைப் பணிக்கும் 0.50 சதுர கிலோ மீட்டர் பரப்புக்கான ஆவணங்கள் நிலவரித்திட்டப் பிரிவிற்கும் ஒப்படைக்க வேண்டும் என குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2001-2002-க்கான செயல்திறன் அறிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:-



2002 ஏப்ரல் 19]

| காலம் | நில அளவைப் பணி (ச.கி.மீ.) | | நிலவரித் திட்டப் பிரிவிற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல் (ச.கி.மீ.) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1-4-2001 முதல் 28-2-2002 முடிய | 37.60 | 30.00 | 23.05 | [illegible] |

**(iii) மலைக்கிராம நில அளவை:-**

மாநிலம் முழுவதும், 858 ச.கி.மீ. மலைக்கிராம நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**(iv) நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம்**

| காலம் | வட்டாங்கள்/ கிராமங்கள் மொத்த எண்ணிக்கை | வன் பொருள் மற்றும் மென் பொருள் நிறுவப்பட்ட வட்டாங்களின் மொத்த எண்ணிக்கை | கணினி மயமாக்கப்பட்ட 'அ' பதிவுருக்களின் எண்ணிக்கை | கணினி மயமாக்கப்பட்ட சிட்டாக்களின் எண்ணிக்கை | செலவின விவரம் (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கணினி மயமாக்கப்பட்ட 'அ' பதிவேடு மற்றும் சிட்டாக்கள் | வன் பொருள் | பயிற்சி | மொத்தம் |
| 1-4-2001 முதல் 28-2-2002 முடிய | 206/ 17246 | 206 | 17246 | 17246 | 467.98 | 713.52 | 35.00 | 1216.50 |

## இணைப்பு-8

### மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்

| வருடம் | அறிவிப்பு செய்யப் பட்ட மிகை நிலங்கள் (ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்) | பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1-4-1961-31-3-1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1-4-1970-31-3-1980 | 1,08,132 | 70,730 | 51,244 |
| 1-4-1980-31-3-1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1-4-1990-31-3-1996 | 15,093 | 34,953 | 21,297 |
| 1-4-1996-31-3-2000 | 6,552 | 8,824 | 7,098 |
| 1-4-2000-31-3-2001 | 604 | 1,635 | 1,236 |
| 1-4-2001-28-2-2002 | 677 | 1,612 | 1,336 |
| மொத்தம் | 2,00,920 | 1,91,475* | 1,43,683 |

*1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-ன்கீழ் பொது நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களும் அடங்கும்.



## இணைப்பு-9

### பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் விவரப் பட்டியல்

| பயனடைந்தோர் இனம் | நபர்களின் எண்ணிக்கை | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 64,239 | 68,704 |
| பழங்குடியினர் | 204 | 274 |
| மற்றவர்கள் | 79,240 | 1,12,317 |
| மொத்தம் | 1,43,683 | 1,81,295 |

[2002 ஏப்ரல் 19

## இணைப்பு-10

**ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் கவரப்பட்ட நிலப்பரப்புகளைக் காண்பிக்கும் விவரப் பட்டியல்**

| | | | (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | மிகை நிலமென அறிவிக்கை செய்யப்பட்ட நிலப்பரப்பு | : | 2,00,920 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் | : | 1,81,295 |
| 3. | 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-ன் கீழ் பொது நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | : | 10,180 |
| 4. | மீதி | : | 9,445 |
| 5. | உச்ச நீதிமன்றம்-உயர் நீதிமன்றம், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் நில ஆணையர், நிலத்தீர்ப்பாயம், சார்பு நீதிமன்றங்கள் ஆகிய பல்வேறு நீதிமன்றங்களின் தடையாணையின் கீழ் உள்ள நிலப்பரப்பு | : | 9,292 (*) |
| 6. | மீதி | : | 153 |

(*) நீதிமன்றங்களில் நிலுவையில் **உள்ள வழக்குகளின் விவரம்**

| வ. எண் | நீதிமன்றத்தின் பெயர் | வழக்குகளின் எண்ணிக்கை | கவரப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | உச்ச நீதிமன்றம் | 7 | 695.00 |
| 2. | உயர் நீதிமன்றம் | 56 | 2081.00 |
| 3. | தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் | 40 | 4711.00 |
| 4. | நில ஆணையர் | 6 | 152.00 |
| 5. | நிலத் தீர்ப்பாயம் | 6 | 310.00 |
| 6. | பிற உரிமையியல் நீதிமன்றங்கள் | 30 | 1343.00 |
| | மொத்தம் | 145 | 9292.00 |



2002 ஏப்ரல் 19]

## இணைப்பு-11

**குடிவாரச் சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரப் பட்டியல்:**

| வ. எண் | சட்டத்தின் பெயர் | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம், 25/1955) | 1612 |
| 2. | தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/1961) | 12911 |
| 3. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல் சட்டம், 1955) (தமிழ்நாடு சட்டம், 24/1956) | 181 |

[2002 ஏப்ரல் 19

## இணைப்பு-12

### தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுச் சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம், 10/1969)-ன்கீழ் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்

| இனம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அ. ஆதிதிராவிடர் | 1,89,816 |
| ஆ. பழங்குடியினர் | 869 |
| இ. மற்றவர்கள் | 3,73,203 |
| மொத்தம் | 5,63,888 |



2002 ஏப்ரல் 19]

## இணைப்பு-13

### நில உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்

| இனம் | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆதிதிராவிடர் | 99733 | 46 | 922 | 100701 |
| பழங்குடியினர் | 2209 | 15 | 342 | 2566 |
| மற்றவர்கள் | 79130 | 351 | 243 | 79724 |
| மொத்தம் | 181072 | 412 | 1507 | 182991 |

[2002 ஏப்ரல் 19

## இணைப்பு-14

### தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் முடிக்கப்பெற்ற வழக்குகள் விவரப் பட்டியல்

| வ. எண் | விவரம் | வழக்குகள் | பல்வகையான மனுக்கள் |
|---|---|---|---|
| 1. | உயர் நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்ட மொத்த வழக்குகள் | 902 | 704 |
| 2. | தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 791 | 2306 |
| | மொத்தம் | **1693** | **3010** |
| 3. | மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை | 897 | 704 |
| 4. | தனிமேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை (28-2-2002 முடிய) | 746 | 2253 |
| | மொத்தம் | **1643** | **2957** |
| | 28-2-2002 முடிய நிலுவையில் உள்ளது | 50 | 53 |



2002 ஏப்ரல் 19]

## இணைப்பு-15

### நகர்ப்புற நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | கேட்பு | வழக்கு (ம) சீராய்வு மனுக்களில் உள்ள தொகை | 1-4-2001 முதல் 28-2-2002 வரை வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 3790.00 | 1776.00 | 538.15 | 1475.85 |
| 2 | கோயம்புத்தூர் | 1129.57 | 93.62 | 237.65 | 798.30 |
| 3 | கடலூர் | 77.37 | 20.84 | 8.96 | 47.57 |
| 4 | திண்டுக்கல் | 239.67 | 178.18 | 38.35 | 23.14 |
| 5 | ஈரோடு | 103.61 | 86.30 | 17.31 | .. |
| 6 | காஞ்சிபுரம் | 977.70 | 211.49 | 127.35 | 638.86 |
| 7 | கன்னியாகுமரி | 87.02 | 69.95 | 10.60 | 6.47 |
| 8 | கரூர் | 13.92 | 5.69 | 3.78 | 4.45 |
| 9 | மதுரை | 315.09 | 477.17 | 27.01 | 10.91 |
| 10 | நாகப்பட்டினம் | 7.48 | 0.48 | 3.33 | 3.67 |
| 11 | நாமக்கல் | 31.26 | 5.36 | 4.40 | 21.50 |
| 12 | புதுக்கோட்டை | 8.68 | 5.36 | 3.32 | .. |
| 13 | சேலம் | 239.06 | 60.57 | 29.68 | 148.81 |
| 14 | சிவகங்கை | 20.88 | 1.22 | 5.54 | 14.12 |
| 15 | தஞ்சாவூர் | 42.56 | 8.74 | 14.98 | 18.84 |
| 16 | திருவள்ளூர் | 1938.97 | 353.43 | 156.41 | 1399.13 |
| 17 | திருநெல்வேலி | 218.96 | 99.15 | 31.17 | 88.64 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 67.74 | 40.99 | 25.08 | 1.67 |
| 19 | தூத்துக்குடி | 82.70 | 61.99 | 16.77 | 3.94 |
| 20 | நீலகிரி | 46.82 | - | 10.74 | 36.08 |
| 21 | வேலூர் | 127.96 | 123.45 | 4.51 | - |
| 22 | விழுப்புரம் | 36.67 | 33.36 | 3.18 | 0.13 |
| 23 | விருதுநகர் | 11.83 | 5.04 | 5.34 | 1.45 |
| | மொத்தம் | **9815.52** | **3718.38** | **1353.61** | **4743.53** |

[2002 ஏப்ரல் 1

## இணைப்பு-16

**2001-2002 ஆம் ஆண்டுக்கான (28-2-2002 முடிய) வேளாண்மை வரி குறித்த கேட்பு, வசூல் மற்றும் நிலுவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

| விவரங்கள் | ஏப்ரல் 2001 முதல் பிப்ரவரி 2002 வரை | | |
|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கேட்பு | 313.18 | 568.42 | 881.60 |
| தடையாணை | 45.39 | 0.06 | 45.45 |
| வசூலிக்கப்படவேண்டிய கேட்பு | 267.79 | 568.36 | 836.15 |
| வசூல் | 80.78 | 345.62 | 426.40 |
| நிலுவை | 187.01 | 222.74 | 409.75 |
| கேட்பு அனுப்பப்பட்டதில் வசூல் | | | 426.40 |
| முன்வரி வசூல் | | 2001-2002 | 12.97 |
| | | 2002-2003 | 90.60 |
| பல்வகை வசூல் | | | 0.52 |
| மொத்த வசூல் | | | 530.49 |
| கழிக்க: முன்னரே வசூலிக்கப்பட்ட முன்வரி அதிகப்படியான வசூலில் சரிக்கட்டப்பட்ட தொகை | | | 325.42 |
| நிகர வசூல் | | | 205.07 |



2002 ஏப்ரல் 19]

**2000-2001 மற்றும் 2001-2002 வரையிலுள்ள காலத்திற்கான வரிதாரர்களின் எண்ணிக்கை**

| வருடம் | இணக்க முறை | வருமான அடிப்படை | மொத்தம் |
|---|---|---|---|
| 2000-2001 | 3691 | 304 | 3995 |
| 2001-2002 (பிப்ரவரி 2002 வரையில்) | 3607 | 303 | 3910 |

| பயிர் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|
| தேயிலை | 84,484.48 |
| காப்பி | 46,883.26 |
| ஏலம் | 6,826.21 |
| இரப்பர் | 14,949.13 |
| மிளகு | 160.82 |
| கிராம்பு | 592.70 |
| பாக்கு | 771.33 |
| மொத்தம் | 1,54,667.93 |

அனைத்து வரிதாரர்களும், முந்தைய ஆண்டில் அவர்களால் ஈட்டப்பட்ட வேளாண்மை வருமானத்தின் 80% தொகையினை நடப்பு வரிக்கணக்கு ஆண்டிற்கு, முன்வரிப் பணமாக முந்தைய ஆண்டின் பிப்ரவரி மாத முடிவிற்குள் செலுத்த வேண்டும். இந்த முன்வரிப் பணத்தொகை, நடப்பு வரியாண்டின் இறுதியில், அவரால் செலுத்தப்பட வேண்டிய வரிப் பணத்தில் சரி செய்து (கழித்துக்) கொள்ளப்படும்.

[2002 ஏப்ரல் 19

## இணைப்பு-14

**(383 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**கோரிக்கை எண் 11-வணிகவரித் துறை**

**முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003**

தொன்மையான துறைகளுள் ஒன்றான பதிவுத் துறை ஏறத்தாழ 138 வருடங்களாக இயங்கி வருகிறது. இத்துறை அரசுக்கு வருவாயை ஈட்டித்தருவதில் வணிகவரி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறைகளுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தை வகிக்கிறது. அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்துறை ஆற்றிவரும் தொண்டு வெளிப்படையாகவும் மற்றும் விரைவாகவும் இருப்பதற்கு மேலும் முயன்று வருகிறது. இந்த நோக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும், புதிய முயற்சிகள் மூலமும் இத்துறை தன் செயல்பாட்டினை நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**1. பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்**

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)
5. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)

இத்துறை கீழ்க்காணும் சட்டங்களின் கீழும் சில பணிகளைச் செய்து முடிக்கிறது:-

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம்



2002 ஏப்ரல் 19]

(மத்திய சட்டம் 6/1886)

3. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்.
4. 1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969
5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)
7. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணங்கள் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
8. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

**2. நிர்வாக அமைப்பு**

**அ. தலைமையிடம்**

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட வகைகளிலும் பணியாற்றுகின்றார்:—

அ. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்

ஆ. சீட்டு நிதிச் சட்டம் 1982-ன்கீழ் சீட்டுப் பதிவாளர்

இ. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் சங்கப் பதிவாளர்

ஈ. வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம், 1972-ன்கீழ் பதிவாளர்.

கீழ்க்கண்ட அலுவலர்களும் தலைமை இடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்:—

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)
5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)
6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலை)
7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)
8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)
9. கணக்கு அலுவலர்
10. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (விழிப்புக் குழு)

**ஆ. கள அலுவலகங்கள்**

**(1) மண்டல அலுவலகங்கள்**

சென்னை, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் தஞ்சாவூரைத் தலைமையிடங்களாகக் கொண்டு இம்மாநிலத்தில் 9 பதிவு மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்கள் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் தலைமையில் இயங்கிவருகின்றன. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், வருவாய் வசூல், பதிவு அலுவலகங்களை திடீர் ஆய்வு செய்தல், விசாரணைகளை மேற்கொள்ளுதல் போன்றவைகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். இவர் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் உள்ளார். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறைகள் தலைவர் பிறப்பிக்கும் ஆணையின் மீது மேல்முறையீட்டு அதிகாரியாகவும் உள்ளார்.

**(2) வட்டார அலுவலகங்கள்**

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 5 உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். சார் பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுக்களின் மீது விசாரணைகள் செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் செய்யப்படும் தணிக்கைப் பணியின் மீது சோதனை ஆய்வு செய்வது ஆகியவை இவர்களது முக்கிய



பணிகளாகும். மேலும் இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களை ஆய்வு செய்கின்றனர்.

**(3) மாவட்ட அலுவலகங்கள்**

மாநிலம் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பணிப் பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்திற்கொண்டு, 12 பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஓர் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்படுகின்றன. இவர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள் கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரமும் மாவட்டப் பதிவாளர்களிடம் உள்ளது.

**(4) தணிக்கைக் குழுக்கள்**

இத்துறையின் அனைத்துப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளை நூறு சதவீத தணிக்கை செய்வதை உறுதிசெய்யும் வகையில் கட்டுக்கோப்பான ஓர் உள் தணிக்கை அமைப்பு உள்ளது. மாவட்டப் பதிவாளர்களின் தலைமையின்கீழ் 45 தணிக்கை அலகுகள் உள்ளன.

**(5) சார்பதிவகங்கள்**

மாநிலத்தில் 600 சார்பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர, இந்து திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணங்கள் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் சார் பதிவாளர் செயல்படுகிறார். மேலும் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளர்களாகவும் செயல்படுகின்றனர்.

**(6) பதிவுத் துறை பயிற்சி நிலையம்**

பல்வேறு சட்டங்களை நிர்வகித்துவரும், வருவாய் ஈட்டித் தரும் துறையாக இருப்பதால் சட்டங்களில் உள்ள விதிமுறைகள் குறித்து அலுவலர்களுக்கு தெளிவுபடுத்துவதும், பயிற்சியளிக்க வேண்டியதும் மிக முக்கியமாகிறது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இரண்டு விரிவுரையாளர்களுடன் பதிவுத் துறை பயிற்சி நிலையம் 1996 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 19

31-3-2002 முடிய 1953 பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் பணிகள் இதுகாறும் வெகுவாகப் பாராட்டத்தக்க வகையில் இருந்தமையால், பொது நிதி மற்றும் கொள்கை குறித்த தேசிய நிலையம் இப்பயிற்சி நிலையத்தைப் பயன்படுத்தி, ஏனைய மாநிலங்களில் உள்ள பதிவுத் துறை பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க முன்வந்துள்ளது.

### 3. துறையின் சிறப்புப் பணிகள்

#### (1) முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரி

பதிவுத் துறைத் தலைவர் இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியாகவும் உள்ளார். இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் வருவாய்க் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி என்ற முறையில் அவர் வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்துவருகிறார். மேலும் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(A)-ன்கீழ் ஆட்சியர் (முத்திரை)-ஆல் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணையின்மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் உள்ளார். அரசின் வருவாய்க்குக் குந்தகமாக ஆட்சியர் பிறப்பிக்கும் ஆணைகளை தன்னிச்சை சீராய்வு செய்யும் அதிகாரமும் இவரிடம் உள்ளது.

#### (2) வழிகாட்டிக் குழு

ஆவணங்களில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வசதியாக பத்திரப்பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கிராம புல எண்கள் மற்றும் நகர எல்லையில் இருக்கும் தெருக்களில் உள்ள சொத்துக்களின் மதிப்புகள் அடங்கிய வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் வருவாய் நலனைப் பாதுகாக்கும் வகையில் இது செய்யப்படுகிறது. பதிவு அலுவலர்கள் சரியான முத்திரைத் தீர்வை விதிக்க வழிகாட்டி மதிப்புகள் உதவுகின்றன.

வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் தயாரித்தல், மதிப்புகள் திருத்தியமைத்தல் மற்றும் வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களைவதற்கும் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் வழிகாட்டி மதிப்புக் குழு இயங்கி வருகிறது. இக்குழுவில், தலைமையிட மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி) செயலாளராகவும், அந்தந்த மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் உண்மைத் தன்மையுடனும், நன்நோக்குடனும் அமைவதற்காக, சென்னை, நில நிர்வாக



2002 ஏப்ரல் 19]

ஆணையரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் இணை ஆணையர் (நில எடுப்பு) இவ்வழிகாட்டிக் குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஆளுகைக்குட்பட்ட பகுதிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)-ன்கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதிகள் என அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளுள் அடங்கும் கிராமங்கள் ஆகிய பகுதிகளினுள் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படுகிறது. கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படுகிறது. நகர்ப்புற சொத்துக்களுக்கான வழிகாட்டி மதிப்பு கடைசியாக 1-4-2002-ல் திருத்தியமைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்பு 1-4-2000 அன்று திருத்தியமைக்கப்பட்டது. பொது மக்களுக்கு உதவும் வகையிலும், ஒளிவுமறைவற்றதாக இருக்கும் வகையிலும் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டின் நகல்கள், வர்த்தகக் கழகங்கள், விவசாய மற்றும் வணிகர் சங்கங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அனைத்து 600 சார் பதிவகங்களுக்கான வழிகாட்டி மதிப்பு, http:/ igregn.tn.nic.in. என்னும் முகவரியில் உள்ள இணைய தளத்தில் கிடைக்கும்.

#### (3) புலனாய்வுக் குழு

உண்மையான அளவீடுகளைக் காட்டாமல் அதற்கும் குறைவான அளவீடுகளைக் கொண்ட கட்டடங்கள் சம்பந்தமான பத்திரங்களைப் பதிவு செய்வது குறித்த முறைகேடுகளைத் தடுப்பதற்காக புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சொத்துக்களை ஆய்வு செய்து, குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களை வசூலிக்கும் அதிகாரம் இக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகள் மற்றும் உள் தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றையும் கவனித்து வருகிறது. புலனாய்வுக் குழு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் இயங்கிவருகிறது. அவருக்கு உதவியாக 8 மாவட்டப் பதிவாளர்கள், 4 சார்பதிவாளர்கள் மற்றும் 2 உதவி செயற் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அதிக அளவில் நிலுவையில் உள்ள ஆவணங்களை முடிவுக்குக் கொண்டுவரவும், விரைந்து திருப்பியளிக்கவும் அனைத்துப் பதிவு அலுவலர்களுக்கும் களப்பணி ஆய்வு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 4. இந்திய முத்திரைச் சட்டம்

### (i) வருவாய் ஈட்டுதல்

முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் 1968-69-ல் ரூ.40 கோடியிலிருந்து, 2001-2002-ல் ரூ.1,264.20 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பு நிதியாண்டில் வருவாய் வளர்ச்சி விகிதம் 15.54 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் வருவாய் வசூலிப்பு விவரம்:

| ஆண்டு | பதிவு ஆவணங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1991-92 | 11,38,541 | 400.45 |
| 1992-93 | 10,98,115 | 440.85 |
| 1993-94 | 11,51,150 | 460.62 |
| 1994-95 | 12,65,287 | 586.34 |
| 1995-96 | 13,61,036 | 748.50 |
| 1996-97 | 12,89,947 | 748.58 |
| 1997-98 | 13,32,377 | 806.26 |
| 1998-99 | 13,69,688 | 854.30 |
| 1999-2000 | 15,03,181 | 1019.71 |
| 2000-2001 | 13,83,593 | 1094.14 |
| 2001-2002 | 13,90,394 | 1264.20 |

### (ii) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ(1)-ன்கீழ் தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-யின் நடவடிக்கைக்கு அனுப்பப்படும் ஆவணங்கள்

பத்திரம பதிவு செய்யும்போது, பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பு, வழிகாட்டி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்குக் குறைவாக



இருந்து, பத்திரம் பதிய வருபவர் வித்தியாச முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)(1)-ன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பினை நிர்ணயிப்பதற்காக, பத்திரப் பதிவு அதிகாரி, அந்தப் பத்திரத்தை தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு அனுப்பிவைப்பார். அதன் அடிப்படையில், செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை முடிவு செய்யப்படுகிறது.

### (iii) முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி

விற்பனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடமானம் போன்ற ஆவணங்களைப் பொறுத்தவரையில், முத்திரைத் தீர்வையுடன் கூடுதலாக 5 சதவிகிதம் மிகுவரியும் வசூலிக்கப்படுகிறது. இம்மிகுவரியில் 10 சதவிகிதம் வசூல் கட்டணமாக பதிவுத் துறை எடுத்துக்கொண்டு, எஞ்சியுள்ள 90 சதவிகிதத் தொகை சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளைப் பொறுத்தவரை 3 சதவிகிதம் இத்துறை மிகுவரியில் வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. எஞ்சியுள்ள 97 சதவிகித மிகுவரி இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

## 5. நிர்வாகச் சீர்திருத்தங்கள் — சட்டத் திருத்தங்கள்

### (அ) பதிவுச் சட்டம்

### செய்யப்பட்ட திருத்தங்கள்

நீதியரசர் திரு ஜி. ராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் ஊழல் தடுப்பு உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பினாமியின் பெயரில் சொத்து மாற்றத்தைத் தடுப்பதற்காக 14-4-2001 முதல், சொத்து வாங்குபவர் ஆவணப்பதிவு அலுவலர்முன் தோன்றிடவும், கையொப்பமிடவும் வேண்டும் என பதிவுச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பதிவுத் துறை கணினிமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, மின்னணு வழியில் ஆவண நகல்களை சேகரித்து வைப்பது மற்றும் அதனின்று மீள் செய்து நகல்கள் வழங்குவது தொடர்பான பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சட்டம் 50/2000, நாள் 14-12-2000-ன்படி பதிவுச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 19

**(ஆ) இந்திய முத்திரைச் சட்டம்**

**செய்யப்பட்ட திருத்தங்கள்**

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட முத்திரைத் தீர்வை சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 11-7-2001 முதல் பலவகையான ஆவணங்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையை அதிகப்படுத்தி, இந்திய முத்திரைச் சட்டம் அட்டவணை 1-ன்கீழ் சட்ட எண் 9/2001 திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அரசின் வருவாய் அதிகரிக்க இது ஏதுவாக உள்ளது.

**உத்தேச திருத்தங்கள்**

தமிழ்நாடு பதிவுத் துறை அமைச்சர் உறுப்பினராக இருக்கும் முத்திரைத் தீர்வைச் சீரமைப்பிற்கான மாநில அரசுகளின் நிதி அமைச்சர்கள் குழு இந்திய முத்திரைச் சட்டத்தின் பல வகைபாடுகளின் தேவையையும், பல்வகையான ஆவணங்களுக்கு செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வை விகிதங்களை சீரமைத்திடவும் பரிசீலித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி மைய அரசால் அனுப்பப்பட்ட மாதிரி முத்திரைச் சட்டத்தின்மீது இந்த அரசின் கருத்துக்கள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**6. முத்திரைத் தாள்கள்**

(i) சென்னையில் உள்ள மண்டல துணை இயக்குநர் (கருவூலம் மற்றும் கணக்கு) அவர்கள் பதவி வழியாக கண்காணிப்பாளராகச் செயல்பட்டு தமிழ்நாடு முழுவதற்கும் தேவைப்படும் அஞ்சல் சாரா முத்திரைத்தாள்களான நீதிமன்றம், நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள்களின் தேவையைக் கண்டறிகிறார். இவ்வாறு தேவையைக் கணக்கிட்டபின் நாசிகிலுள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு தேவைப் பட்டியலை அனுப்புகிறார். பொதுமக்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்கள் தங்குதடையின்றி கிடைக்கவும், தீயவர்களால் ஏற்படுத்தப்படும் செயற்கை தட்டுப்பாட்டினைத் தடுக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ii) பிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்**

பதிவுக்கு வரும் பொது மக்களின் நலனுக்காக, முத்திரைத்தாள் தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில், பிராங்கிங் கருவி மூலம் ஆவணங்கள் முத்திரையிடுதல் அனுமதிக்கப்படுகிறது. இதற்காக 15 சார்பதிவாளர் அலுவலகங்களில் பிராங்கிங் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 19]

**7. முத்திரைத்தாள் விற்பனை**

(i) முத்திரைத்தாள்களை விற்பனை செய்ய நியமிக்கப்பட்டுள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாடுகளை மாவட்டப் பதிவாளர்கள், பதிவுத் துறை உயர் அதிகாரிகள் மற்றும் சிறப்பு விழிப்புக் குழுவினரால் மேற்பார்வை செய்து முறைப்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் 31-1-2002 அன்றைய தேதியில் 4,996 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

**(ii) முத்திரைத்தாள் விற்பனையாளர்களாகச் சார்பதிவாளர்கள்**

சார்பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத்தாள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக முத்திரைத் தீர்வையினை ரூ.10,000-வரை ரொக்கமாகப் பெற்றிடவும், சார்பதிவாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். இந்த உச்சவரம்பை மாற்றுவதன் தேவை குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. மாவட்டப் பதிவாளர் நிலையில் செயல்படும் சார் பதிவாளர்கள் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன்கீழ் உச்சவரம்பு இன்றி முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

**(iii) மைய முத்திரைத்தாள் விற்பனை நிலையம் (Centralised Stamp Vending Unit)**

அரசாணையின்படி, நீதிமன்ற முத்திரைத்தாள்கள், பத்திரப்பதிவிற்கான நீதி சாரா முத்திரைத்தாள்கள் மற்றும் முத்திரை வில்லைகள் ஆகியவை பொதுமக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்யும் நோக்குடன், சென்னை துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு முத்திரைத்தாள் விற்பனை மையம் விரைவில் திறக்கப்படவுள்ளது. இதுகுறித்து அனைத்து ஆயத்த நடவடிக்கைகளும் முடியும் தருவாயில் உள்ளன.

**8. ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்களுக்கான உரிமங்கள்**

**(அ) நகல் எழுத்தர் உரிமம்**

தமிழ்நாடு நகல் எழுத்தர் உரிம விதிகள், 1971-ன்கீழ் வரையறுக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நகல் எழுத்தர் உரிமங்களும்,

[2002 ஏப்ரல் 19

தட்டச்சுத் தேர்வு தகுதி பெற்றவர்களுக்கு தட்டச்சர்களுக்கான உரிமங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

### (ஆ) ஆவண எழுத்தர் உரிமம்

முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்து அரசு நடத்தும் அறிவுத்திறன் தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களுக்கு விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற ஆவணங்களை எழுதுவதற்கு 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிமம் விதிகளின்கீழ் உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

## 9. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975

பதிவுச் சட்டம், 1908-ன்படி பணியில் அமர்த்தப்படும் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து மாவட்டப் பதிவாளர்கள், அவர்களுக்கு உரிய அதிகார வரம்பில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் பதிவாளர்கள் ஆவர். பதிவாளர்களை மேற்பார்வையிடும் அதிகாரமும், மேல்முறையீடுகளைக் கேட்கும் அதிகாரமும் பதிவுத் துறைத் தலைவருக்கு உள்ளது.

இச்சட்டத்தின்கீழ் *31-12-2001* தேதியில் *1,05,920* சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 10. சீட்டு நிதிகள் சட்டம், 1982

(அ) பதிவுத் துறைத் தலைவர் சீட்டுகளின் பதிவாளராகச் செயல்படுகிறார். இவர், ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளர் மற்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் துணையுடன் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் சீட்டு நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கிறார்.

1982ஆம் வருடத்திய சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாக அவரவர் எல்லைக்குள் செயல்படுகின்றனர். மேலும், மாவட்டங்களில் 47 சார்பதிவாளர்கள் சீட்டு ஆய்வாளர்களாகச் செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளைத் தீர்க்க சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மையம்) ஆகிய இடங்களில் இரண்டு சிறப்பு சீட்டு நடுவர்களும் கோயம்புத்தூரில் ஒருவரும் உள்ளனர்.



2002 ஏப்ரல் 19]

*31-1-2002* தேதியில் *3,154* சீட்டு நிறுவனங்கள் சீட்டுத் தொழில் செய்கின்றன. இவை நடத்தும் சீட்டுக்களின் எண்ணிக்கை *34,880* ஆகும். இந்தச் சீட்டுக்களில் *31-1-2002* அன்று உள்ளபடி *273.22* கோடி ரூபாய் காப்பீடாகப் பெறப்பட்டுள்ளது.

*2001-2002* ஆம் ஆண்டில் சீட்டு நடுவர்களிடம் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை *3,519* ஆகும். சீட்டு நடுவர்களால் முடிவாக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை *780* ஆகும். *31-1-2002* அன்று உள்ளபடி சீட்டு நடுவர்களிடம் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை *3,433* ஆகும். சீட்டுகள் நடப்புக் காலத்தில் குறைந்தது ஒரு முறையும் நிறுவனங்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் தவறாமல் தணிக்கை செய்யப்படுகின்றன. அங்கீகாரம் பெறாத சீட்டு நிறுவனங்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. சட்டப்படியான நடவடிக்கைகள் தவிர, அங்கீகாரம் பெறாத சீட்டு நிறுவனங்களில் சேராது எச்சரிக்கையாக இருக்குமாறு தகவல் சாதனங்கள் மூலம் விரிவான விளம்பரம் பொதுமக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சீட்டு விழிப்புக் குழு

அங்கீகாரமற்ற சீட்டுகள் மற்றும் இதர ஒழுங்கீனங்களைக் கண்டறிவதற்காக, சீட்டுகளின் கூடுதல் பதிவாளர் தலைமையில் சீட்டு விழிப்புக் குழு ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (சீட்டு), வடசென்னை, தென்சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட சீட்டு ஆய்வாளர்கள் ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். போலி நிறுவனங்கள் சீட்டுகள் நடத்துவதைத் தடுப்பதற்கும் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அங்கீகாரமற்ற சீட்டுகள் சம்பந்தப்பட்ட புகார்களின் மீது தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கும், பயனளிக்கும் நடவடிக்கைகள் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளன. எல்லா நடப்பு சீட்டுகளும் 100 சதவீதம் சரிபார்க்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. பொதுமக்களை எச்சரிக்கை செய்வதற்காக, எந்தெந்த, நிறுவனங்களின் சீட்டு நடத்துபவர்கள் குற்றங்கள் இழைத்து அதற்காகக் குற்ற நிரூபணம் பெற்றவர்களாக உள்ளார்களோ அப்படிப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை, பதிவுத் துறையின் அனைத்து அலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளில்மட்டுமின்றி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், கோட்டாட்சி மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அறிவிப்புப் பலகைகளிலும் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 19

**(இ) தமிழ்நாடு சீட்டுக் கழகம்**

தமிழ்நாடு சீட்டுக் கழகம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இக்கழகத்தில் பணிபுரிந்த பணியாளர்கள் படிப்படியாக விடுவிக்கப்படுகின்றனர். இந்தக் கழகம் வசூலிக்க வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிக்கும் வரையிலும், நிலுவைப் பணிகளை முடிக்கும் வரையிலும், குறைந்தபட்சப் பணியாளர்களுடன் செயல்பட வேண்டியுள்ளது. இந்தக் கழகம் வசூலிக்க வேண்டிய நிலுவைத் தொகை 28-2-2002-ன்படி ரூபாய் 19.08 இலட்சங்களாகும். 221 வழக்குகள் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ளன. 206 வழக்குகள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

**11. இந்தியக் கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932**
**(Indian Partnership Act, 1932)**

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தின்கீழ் மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்களாகச் செயல்படுகின்றனர். இச்சட்டத்தின்கீழ் படிவம்-I-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளை நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைப் பெறவும், அவற்றிக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதைக் கண்காணிக்கவும், ஒவ்வோர் ஆண்டும் நிறுவனம் செயல்பட்ட விவரம் குறித்து உறுதிமொழியைக் கட்டாயம் கோர்வை செய்திட 1932ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிறுவனங்கள் திருப்திகரமாகச் செயல்படுகின்றன என்பது குறித்து ஒவ்வோர் ஆண்டும் உறுதிமொழியை அவை கட்டாயமாகக் கோர்வை செய்ய வேண்டும் என்று சட்டத் திருத்தம் செய்ய செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

31-1-2002-ல் உள்ளபடி 3,62,020 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**12. திருமணப் பதிவுகள்**

**(i) இந்து திருமணங்கள் சட்டம், 1955**

இந்துக்களிடையில் ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட



2002 ஏப்ரல் 19]

திருமணங்கள் தொடர்பான பதிவு வடிப்புகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் அனைத்து சார்பதிவாளர்களும் திருமண அலுவலர்கள் ஆவார்கள்.

**(ii) சிறப்பு திருமணங்கள் சட்டம், 1954**

இச்சட்டத்தின்கீழ் எத்தகைய வடிவிலான திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

**(iii) இந்திய கிறிஸ்துவ திருமணங்கள் சட்டம், 1872**

கிறிஸ்துவ பாதிரியார்களாலும், இந்த சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களாலும் இந்திய கிறிஸ்துவ திருமணங்கள் செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட திருமண வடிப்புகள் சென்னை-28-ல் உள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

**13. கணினிமயமாக்குதல்**

மக்களுக்கு ஆற்றிவரும் சேவையின் தன்மையை மேம்படுத்த வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளின்படி ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டம் இத்துறையில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003ஆம் ஆண்டின் முதல் காலாண்டு இறுதிக்குள் மொத்தமுள்ள 650 சார்பதிவாளர் அலுவலகங்களில் (600 சார்பதிவாளர் அலுவலகங்கள், 50 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள்), 350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுவிடும். எஞ்சிய 300 அலுவலகங்கள் குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் கணினிமயமாக்கப்படும். தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான வெளிப்படையான பணி, இடைத் தரகர்களை நீக்குதல், குறுக்கீடுகளைக் குறைத்தல் ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன. துறையைப் பொதுமக்களின் நண்பனாக மாற்றிட துறையால் வழங்கப்படும் எல்லா சேவைகளைப்பற்றியும், செலுத்தப்பட வேண்டிய கட்டணம், வழிகாட்டி மதிப்பு, நிர்ணயிக்கப்பட்ட படிவங்கள், மாதிரி ஆவணங்கள்பற்றியும் சரியான தகவல் அறிய இணையதள (http:/igregn.tn.nic.in.) வசதியும் கேள்விகளுக்கு உரிய பதில் பெற மின்னஞ்சல் அஞ்சல் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 19

***(383 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

## கோரிக்கை எண். 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை— எழுதுபொருள் மற்றும் அச்சு

### கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

*தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!*
*எழிலை உலகம் தழுவும் வண்ணம்*
*ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்*
*தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!*

—பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தரின் கனவை நனவாக்கும் வகையில் இம்மாநிலத்தைத் தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழும் வகையில் உயர்த்த இவ்வரசு அயராது பாடுபட்டு வருவது யாவரும் அறிந்த ஒன்று.

இச்செயலை உலகுக்கு எடுத்தியம்ப உதவுவது அரசு அச்சகங்களே.

தமிழகத்தின் தலைமையிடமான சென்னையிலே சற்றேறக்குறைய 17 ஆண்டுகளுக்கு முன்பு அரசின் அச்சுப் பணிகளை நிறைவேற்றத் தொடங்கப் பெற்றதுதான் அரசு அச்சகம்.

தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் தமிழ்நாடு அரசிதழ்கள், வரவு-செலவு ஆவணங்கள், தமிழ்நாட்டு அரசுத் தேர்வு வினாத் தாட்கள், பரிசுச் சீட்டுகள், மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் ஆண்டறிக்கைகள், பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள் கமுக்கத்தன்மைவாய்ந்த சிறப்பு அறிக்கைகள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் போன்ற பணிகள் அரசு அச்சகங்களிலேயே அச்சடித்து விநியோகிக்கப்படுகின்றன.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை:**

சென்னையில் அமைந்துள்ள இவ்வியக்ககத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், கிடங்குகளும், விற்பனை நிலையங்களும் இயங்குகின்றன. இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவர் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இணை இயக்குநர், பொது மேலாளர், பணி மேலாளர்கள், துணைப் பணி மேலாளர்கள், கிளை



2002 ஏப்ரல் 19]

மேலாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (எழுதுபொருள்) மற்றும் கணக்கு அலுவலர் ஆகியோர் இயக்குநரின்கீழ் பணியாற்றி இத்துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அனைத்து நிலைகளிலும் உள்ள அச்சுத் துறை பணியாளர்களது நிர்வாகம், பதவி நியமனம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு, விடுப்பு, பணிமாற்றம் போன்ற பணியாளர்கள் நலன்கள் இயக்ககத்தில் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது உரிய காலத்தில் ஆணைகள் வெளியிடப்படுகின்றன. தொழில் தகராறு சட்ட வழக்குகளை எதிர்கொள்ளும் பணிகளையும் அச்சகத் தொழிலாளர்களின் நலன் கருதி இயக்ககம் செய்ய வேண்டியுள்ளது.

இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு தொழில்நுட்ப பிரிவு, நிர்வாகப் பிரிவு, எழுதுபொருள் அலுவலகப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் இணை/துணை இயக்குநர்கள் அளவில் உள்ள அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர் அப்பிரிவின்கீழ் இயங்கும் அலுவலர்களின் பணிகளைக் கண்காணித்து நிர்வகித்து வருகிறார். இவர்கள் அனைவரும் நேரிடையாக துறைத் தலைவரான இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் இணை இயக்குநர் நியமிக்கப்பட்டு பணியாளரமைப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள் அலுவலகம், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகள், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ், மந்தணச் சிறப்பு அறிக்கைகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச்சீட்டுகள், வினாத் தாட்கள், பரிசுச் சீட்டுகள் போன்ற மறைபொருள் தன்மை வாய்ந்த இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளை ஆண்டு முழுமைக்கும் தொடர்ந்து செய்து தருவது இத்துறையின் ஒரு சில பணிகளாகும்.

சென்னையிலுள்ள அரசு மைய அச்சகம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை அச்சகம் தவிர மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களிலும் அரசு கிளை அச்சகங்கள் உள்ளன. மேலும் எழுதுபொருள் பிரிவு, அரசு வெளியீடுகள் பிரிவு ஆகியவையும் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

**அரசு மைய அச்சகம், சென்னை:**

அரசு மைய அச்சகம் இரண்டு பணி மேலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 1983 பணியாளர்களை கொண்டு இயங்கி வருகிறது. இங்குள்ள பணியாளர்களுக்கு மும்முறை பணிமாற்று முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வச்சகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அச்சிடும் இயந்திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள், நிழற்படக் கோப்பு இயந்திரம், இரப்பர் முத்திரைப் பிரிவு, பிளாக் தயாரிக்கும் பிரிவு, டெஸ்க் டாப் பப்ளிசர் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

பரிசுச் சீட்டுகளை அச்சிடும் பணி 1994 ஆம் ஆண்டு முதல் அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் 2 கோடி பரிசுச் சீட்டுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. பரிசுச் சீட்டுகளை அச்சிடத் தேவையான நவீன அச்சு இயந்திரங்கள் ரூ.91.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

மாநில வரவு-செலவு திட்டப் பணிகள், சட்டப் பேரவையின் அவசரப் பணிகள், அதிரகசியப் பணிகள், தேர்வாணைய வெளியீடுகள், பரிசுச் சீட்டுகள் முதலிய முக்கிய அச்சுப் பணிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர அரசு நாட்காட்டிகளும், நாட்குறிப்பேடுகளும் இங்கு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

நவீனமயமாக்குதல். திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டு அரசு மைய அச்சகத்திற்கு புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.8.75 இலட்சம் வழங்கப்பட்டது. அதிலிருந்து லாமினேட்டிங் பொறி, கணினி அசசு முனையம், லேசர் அச்சுப் பொறி, தடங்கலில்லா மின் வழங்கு கலம் முதலியன கொள்முதல் செய்து பொருத்தப்பட்டுள்ளன.

**அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை:**

இக்கிளை அச்சகம் 1923 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்குகள் பட்டியல் குறித்த முக்கியப் பணிகளை மேற்கொள்வதற்காக உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் நிறுவப்பட்டது. இதில் ஒரு துணைப் பணி மேலாளரும் 209 பணியாளர்களும் உள்ளனர். இங்குள்ள பணியாளர்களுக்கு மூன்று முறைமாற்று முறையில் பணிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

தினசரி வழக்குகள் குறித்த பட்டியல்கள் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டு அன்றைய இரவே அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. இப்பணிகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள்



முடிக்கப்பட்டு அனைத்து தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. வழக்குரைஞர்கள், பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கட்குத் தேவையான அளவில் அனைவருக்கும் பயன்படும் வகையில் அரசு வெளியீடுகளின் கிளை விற்பனை நிலையமும் இவ்வச்சகத்தில் இயங்கி வருகிறது.

மாதமிருமுறை வெளியிடப்படும் இந்திய சட்ட அறிக்கைகள் மற்றும் அரசுத் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

**அரசு கிளை அச்சகம், மதுரை:**

213 பணியாளர்களைக்கொண்டு ஒரு துணைப் பணிமேலாளரின் தலைமையில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் இது இயங்கி வருகிறது. தொழில்நுட்பப் பிரிவில் 2 உதவிப் பணி மேலாளர்களும், ஓர் உதவி செயற்பொறியாளரும் நிர்வாகப் பிரிவில் ஓர் உதவி இயக்குநரும் பணியாற்றுகின்றனர்.

வருவாய்த் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை, பதிவுத் துறை, மருத்துவத் துறை, வணிகத் துறை, வேளாண்மைத் துறையின் விதைச்சான்று அட்டைகள், அரசுத் துறை அட்டவணைகள், பொதுப்பணித் துறை விலைப்பட்டியல் போன்ற துறைகளுக்கான நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

2000-2001 ஆம் நிதியாண்டில் இக்கிளை அச்சக மேம்பாட்டிற்காக, ரூ.42.09 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

இக்கிளை அச்சகம் மூலம் 1-1-2002 முதல் மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, திண்டுக்கல் போன்ற மாவட்ட அரசிதழ்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி:**

1965 ஆம் ஆண்டில் அரியமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்ட இந்த முதல் மாநில மண்டல அச்சகம் தற்போது சொந்தக் கட்டடத்தில் துவாக்குடியில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தில் அனைத்துத் துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட

பொதுப் படிவங்கள், பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. இதில் தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள், அளவைப் பதிவேடுகள் அரசு துறைகளுக்கு மிக நன்முறையில் பயன்படுகின்றன. வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான படிவங்களை அச்சிட்டு அதற்கான கட்டணத்தை அந்நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கின்றன.

1. திருச்சிராப்பள்ளி
2. பெரம்பலூர்
3. அரியலூர்
4. கரூர்

ஆகிய மாவட்ட அரசிதழ்களை அச்சிட்டு வழங்குகின்றன.

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:**

இக்கிளை அச்சகம் 148 பணியாளர்களைக்கொண்டு ஒரு கிளை மேலாளரின்கீழ் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் அரசுத் துறைகளான ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, ஓய்வூதியம், வனத் துறை ஆகியவற்றிற்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் முதலியவற்றை அச்சிட்டு வழங்குகின்றது.

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள், முக்கிய சிறப்புச் செய்தி, செய்தி அறிவிப்பு வெளியீடுகள் இந்த அச்சகத்திலிருந்து வெளியிடப்படுகின்றன:-

1. இராமநாதபுரம்
2. கன்னியாகுமரி
3. சென்னை
4. காஞ்சிபுரம்
5. திருவள்ளூர்
6. திருவண்ணாமலை
7. தஞ்சாவூர்



8. புதுக்கோட்டை
9. தூத்துக்குடி
10. திருவாரூர்
11. நாகப்பட்டினம்
12. சிவகங்கை

2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் இவ்வச்சக மேம்பாட்டிற்காக ரூ.51.25 இலட்சம் செலவில் நவீன அச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்:**

114 பணியாளர்களைக் கொண்ட இக்கிளை அச்சகம் ஒரு கிளை மேலாளரின்கீழ் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பின்வரும் துறைகளுக்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:-

1. வேளாண்மை
2. பொதுப் பணி
3. காவல்
4. தீயணைப்பு
5. தேசிய மாணவர் படை
6. வனம்
7. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு
8. கால்நடை பராமரிப்பு
9. மருத்துவம்
10. தொழில் மற்றும் வணிகம்
11. கூட்டுறவு
12. புள்ளியியல்

இவ்வச்சகத்தில் விழுப்புரம், வேலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் 1-1-2002 முதல் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், சேலம்:**

120 பணியாளர்களைக்கொண்டு ஒரு கிளை மேலாளரின்கீழ் இவ்வச்சகம் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கான படிவங்கள் ஆகியவை இவ்வச்சகத்திலிருந்து அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

நிலைப்படுத்தப்படாத 'எ' படிவங்கள் மற்றும் சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம், சென்னை:**

ஒரு துணை இயக்குநரின்கீழ் 192 பணியாளர்களைக்கொண்டு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம் இயங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும அச்சகப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கும் மைய முகவர் அமைப்பாக இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எழுதுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் மத்திய அரசு நிதி உதவி பெற்று அவை தொடர்பான திட்டங்களை அமலாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் காகிதம் மற்றும் அட்டைகள் போன்ற எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்ட எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.927 இலட்சம் ஆகும். மேலும், ரூ.2465 இலட்சத்துக்கான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகத்திற்கு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.



31-12-2001 வரை கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்ட எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.603 இலட்சம் ஆகும். மேலும் மார்ச் 2002 வரை ரூ.14 கோடிக்கான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் நிதி ஆண்டிற்குத் தேவையான எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.25 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை:**

அரசு வெளியீடுகளை விற்பனை செய்வதற்கென சென்னை அண்ணாசாலையில் ஓர் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர் நீதிமன்றக் கிளை அச்சகத்தில் ஒரு கிளை விற்பனை நிலையமும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின்கீழ் இயங்கி வருகின்றன. இவ்விற்பனை நிலையங்கள் மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இது இயங்குகிறது. அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அரசு வெளியீடுகள் விற்பனை மூலம் ஏப்ரல் 2001 முதல் 31-1-2002 வரையில் ரூ.12 இலட்சமும், அரசிதழில் பெயர் மாற்றம் வெளியீட்டிற்காக ரூ.23.00 இலட்சமும் அரசிற்கு வருவாய் கிடைத்துள்ளது.

**அச்சுப் பணிகள்:**

தலைமைச் செயலகம், துறைத் தலைமையகங்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்கான அச்சுப் பணி தலையாய மறைபொருள் பணிகளும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், சிறப்பு மறைபொருள் அறிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், வாக்குச்சீட்டுகள், பரிசுச்சீட்டுகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளும் அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டிற்கு அரசு அச்சகங்களுக்கு 54.2 கோடி அச்சு அழுத்தங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு 51.4 கோடி அச்சு அழுத்தங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

**தொழிலாளர் நலன்:**

அரசு அச்சகப் பணியாளர்களுக்கென, சென்னை, தண்டையார்பேட்டையில் 300 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தொழிலாளர் நல அலுவலர், உதவித் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சுகாதார மேற்பார்வையாளர், அரசு மைய அச்சகம், உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், இயக்ககம் ஆகிய இடங்களில் உள்ள தங்கும் அறை, உணவறை மற்றும் சைக்கிள் நிறுத்தும் இடம் ஆகியவைகளின் தூய்மைப் பணிகளைக் கவனித்து வருகிறார். அரசு மைய அச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள இயக்ககம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து மருத்துவ உதவி அளித்து வருகிறார்.

அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேநீர் மற்றும் ரொட்டி படி பிரதிமாதம் ரூ.50 வழங்கப்படுகிறது. இது தவிர, ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும், பால்படியாக நாளொன்றுக்கு ரூ.2 வழங்கப்படுகின்றன.

இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மகளிர் தொழிலாளர்களின் வசதியைக் கருதி, மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தைகள் காப்பகப் பணியாளர் குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசுச் செலவில் பால், பிஸ்கட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு அதற்காக தையற்கூலி ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு ஜோடிக்கு ரூ.100 வீதம் ரூ.300 வழங்கப்படுகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மூன்று பாலியஸ்டர் புடவைகளும் ரவிக்கைத் துணியும் ரவிக்கை தைப்பதற்கான தையற்கூலியாக ஒரு ரவிக்கைக்கு ரூ.20 வீதம் ரூ.60



வழங்கப்படுகிறது. சென்னை அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்கெனச் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.1,00,000 வரையில் கடன் தொகை வழங்கி வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டி மற்றும் ஒரு நாட்குறிப்பேடு இலவசமாக வழங்கப்படுகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு, பணியாளர்கள் விவரம், அச்சு இயந்திரங்கள் மற்றும் புத்தகக் கட்டுமான இயந்திரங்கள் விவரங்கள், 2001-2002 ஆம் ஆண்டிற்கான அரசு அச்சகங்களின் செயலாக்க இலக்குகள் மற்றும் சாதனைகள் கடந்த பத்தாண்டுகளில் அரசு அச்சகங்களில்பெறப்பட்ட அச்சழுத்தங்களின் விவரங்கள் ஆகியவை அட்டவணைப்படுத்தப்பட்டு பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்:**

1831 ஆம் ஆண்டு குறைந்தஅளவு பணியாளர்களைக்கொண்டு தொடங்கப் பெற்ற அரசு அச்சகம் தனது பணியினை மிகச்சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மாறிவரும் புதிய உத்திகளைக் கருத்தில் கொண்டு அச்சுத் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் முன்னுரிமை உணரப்பட்டுள்ளது. ஒரு தொலைநோக்கு கண்ணோட்டத்தின் அடிப்படையில் அரசு அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

இத்துறையில் உள்ள அதிகப்படியான மனித ஆற்றல் சக்தியினைக் கொண்டு நவீன அச்சு இயந்திரங்களை அரசு அச்சகங்களில் நிறுவி தனியார் அச்சுப் பணிகளையும் வர்த்தக ரீதியாகச் செய்து கொடுக்க ஆராயப்பட்டு வருகிறது.

## அட்டவணை—அ

### திருவாக அமைப்பு






## அட்டவணை—ஆ

### 31-03-2002 முடிய பணியாளர்களின் எண்ணிக்கை

| வரிசை எண் | அலகு | அதிகாரிகள் | | அலுவலக பிரிவு | மேற்பார்வை யாளர் | தொழில் நுட்பப் பணியாளர் | மொத்த பணியாளர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஏ பிரிவு | பி பிரிவு | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | இயக்ககம் | 6 | 5 | 149 | 6 | 39 | 205 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 1 | 1 | 57 | .. | 133 | 192 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 6 | 20 | 162 | 100 | 1,695 | 1,983 |
| 4. | அரசு கிளை அச்சகம், சென்னை-104 (உயர் நீதிமன்ற வளாகம்) | 1 | 3 | 13 | 10 | 183 | 210 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை | 1 | 2 | 18 | 8 | 184 | 213 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம் | 1 | 1 | 14 | 8 | 96 | 120 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி | .. | 2 | 11 | 8 | 114 | 135 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | .. | 2 | 12 | 4 | 130 | 148 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | .. | 2 | 7 | 7 | 98 | 114 |
| | மொத்தம் .. | 16 | 38 | 443 | 151 | 2,672 | 3,320 |

## அட்டவணை—இ

### 2001 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரம்

(ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2002 வரை)

| வரிசை எண் (1) | அச்சகத்தின் பெயர் (2) | அச்சு அழுத்தங்கள் ஆர் ஏ2 (கோடிக் கணக்கில்) (3) | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை–79 | 25.9 | 19.8 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104 | 6.9 | 8.7 |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | 8.9 | 9.4 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் | 5.8 | 6.5 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 2.4 | 2.6 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 2.4 | 2.3 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 1.9 | 2.1 |
| | மொத்தம் .. | 54.2 | 51.4 |



## அட்டவணை—ஈ

### அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் விவரம்

அச்சுப் பிரிவு

| வரிசை எண் (1) | அச்சகத்தின் பெயர் (2) | வெப் ஆப்செட் இயந்திரம் ஐந்து யூனிட் (3) | நான்கு யூனிட் (4) | இரண்டு யூனிட் (5) | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர். ஏ1 அளவில்) (6) | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர் ஏ2 அளவில்) (7) | சிறிய ஆப்செட் அச்சு இயந்திரம் (8) | லெட்டர்பிரஸ் அச்சு இயந்திரம் (ஆர். ஏ1 அளவில்) (9) | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் (ஆர். ஏ2 அளவில்) (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம் சென்னை–79. | 2 | .. | 2 | 4 | 7 | 1 | 5 | 10 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104. | .. | 1 | .. | .. | .. | 5 | .. | .. |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை. | .. | .. | 1 | 5 | .. | .. | .. | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம். சேலம். | .. | .. | 1 | .. | .. | 1 | .. | 7 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 4 |
| 6. | அரசு கிளை அச்சகம். புதுக்கோட்டை. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | 5 |
| 7. | அரசு கிளை அச்சகம். விருத்தாசலம். | .. | .. | .. | .. | .. | 1 | .. | 5 |

## அட்டவணை-உ

### புத்தகம் கட்டுமானப் பிரிவு

| வரிசை எண் | அச்சகத்தின் பெயர் | வெட்டு இயந்திரம் | புத்தகம் தைக்கும் இயந்திரம் | கம்பி அடிக்கும் இயந்திரம் | கோடிடும் இயந்திரம் | சுழல் எண்ணிடும் இயந்திரம் | தாள் மடிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை–79. | 21 | 3 | 35 | 4 | 6 | 5 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை–104. | 1 | .. | 1 | .. | .. | .. |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை. | 4 | .. | 3 | .. | 3 | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம். | 3 | .. | 2 | 1 | 1 | .. |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 3 | .. | .. | 1 | 1 | .. |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 3 | .. | 2 | 1 | 1 | 1 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 2 | .. | 4 | 1 | 1 | .. |



## அட்டவணை-ஊ

